மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம்

**Directorate of Distance and Continuing Education**

# தமிழில் சிறார் இலக்கியம்

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி**

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
# TIRUNELVELI

**தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம்**

## Directorate of Distance and Continuing Education

# தமிழில் சிறார் இலக்கியம்

**முனைவர். நே.நிஷா நேவிஸ்**

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

தெ.தி. இந்துக்கல்லூரி,

நாகர்கோவில்.

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி**

**தொலைநெறித் தொடர்கல்வி இயக்கம்**


| **பாட எண்** | **பாடங்கள்** | **பக்க எண்** |
|---|---|---|
| 1 | அலகு – 1<br>வட்டார அறிமுகம் - பாடற்சூழலும் வகைமையும் | 1-32 |
| 2 | அலகு – 2<br>விளையாட்டுப் பாடல்கள் | 33-67 |
| 3 | அலகு – 3<br>பண்பாட்டுக் கருவூலம் | 68-86 |
| 4 | அலகு – 4<br>சுற்றுச் சூழலியல் | 87-102 |
| 5 | அலகு – 5<br>மொழி நடை | 103-147 |

# தமிழில் சிறார் இலக்கியம்

**கற்றல் நோக்கங்கள்**

- தமிழில் உள்ள சிறார் இலக்கியங்களை அறிதல், வகைப்படுத்துதல்.
- சிறார் இலக்கியப் படைப்பாளர்கள், இலக்கிய வகைகளை அறிதல்.
- அச்சு, வானொலி தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களில் இடம்பெறும் சிறார்க்கான படைப்புகளைக் கண்ணுறுதல்.
- சிறார் இலக்கியங்களைப் படைத்தல்.
- சிறார் இலக்கியங்களுக்கான உளவியலையும் அறக்கருத்துகளையும் அறிந்து கொள்ளுதல்.

**கற்றல் அடைவுகள்**

- தமிழில் வெளிவந்துள்ள சிறார் இலக்கியங்களை அறிந்து கொள்வர்.
- சிறார் இலக்கியப் படைப்பாளர்களை அறிந்துகொள்வர்
- சிறார் இலக்கியத்தின் இன்றியமையாத இடத்தையும் தனித் தன்மையையும் சமூகப் பங்களிப்பையும் உணர்வர்.
- சிறார் இலக்கியங்களின் பண்புகள், உத்திகள், அறக்கருத்துகளை மதிப்பிடுவர்
- தமிழில் சிறார் இலக்கியங்களைப் படைக்கும் ஆற்றல் பெறுவர்.

**அலகு – 1**

வட்டார அறிமுகம் - பாடற் சூழலும் வகைமையும்

**அலகு – 2**

விளையாட்டுப் பாடல்கள்

**அலகு – 3**

பண்பாட்டுக் கருவூலம்

**அலகு – 4**

சுற்றுச் சூழலியல்

**அலகு – 5**

மொழிநடை

**பாட நூல்கள்**

- நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகள் - முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய் காவ்யா பதிப்பகம், கோடம்பாக்கம், சென்னை.
- குழந்தை இலக்கிய வரலாறு – பூவண்ணன்.
- சிறுவர் இலக்கிய களஞ்சியம் - பூவண்ணன், பூவண்ணன் பதிப்பகம் கோவை.
- பேரியசாமித் தூரன், குழந்தைகள் கலைக்களஞ்சியம் (பத்துத் தொகுதிகள்)
- அம்புயம் யுவச்சந்திரா, குழந்தை இலக்கியமும் கவிஞர் வள்ளியப்பாவும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1989.

**குறிப்பு**

- சரியான விடையைத் தேர்வு செய்யும் வினா பாடநூலிலிருந்து மட்டும் கேட்கப்பட வேண்டும். “தமிழில் சிறார் இலக்கியம்” என்னும் பாடத்தில் இடம் பெற்றுள்ளக் கருத்துக்கள் பாட நூல்கள் மற்றும் பார்வை நூல்களிலிருந்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

# அலகு - 1

## 1.1 வட்டார அறிமுகம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வட்டங்களுள் ஒன்று சங்கரன்கோவில் வட்டம் (தாலுகா) ஆகும். அங்கு புகழ்மிக்க சங்கரநயினார் கோவில் கொண்டு இருப்பதால் இப்பெயர் பெற்றுள்ளது. இக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடித்தபசு நிகழ்ச்சி மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. சங்கரன்கோவில் வட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள ஊர் தேவர்குளம் ஆகும். தேவர்குளம், மேல் இலந்தைக்குளம், வன்னிக்கோனேந்தல் போன்ற கிராமங்களையும், மூவிருந்தாளி, நரிக்குடி, சிற்றூர்களையும் இணைத்து தேவர்குளம் வட்டாரமாக உள்ளது. இக்கிராமங்களுள் தேவர்குளம் பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் பெரிய கிராமமாக உள்ளதால், இப்பகுதிகள் தேவர்குளம் வட்டாரமாகக் கருத்தில் கொள்ளப்படுகிறது. இவ்வூர்களில் வாழும் மக்கள் இனம், வழிபாட்டு முறைகள், தொழில், கல்வி, பழக்க வழக்கம், நம்பிக்கைகள் ஆகியன பெரும்பாலும் ஒத்த நிலையிலே காணப்படுகின்றன. அதனடிப்படையில் அப்பகுதியிலுள்ள சிறுவர் வாய்மொழி வழக்காறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**தேவர்குளம்**

திருநெல்வேலி – சங்கரன்கோவில் நெடுஞ்சாலையின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது இவ்வூர். முற்காலத்தில் இவ்வூரில், மேல் உலகில் உள்ள தேவர்கள் வந்து வாழ்ந்தனர் என்ற நம்பிக்கை அடிப்படையிலும், தேவர் சமுதாயத்தினர் அதிகமாக வாழ்கின்ற பகுதி என்பதாலும் தேவர்குளம் எனப் பெயர் பெற்றது என்பர்.

**மேல இலந்தைக்குளம்**

தேவர்குளம் - கயத்தார் செல்லும் வழியில் தேவர்குளத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இக்கிராமம். இந்த ஊரின் தென்மேற்குப்பகுதியில் 3 கி.மீ நீளமும் 2 கிமீ அகலமும் கொண்ட குளம் ஒன்று அமைந்துள்ளது. இந்தக் குளத்தில் இலந்தை செடிகள் அதிகம் உள்ளதால் இந்த ஊருக்கு இலந்தைக்குளம் எனப் பெயர் வந்தது. இக்குளத்தில் சேமிக்கப்படும் மழை நீர் விவசாயத்துக்கு மிகவும் பயனுடையதாக உள்ளது.

**வன்னிக்கோனேந்தல்**

தேவர்குளத்தில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இவ்வூர். வன்னியர் - செட்டியார். செட்டியார்கள் அதிகமாக இருந்து வியாபாரம் செய்த பகுதி என்பதால் இப்பெயர் பெற்றுள்ளது. மற்றொரு கருத்தாக வன்னிக்கோனேந்தல் - வன்னி என்பது ஒரு வகையான மரம் ஆகும். கோ என்பது அரசன் எந்தல் என்பது ஆட்சியைக் குறிக்கும். அதாவது மரங்கள் சூழ்ந்த பகுதியில் ஒரு அரசன் ஆட்சி செய்ததால் இப்பெயர் பெற்றது.

**மூவிருந்தாளி**

வன்னிக்கோனந்தலில் இருந்து 5 கிலோ மீட்டர் கிழக்கில் உள்ளது இக்கிராமம். மூவர் இருந்து ஆளுகை செய்த இடம் என்றும், மூன்று விருந்தினர் வந்து சென்ற இடம் என்றும் மூவிருந்தாளி என்னும் பெயர்வரக் காரணம் கூறப்படுகிறது.

**கல்வி நிலை**

தேவர்குளம் வட்டாரப் பகுதி மக்கள் பெரும்பான்மையினர் கல்வி கற்றுள்ளனர். இவ்வட்டாரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் தொடக்க, நடுநிலை பள்ளிகள், ஆங்கில வழிப் பள்ளிகள் பலவும், மேலஇலந்தைக்குளத்தில் தனியார் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், வன்னிக்கோனந்தலில் அரசினர் மேல்நிலைப்பள்ளி ஒன்றும் அமைந்திருப்பதால் இப்பகுதி சிறுவர்கள் அனைவரும் கல்வி அறிவு பெறும் வாய்ப்பு பெற்றுள்ளனர்.

**பொருளாதார நிலை**

மழையை நம்பியே பெரும்பகுதி மக்கள் வாழ்கின்றனர். பருவமழைக்கு ஏற்ற நன்செய், புன்செய் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. கல்வி கற்ற பலர் அரசு அலுவலகங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் பணி புரிகின்றனர். பெண்கள் பெரும்பாலும் தீப்பெட்டித் தொழில், பீடித் தொழில், பெட்டி முடைதல் போன்ற சிறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். மழை பொய்த்த காலங்களில் வெளி மாவட்டம், வெளிமாநிலங்களுக்குச் சென்று வியாபாரம் செய்கின்றனர்.

**சுகாதார நிலை**

தேவர்குளம் சுற்று வட்டாரக் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் இப்பகுதி மக்கள் நோயின்றிக் காக்கப்படுகின்றனர்.

## சமய வாழ்வு

தேவர்குளம் வட்டாரத்தைச் சார்ந்த மக்கள் பெரும்பான்மையினர் சிறுதெய்வங்களை வழிபடுகின்றனர். ஒவ்வொரு கிராமங்களிலும் 10க்கும் மேற்பட்ட சிறுதெய்வக் கோயில்களும், பெருந்தெய்வங்களான சிவன், விநாயகர், முருகன் போன்றோருக்குக் கோவில்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவரவர் சாதிகளுக்கென தனிக்கோயில்களும் அமைந்துள்ளன. இப்பகுதியில் பங்குனி, சித்திரை, ஐப்பசி, ஆவணி போன்ற மாதங்களில் கோவில்களில் கொடை விழாக்கள் நிகழ்த்தப்படுகின்றன. இக்கிராமங்களில் பரவலாக வாழும் கிறிஸ்தவர்களுக்கென தனி ஆலயங்களும் உள்ளன.

## நாட்டுப்புற வழக்காறுகள்

நாட்டுப்புற இலக்கியம் மண்ணோடு பிணைந்ததாக மக்களின் உண்மையான வாழ்வை எடுத்துரைப்பனவாக உள்ளன. நாட்டுப்புறப் பாடல்கள் கிராமத்து மக்களால் நீண்டகாலமாக வாய்மொழியாகப் பாடப்பட்டு வருபவையாகும். மனதை மயக்கும் இவ்விசைப் பாடல்கள் எளிமையாகவும் இனிமையாகவும், கற்பனை வளமும், கவிநயமும் பொதிந்தனவாக அமைந்துள்ளன. "இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி" என்றால் ஏட்டில் எழுதப்படாத வாய்மொழிக் கவிகளாக வலம் வரும் இந்நாட்டுப்புற வழக்காறுகள் "இயற்கை அன்னை தன்னை முகம் பார்க்கத் தேர்ந்தேடுத்த தெளிவான கண்ணாடி" எனலாம். மனிதனின் வாழ்வியலோடு இணைந்ததாக வெளிப்படும் இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களைத் தாலாட்டுப்பாடல், விளையாட்டுப்பாடல், காதற்பாடல், தொழிற்பாடல், சமய நிலைசார் பாடல், ஒப்பாரிப் பாடல் எனப் பொதுவாகப் பிரித்து வகைப்படுத்தலாம். நாட்டுப்புறப் பாடல்களில் ஓசை ஓங்கியிருக்கும், உணர்ச்சி வெளிப்பட்டிருக்கும், தொடை நயங்கள் சொற்களில் ஒளிந்திருக்கும். எனினும் இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் காணப்படுகிறது.

## தோற்றம்

நாட்டுப்புற அல்லது வாய்மொழி இலக்கியம் ஒரு நிகழ்ச்சியின் பிரதிபலிப்பை எடுத்துக்காட்டுகின்ற முறையில் ஒருவரோ அல்லது பலரோ செவிவழியாகப் பாடப்படுகின்ற பாடல்களைக் கதைகளைக் கேட்டுத் தங்களுக்கு ஏற்றவகையில் சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றிக் கொண்டு பாடல்களை – கதைகளை உருவாக்குகின்றனர்.

வழக்காறு என்பது வாய்மொழியாக வரும் பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. எனவே நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல்- Folklore – என்ற சொல்லுக்கு இணையானது என்று தே.லூர்து போன்ற நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆயினும் பொதுவாக Folklore – என்பதற்கு பேரா.சு. சண்முகசுந்தரம் மொழியாக்கம் செய்து நாட்டுப்புறவியல் என்ற சொல்லைப் பயன்படுத்தும் வழக்கமே உள்ளது.

Folklore – என்னும் சொல் இரண்டு சொற்களின் கூட்டுச் சொல்லாகும். Folk என்பது உழைக்கும் மக்களைக் குறித்துப்பின் ஏட்டறிவில்லாத பாமர மக்களைக் குறிக்கும். குறியீட்டுச் சொல்லான lore என்பது மரபுச் செய்தித் தொகுதி என்ற பொருளைத் தந்து நிற்கிறது. Folklore என்ற இச்சொல்லுக்கு இணையாகத் தமிழ்மொழியில் ‘நாடோடி இலக்கியம்’, ‘நாடோடி கலை’, ‘நாட்டுப்புறப்பாடல்கள்’, ‘நாடோடிப் பாடல்கள்’, ‘வாய்மொழி இலக்கியம்’, ‘நாட்டுப் பண்பாட்டியல்’, ‘நாட்டார் வழக்காறு’, ‘நாட்டுப்புற இலக்கியம்’, ‘நாட்டார் வழக்காற்றியல்’ என்ற பல்வேறு தொடர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறவியலை வரையறை செய்வதில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும், நாட்டுப்புறவியல் அறிஞர்கள் ஐந்து பண்புகளைத் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். அவையாவன,

1. வாய்மொழியாகப் பாடப்படுவது
2. மரபு வழிப்பட்டது
3. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைவது
4. ஆசிரியர் அற்றது
5. ஒரு வித வாய்ப்பாட்டுக்குள் (மெட்டு) அடங்குவது

என்ற பண்புகளில் நாட்டுப்புறவியலை வரையறை செய்யும்பொழுது கருத்து ஒற்றுமை நிலவி வருவதைக் காணலாம். புற அளவைகளால் நாட்டுபுறவியலை வரையறை செய்வதைக்காட்டிலும் அக அளவைகளால் வரையறை செய்தலே சிறந்தது என்று தே.லூர்து கூறுகிறார்.

**வரைவிலக்கணம்**

நாட்டுப்புறவியலுக்கு எனத் தனி இலக்கணம் கூற இயலாது. ஆயினும் சில நாட்டுப்புறவியல் அறிஞர்களின் கருத்துகள் ஈண்டு நோக்கத்தக்கது.

'இயற்கை அன்னை தன்னை முகம் பார்க்க தேர்ந்தெடுத்த தெளிவான கண்ணாடி' நாட்டுப்புறப்பாடல்' என சு.சக்திவேல் குறிப்பிடுகிறார்.

'யாரும் எழுதியதைப் படிக்காமல் தாம் பாடியதையும் எழுதி வைக்காமல் தம்முடைய தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக மக்களால் பாடப்பட்ட வாய்மொழிக் காவியமே நாட்டுப்புறப் பாடல்கள்'.

'நாட்டுப்புறப் பாடல்கள் என்பவை பெரும்பாலும் நாட்டுப்புற மக்களிடையே தொன்றுதொட்டு வழங்குபவை. அவற்றை நாட்டுப்பாடல்கள் எனக் கூறலாம்' எனப் பொன். கோவிந்தசாமி தம் ஆய்வுக்கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.

**நாட்டுப்புறப்பாடல் வகைகள்**

நாட்டுப்புறப்பாடல்கள் மனித வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடப்படுகின்றன. அவை வழங்கும் சூழல்கள், வெளிப்பாட்டு முறை, உள்ளடக்கம், வடிவம் ஆகிய பல காரணங்களின் அடிப்படையில் நாட்டுப்புறப்பாடல்களைப் பலரும் பல்வேறு கண்ணோட்டத்துடன் வகைப்பாடு செய்துள்ளனர். இவ்வகையில் அருணாசலம், கி.வா ஜெகந்நாதன் ஒரு வகையாகவும், ஆறு. அழகப்பன், வானமாமலை, கிருஷ்ணசாமி, வரதராசன் போன்றோர் ஒரு வகையாகவும், சண்முகசுந்தரம், ஆறு. ராமநாதன், சு.சக்திவேல் போன்றோர் வேறு வகையாகவும் வகைப்படுத்தியுள்ளனர்.

'நாட்டுப்புறப்பாடல்கள் ஒரு திறனாய்வு' என்ற நூலில் டாக்டர் ஆறு.அழகப்பன் நாட்டார் பாடலை 6 வகைப்படுத்துகிறார்.

1. குழந்தைப் பாடல்கள்
2. பக்தி பாடல்கள்
3. தொழில் பாடல்கள்
4. கொண்டாட்டப் பாடல்கள்
5. உணர்ச்சிப் பாடல்கள்
6. பன்மலர்ப் பாடல்கள்

சு.சண்முகசுந்தரம் 'தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்' என்ற நூலில்நாட்டுப்புறப் பாடல்களை 9 ஆக வைப்படுத்துகிறார்.

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. தொழில் பாடல்கள்

4. காதல் பாடல்கள்
5. மணவாழ்த்து
6. பக்திப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. ஆட்டப் பாடல்கள்
9. கதைப் பாடல்கள்

'நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு' என்ற நூலில் சு.சக்திவேல்.

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. தொழில் பாடல்கள்
4. காதல் பாடல்கள்
5. கொண்டாட்டப் பாடல்கள்
6. பக்தி பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. பன்மலர்ப் பாடல்கள்

என எட்டு வகைப்படுத்துகிறார்.

**வட்டார நாட்டுப்புறப் பாடல்கள்**

தேவர்குளம் வட்டாரம் 'சிறுதெய்வ வழிபாடுகள்' நிறைந்த பகுதியாகக் காணப்படுவதால், கொடைவிழாக்களில் பாடப்படும் முளைப்பாரிப் பாடல்கள், கும்மிப்பாடல்கள், தெய்வப்பாடல்கள் (குல தெய்வம், இனதெய்வம்) போன்றவற்றை வழிவழியாகப் பாடி வருகின்றனர்.

விவசாயம் மட்டுமே முதன்மைத் தொழிலாக இருந்து வந்த தேவர்குளம் வட்டாரத்தில், உழவுப் பாட்டும், ஏற்றப்பாட்டும், நாற்றுநடுதல் மற்றும் அறுவடைப்பாடல்களும் பாடப்பட்டுள்ளன.

தாலாட்டுப் பாடலைப் போன்றே ஒப்பாரிப் பாடல்களையும் வயதான முதியவர்கள் மட்டுமே இப்பகுதியில் பாடுகின்றனர். தங்கள் உறவுகளை இழக்க நேரிடும் காலங்களில் இயல்பாகவே முதியவர்கள் ஒப்பாரி வைத்து தங்கள் துயரங்களை வெளிப்படுத்துகின்றனர். இவை தவிர தேவர்குளம் வட்டாரம் மட்டுமல்லாமல், வெளியிடங்களுக்குச் சென்று மாராடிப் பாடல், ஆட்டப்பாடல்கள் பாடும் குழுவினரும் தேவர்குளத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

எல்லோரும் விரும்பும் பருவமும், அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் பருவமும் குழந்தைப் பருவம் ஆகும். அக்குழந்தைப் பருவத்தில் குழந்தைகளாலும், மற்றவர்களாலும் பல பாடல்கள் பாடப்படுகின்றன. குறிப்பாகச் சிறுவர்கள் விளைபாடும்போது பாடும் பாடல்கள் சிறுவர் பாடல்கள் என வழங்கப்படுகின்றன.

நாட்டுப்புற வழக்காறுகளுள் பெரியவர்களால் வழங்கப்படும் பழமொழியும், சிறியவர்களுக்காகப் பெரியோராலும், சிறியவர்களாலும் வழங்கப்படும் ‘விடுகதை’ என அழைக்கப்படும் ‘அழிப்பாங்கதை’யும் இவ்வட்டாரத்தில் இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

**சிறுவர் பாடல்கள்**

நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகளில் குழந்தைகள் பாடல்கள் அல்லது சிறுவர் பாடல்கள் என்பதும் ஒன்று. இங்கு சிறுவர் என்னும் சொல் ‘அர்’ என்னும் பலர்பால் விகுதியைப் பெற்று இருப்பதால் ஆண், பெண் என இருபாலரையும் குறிக்கும் சொல்லாகக் கருதப்படுகிறது. சிறுவயதிலேயே குழந்தைகள் உள்ளநிலை, அறிவுநிலை, ஆற்றல் நிலை, நோக்கு நிலை போன்ற பல நிலைகளில் வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்குடன் இப்பாடல்கள் பாடப்பெறுகின்றன. இனிய ஓசை, விளையாட்டு, கல்வி, தெய்வ நம்பிக்கை, வினா விடைகள், அஃறிணை உயிர்களிடத்தில் அன்பு ஆகியன இப்பாடல்கள் மூலம் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இவை தவிர சிறுவர்கள் தங்களுக்கு ஓய்வு கிடைக்கும்போது ஒன்றாக இணைந்து அவரவர்கள் கற்பனைக்கேற்ப பலவிதமான பாடல்களைப் பாடுகின்றனர். இதன் மூலம் அவர்களுக்குச் சிறுவயது முதலே சுயமாகச் சிந்தித்து ஒன்றைப்படைக்கும் ஆற்றலும், மிதமிஞ்சிய கற்பனை சக்தியும் உண்டாகிறது என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் பெரியவர்களோடு சிறுவர்களை ஒப்பிடுகையில் சிறுவர்களே காலத்தையும், நேரத்தையும் சரியான முறையில் ஆக்கப்பூர்வமான செயல்களில் செலவிடுகின்றனர்.

**பாடற்பொருள்**

‘குழந்தைப் பாடல்களில் வாழ்க்கைத் தொடர்பான பொருள் இருக்கும் என்று எதிர்பார்த்தால் அது கிடைக்காத ஒன்றாகும்’ என்பார் ஆறு.அழகப்பன்.

‘குழந்தைகளுக்கு வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்கும் தாய்மார்கள் அதற்கென்று சில பாடல்களைச் சொல்லித் தருவார்கள். அந்தப் பாட்டிலே பொருள்

தொடர்போ அபூர்வமான கருத்தோ இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை?' என்று நாடோடி இலக்கியம் குறிப்பிடுகிறது. இத்தகைய கருத்துகள் நிலவினாலும், குழந்தைகளின் உடல் மற்றும் உள்ள வளர்ச்சிகளின் நோக்கோடு பாடப்படும். இப்பாடல்களின் பின்னால் மெய்யான பொருள் பொதிந்துள்ளது என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

'எந்தக் குழந்தையும்
நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே – அவர்
நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே'

என்ற திரையிசைப் பாடலில் அன்னையின் வளர்ப்பில் உள்ள பொறுப்பைக் கவிஞர் சுட்டியுள்ளார். ஆகவே ஒரு குழந்தையைச் சிறந்த குடிமகனாய் உருவாக்குவதில் பெற்றோர்க்குப் பெரும் பங்குண்டு.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்கிறது புறநானூற்றுப் பாடல். அப்படிச் சான்றோனாக்க விரும்பும் பெற்றோர் தம் குழந்தையை வளர்க்கின்ற இப்பருவத்தில் மிகச் சரியான கருத்துகளைக் கற்பிக்க வேண்டும். இதன் மூலம் குழந்தைகளுக்கு 'இளமையிலேயே நல்லறிவு புகட்டுதல்' சாலச்சிறந்தது. பெற்றோர்களைத் தாண்டி வெளி உலகில் சிறுவர்கள் உறவாடும் உறவு, அவர்தம் விளையாட்டு நண்பர்களே. இச்சூழ்நிலையில், தாம் காணும் சிறுவர் உலகில் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்கின்றனர். அச்சிறுவயதில் கற்றுக்கொள்ளும் கருத்துகள், பசுமரத்தாணி போல குழந்தைகளின் மனதில் பதியும். இதன் அடிப்படையில் அமைந்ததே நாட்டுப்புறச் சிறுவர் வழக்காறுகள்.

**இலக்கியங்களில் சிறுவர் பாடல்கள்**

இந்திய மொழிகளில் தமிழ்மொழியில் மட்டும் தான் சிறுவர் இலக்கியம் மிகப் பெரும் அளவில் விளங்கி வருகிறது. 16 ஆம் நூற்றாண்டில் ஔவையார் தந்த 'ஆத்திச்சூடி' குழந்தை இலக்கியத்தில் முதல் நூல் என்பதுடன், அதனைத் தொடர்ந்து அவருடைய கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை, கல்வி ஒழுக்கம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தொடர்ச்சியாக, அதிவீராம பாண்டியனார் தந்த "வெற்றி வேட்கை,

உலக நீதி” கவிமணியின் “மலரும் மாலையும்” பாரதியின் “பாப்பா பாட்டு” பாரதிதாசனின் “இளைஞர் இலக்கியம்” சிறார் இலக்கியத்தின் முன்னோடிகளாகத் திகழ்கின்றன.

நாட்டுப்புறப் பாடல் வகையான சிறுவர் பாடல்கள் சங்க இலக்கியம் முதல் இன்றுள்ள இலக்கிய வகை வரை ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. சங்க கால மக்கள் தங்கள் விளையாட்டுகளான கழற்சி, ஊசல், பந்தாடல், நீராடல் போன்ற விளையாட்டுகளின் பொழுது பாடல் பாடி மகிழ்ந்தனர். இதனை அக்கால இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது.

**சிலம்பு**

‘வீங்கு நீர்வேலி உலகாண்டு’
‘பின்னும் முன்னும் எங்கணும்’
‘ஓரை வரைம் பதின்மர் உடன்றெழுந்து’

எனும் வரிகள் சிலப்பதிகாரத்தில் முறையே அம்மானைவரி, கந்துகவரி, ஊசல்வரி ஆகிய வரிப் பாடல்களில் இடம் பெறுவனவாகும். இவை முறையே கழற்சிப் பாடலையும், பந்தாட்டப் பாடலையும், ஊசல் பாடலையும் நினைவூட்டுவனவாக உள்ளன.

**சிற்றிலக்கியம்**

‘அழகு தழைந்தகல் யாணசவுந்தரி
ஆடுக அம்மனயே’

என்ற மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடல் அம்மானைப் பாடலையும்

‘தையல் நாயகி மருவு தெய்வ நாயகன் மதலை
சப்பாணி கொட்டியருளே’

என்ற முருகன் பிள்ளைத்தமிழ் பாடல் சப்பாணி பருவத்தையும் நினைவூட்டுகின்றன.

**பக்தி இலக்கியம்**

தம் பாசுரங்களில் பக்தியோடு, பண்பாட்டையும் பதிவு செய்துள்ள பெரியாழ்வார், கண்ணனோடு விளையாட அம்புலியை அழைக்கும் காட்சியைக் காண முடிகிறது.

‘அஞ்சன வண்ணனோடு

ஆடல் ஆட உறுதி யேல்
மஞ்சில் மறையாதே,
மாமதி! மகிழ்ந்து ஓடிவா!'

**தற்கால இலக்கியம்**

'வெள்ளை நிறத்தோடு பூனை – எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்'

என்று பாரதி குழந்தைகளுக்கு என்று பூனை பாடலைப் பாடி மகிழ்கிறார்.

'வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு'

என்று அழ.வள்ளியப்பன் அவர்கள் சிறுவர்களை இன்பமூட்டுகிறார்.

'பச்சை கிளியே வாவா
பாலுஞ் சோறும் உண்ணவா'

என்று தேசியவிநாயகம் பிள்ளை அவர்கள் பச்சை கிளியை அழைக்கிறார். இவை அல்லாது புதுக்கவிதை, நாவல், சிறுகதை, கட்டுரைகள் எனப் பல படைப்புகளிலும் சிறுவர் பாடல்கள் பரவலாகச் கட்டப் பெறுகின்றன.

**நாட்டுப்புறச் சிறுவர் பாடல்கள்**

ஏட்டிலக்கியங்களில் ஏற்றம் பெறாத இச்சிறுவர் இலக்கியம், வாய்மொழி இலக்கியமான நாட்டுப்புற வழக்காற்றில் அதிக முக்கியத்துவம் பெற்றவைகளாகத் திகழ்கின்றன.

கி.வா.ஜெகந்நாதன் தமது 'குழந்தை உலகம்' என்ற நூலில் 52 சிறுவர் பாடல்களைத் தொகுத்துத் தந்துள்ளார். 'திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு' என்ற சண்முகசுந்தரத்தின் நூலில் 51 சிறுவர் பாடல்கள் இடம்பெறுகின்றன. இவர்களைத் தொடர்ந்து 'ஏட்டில் எழுதாக் கவிதைகள்' என்ற நூலில் அன்னகாமு 33 சிறுவர் பாடல்களையும், 'நாட்டார் இலக்கியமும் பண்பாடும்' என்ற நூலில் ஆறுமுகம் 5 சிறுவர் பாடல்களையும் தொகுத்துத் தந்துள்ளனர். மேலும், 'தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்' என்ற நூலில் சண்முகசுந்தரம்

30 பாடல்களையும், ‘நாட்டுப்புறப் இயல் ஆய்வு’ என்ற நூலில் சக்திவேல் மூன்று பாடல்களையும், நாட்டுப்புற இயல் ஆய்வு என்ற நூலில் அறு. ராமநாதன் ஐந்து பாடல்களையும் தொகுத்துள்ளனர். இவை தவிர முனைவர் பட்ட ஆய்வுகளுக்காகச் செய்யப்பெறும் ‘நாட்டுப்புறவியல் ஆய்வின்’ விளைவாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வழக்கில் உள்ள சிறுவர்பாடல்கள் பதிவிடப்பட்டு வருகின்றன.

## 1.2 சூழலும் வகைமையும்

ஒரு நாட்டுப்புற வழக்காறு எங்கு, எப்போது யாரால், யாருக்குச் சொல்லப்படுகிறது என்பது பற்றி அளிக்கப்படும் விளக்கமே சூழல் ஆகும்.

'ஓடித் திரிந்து விளையாடும் குழந்தைகளுக்குப் பாடும் இடம் சொல்ல முடியாது' என்று ஆறு.அழகப்பன் குறிப்பிடுகிறார். அவ்வாறே சிறுவர் பாடல்கள் வீடுகளிலும், வீதிகளிலும் சிறுவர் இருக்கும் எவ்விடங்களிலும் பாடப்படுகின்றன. காலையிலும், மாலையிலும் மட்டுமே ஓடி விளையாட வேண்டும் என்ற விதி சிறுவர்களுக்கு வகுக்கப்படாததால் நினைத்த எந்த நேரத்திலும் பாடல்கள் பாடப்படுகின்றன. மொத்தத்தில் சிறுவர்கள் தூங்கும் நேரம் தவிர மற்ற எல்லா நேரங்களிலும் பாடல்கள் பாடப்படுகின்றன.

**சிறுவர் பாடல்கள்**

சிறுவர் பாடல் என்பது சிறுவரை நோக்கிப் பாடுவதாக அமையாமல் சிறுவர் தாமே பாடுவதாக அமைய வேண்டும், இந்த உண்மையை அறிந்தவர்களும், இதைப்பிறருக்கு அறிப்பவர்களும் கூடத் தம்மை மறந்து சிறுவரைப் பார்த்து பாடிவிடுகிறார்கள் என்று ஆசிரியர் பூவண்ணன் கூறுகிறார்.

சிறுவர் பாடல்கள் பிறரால் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மையுடையது. ஈரடிப் பாடல்கள் முதல் நீண்ட பாடல்கள் வரை பாடப்படுகின்றன. சில பாடல்களில் வினா விடை சொற்களையும், ஆங்கிலச் சொற்களையும் இப்பாடல்களில் அதிகமாகக் காணமுடிகிறது. இப்பாடல்களுக்குப் பதவுரையோ, நயவுரையோ தேவையில்லை. இசையும், ஓசையும் இப்பாடல்களில் கலந்து நிற்கின்றன.

**சிறுவர் பாடல்கள் வகைகள்**

1. குழந்தைகளுக்காகப் பிறர் பாடுவன
2. குழந்தைகள் பாடுவன

என்ற இரு பிரிவின்கீழ் சிறுவர் பாடல்களை வகைப்படுத்தலாம்.

**குழந்தைகளுக்காகப் பிறர் பாடுவன**

ஒரு குழந்தையைப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் தாய் குழந்தையின் உடல் நலனில் மட்டுமல்லாமல் மன நலனிலும் அக்கறை கொண்டவளாகக் காணப்படுகிறாள். அதனால்தான் குழந்தைகளுக்கு உடற்பயிற்சி தரும் நேரங்களில் தாம் பாடும் பாடல்

வழியாக உள்ளப்பயிற்சியும் அளிக்கிறாள். குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே உடலையும் மனதையும் மேம்படுத்தும் விதத்தில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. 'சிறுவர் பாடல்களை வளரும் குழந்தைகளை வளர்க்கின்ற 'சத்துள்ள உணவுகள்' என்று சொல்லலாம். தாய்ப்பால் உடலை வளர்க்கிறது. இப்பாடல்கள் உடலையும் அறிவையும் வளர்க்கின்றன' என்ற ஆறு. அழகப்பனின் கருத்து ஈண்டு நோக்கத்தக்கது.

குழந்தைகளின் பெற்றோர்களும், உறவினர்களும் உடன்பிறந்தவர்களும் இவ்வகைப் பாடல்களைச் சிறுவர்களுக்காகப் பாடுகின்றனர். குழந்தைகளுக்காக மற்றவர்கள் பாடும்போது அவர்களும் குழந்தையோடு குழந்தையாக மாறிப்பாடுவர். குழந்தைகளின் மனம், அறிவு, விருப்பம் இவற்றிற்கேற்பவே இப்பாடல்கள் அமைந்து இருக்கும். வளரும் குழந்தைகளுக்கு தேகப்பயிற்சியோடு உள்ளப் பயிற்சியும், இயற்கை பற்றிய அறிவும், பிற வகையில் நீதி, பக்தி, வாழ்க்கை பற்றிய அறிவும் இப்பாடல்கள் வழி கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இதற்கு சான்றுகளாகச் 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு', 'கைவீசம்மா கைவீசு' போன்ற பாடல்களைக் கூறலாம்.

**சிறுவர்கள் பாடுவன**

குழந்தைகள் ஓடி ஆடி விளையாடும் சிறுவர்களாக மாறி வளர்கின்ற நிலையில் அவர்கள் பாடும் பாடல்கள் பல நிலைகளில் மாறுபடுகின்றன. இச்சிறுவர் பாடல்களை தி.நடராசன்,

1. விளையாட்டின் பொழுது பாடுவது
2. ஓய்வான பொழுது பாடுவது

என இருவகைப்படுத்துகிறார். இதே பாடல்களைப் பாடுவோரின் பால் அடிப்படையில் டாக்டர் சு.சண்முகசுந்தரம் நான்கு வகைகளாகப் பாகுபடுத்துகிறார்.

1. ஆண் குழந்தைகள் பாடும் பாடல்கள்
2. பெண் குழந்தைகள் பாடும் பாடல்கள்
3. இருவரும் இணைந்து பாடும் பாடல்கள்
4. இருவரில் யார் வேண்டுமானாலும் பாடும் பாடல்கள்

இவ்வகைப் பாடல்கள் குழந்தைகள் அறிவு வளர்ச்சி பெற்ற நிலையிலும், விளையாட்டுகளின் போதும் பாடப்படுகின்றன.

**பாடல் வகைகள்**

சிறுவர் பாடல்களைப் பாடப்படும் சூழலுக்கு ஏற்பவும், சிறுவர் சிறுமியர்களுக்கிடையே அப்பாடல்களினால் ஏற்படும் ஊடாட்டத்திற்கு ஏற்பவும் பல வகைப்படுத்தலாம்.

1. குழந்தை வளர்ச்சி நிலைப் பாடல்கள்
2. அறிவுத்திறன் பயிற்சிப் பாடல்கள்
3. கேலிப் பாடல்கள்
4. உடற்பயிற்சி நிலைப் பாடல்கள்

**குழந்தை வளர்ச்சி நிலைப் பாடல்கள்**

குழந்தைகளின் வளர்ச்சி நிலையில் மிகுந்த அக்கறையுள்ள பெற்றோரும், உறவினர்களும் அக்குழந்தையின் ஒவ்வொரு அசைவு நிலையிலும் அதனைக் கண்டு மகிழ்வர். அந்நிலைகளில் வளர்ச்சி நிலையில் அவர்கள் பலப் பாடல்களைப் பாடுகின்றனர்.

**கை அசைக்கும் பருவம்**

குழந்தைகள் பிறர் முகம் பார்த்து கைகளை அசைத்து மகிழ்ச்சியில் துள்ளும். அப்பருவத்தில் பெற்றோரும், மற்றோரும் பாடல்கள் பாடுவதுண்டு. உள்ளங்கையைப் பூபோல விரித்து வைத்து மெதுவாக அசைக்கச் சொல்லித்தருவர். அப்போது,

‘தாப்பூ தாமரப்பூ
தாயார் வீட்டுச் செண்பகப்பூ

மாம்பூ மகிழம்பு
மாமியார் விட்டு மல்லிகப்பூ!

என்று பாடுவர். இது குழந்தைகள் ‘டாட்டா’ காட்டுவதற்குப் பயிற்சியாகவும் அமைந்து விடுகிறது. மற்றொரு பாடலில் கை விரல்களை மூடி திறக்கும்படிச் செய்து.

‘கீரி கீரி நண்டு பிடி
கீரிபிள்ள நண்டு பிடி
பிடிச்ச நண்ட சட்டியில போட்டு
பின்னும் பின்னும் நண்டு பிடி!’

என்றும் பாடுவதுண்டு பெரியவர்கள் தங்கள் இரு கைகளையும் இணைத்து மலர் விரிந்து இருப்பதுபோல விரித்து வைத்து,

'மாக்குத்து மஞ்சக்குத்து
பிள்ளையார்க் குத்து
பிடிச்சாக் குத்து

குழந்தைகளைக் அக்கைகளுக்குள் குத்துவது போல செய்யச் செய்து, இறுதியில் குழந்தைகளின் கைகளைப் பிடித்துக்கொள்வர். மற்றொரு பாடலான,

'மாக்கொழுக்கட்ட
மஞ்சக் கொழுக்கட்ட
மாமியார் கொடுத்தா
பிடிக்கொழுக்கட்ட'

என்ற பாடலைப் பெரியவர்கள் பாடியவாறு, கைகளை விரித்திருக்கும் சிறுவர்களிடம் கொழுக்கட்டை கொடுப்பதுபோல பாவனை செய்வதுண்டு.

**தட்டாங்கிப் பருவம்**

குழந்தைகள் தட்டாங்கி கொட்டும் அழகைக் காணும் பெற்றோரும், உறவினரும் பாடல் பாடுவர்.

அப்பருவத்தில் குழந்தை விரும்பி உண்ணும் உணவுகள் பற்றியும் கூறுவர்.

'தத்தாங்கிக் கொட்டும் பிள்ள
தயிரும் சோறும் தின்னும் பிள்ள
அப்பம் சுட்டா தின்னும் பிள்ள
அவல் இடிச்சா மொக்கும் பிள்ள'

**செங்கீரைப் பருவம்**

சிறு குழந்தைகள் உணவு உண்ணும் பருவம் செய்கீரைப் பருவமாகும். அப்பருவத்தில் குழந்தைகளுக்கு பருப்போடு நெய்கலந்த உணவே அதிகம் ஊட்டப்படும். குழந்தைகளுக்கு சாதத்தை உருண்டை பிடித்து, இது அப்பாக்கு, அம்மாக்கு என ஊட்டினால் ஆர்வத்துடன் வாங்கி உண்ணும். இதை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளை மகிழ்விக்க அதன் உள்ளங்கையில் தங்கள் முழங்கையால் பருப்புக் கடைவது போல செய்து, 'பருப்புக் கட பருப்புக் கட' பாடலைப் பாடுவர்.

**சாய்ந்தாடும் பருவம்**

குழந்தைகளின் வளர்ச்சி நிலைகளுள் ஒன்று சாய்ந்தாடுதல் அதன் அழகைக் காண்போர்,

‘சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்கிளியே சாய்ந்தாடு’

என்று பாடி மகிழ்வர்.

**கைவீசும் பருவம்**

குழந்தைகளுக்கு உடற்பயிற்சி அளிக்கும் வகையிலும் உள்ளப்பயிற்சி வழங்கும் வகையிலும்,

‘கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு’

என்று பாடுவர்

**அழகு செய்வித்தல்**

குழந்தைக்குக் கண்ணில் மையிட்டு அழகு செய்து பார்க்கும் தாய்

கொண்டைக்குப் பூச்சூட்ட விரும்பி,

‘காக்கா காக்கா கண்ணுக்கு
மைக் கொண்டு வா
குருவிக் குருவிக் கொண்டைக்கு
பூக் கொண்டு வா’

தனக்குத் துணை செய்ய பறவைகளை அழைப்பதாய் அமைந்த பாடல் இது.

‘செண்பக மல்லிகையோட
செங்கழு நீர் இருவாட்சி
எண் பகர் பூவும் கொணர்ந்தேன்
இன்று இவை சூட்டவா’

என்று யசோதை செண்பகம், மல்லிகை, இருவாட்சி போன்ற மலர்களைக் கண்ணனுக்குச் சூட்ட வேண்டுமென்று விரும்பி கண்ணனை அழைப்பதாகப் பெரியாழ்வார் பாடியிருப்பது இந்நாட்டுப்புறச் சாயலே எனலாம்.

**வேடிக்கை விளையாட்டுப் பாடல்**

குழந்தைகளை மகிழ்விக்க வேண்டி பெரியவர்கள் குழந்தைகளிடம் வேடிக்கையான விளையாட்டுகளுன் பாடல்களைப் பாடுவர்.

**உப்பு மூட்டை**

'உப்பு மூட்டை' என்பது உறவின் முறையினரோ, பெரியவர்களோ அல்லது வயதில் மூத்த சிறுவர்களோ குழந்தையை முதுகில் தூக்கி அதன் இருகைகளையும் தங்கள் கழுத்தில் கட்டிக்கொள்வர்.

'உப்பு வேணுமா உப்பு
யாருக்கு வேணும் உப்பு,
உனக்கு வேணுமா
உனக்கு வேணுமா'

என ஒவ்வொருவரிடமும் கேட்டு, இறுதியில் 'எனக்கு வேண்டும்' என்று கூறுபவரிடம் 'எவ்வளவு வேணும்' எனக் கேட்பர். அவர்கள் ஒரு படி, இரண்டுப்படி என எத்தனைப் படி கேட்கிறார்களோ, அத்தனை முறை 'டா டா' எனச் சத்தம் கொடுப்பர். இதனைக் கண்டு குழந்தை ஆனந்தம் கொள்ளும்.

**ஆட்டுக்குட்டி**

குழந்தைகளை மகிழ்விக்க விளையாடப்படும் மற்றொரு விளையாட்டு ஆட்டுக்குட்டி விளையாட்டாகும். பெரியவர் யாரேனும் குழந்தையை ஆட்டுக்குட்டியைத் தூக்குவது போல இருகைகளாலும் தூக்கிக் கொண்டு ஒவ்வொருவரிடமும் சென்று 'ஆட்டுக்குட்டி வேண்டுமா' எனக் கேட்பர். வேண்டும் என்பவரின் கைகளில் 'இந்தாய் பிடிங்க' எனத் திடீரென குழந்தையைப் போடுவர். குழந்தை எதிர்பாரா நேரத்தில் கைமாறும் போது சற்றே அதிர்ந்து பின் மகிழ்ச்சி அடையும்.

பெரியோர் : ஆட்டுக்குட்டி வேணுமா ஆட்டுக்குட்டி?

மற்றவர் : எனக்கு வேண்டாம்!

பெரியோா : ஆட்டுக்குட்டி வேணுமா ஆட்டுக்குட்டி?

வேறொருவா் : எனக்கு வேண்டும்!

பெரியோா் : இந்தாப் பிடிங்க!

**யானை ஏற்றம்**

தாத்தா, தந்தை, மாமா, அண்ணன் என யாராவது ஒருவா் யானை போல மணடியிட்டுக் கொள்ள, தாயோ மற்றவரோ அவா்கள் முதுகில் குழந்தையை ஏற்றிவிட, அக்குழந்தையைச் சுமந்தவாறு யானை போல் மெதுவாகச் சுற்றிவருவா்.

அவ்வேளையில் குழந்தை மகிழும்படி.

'ஆனை ஆனை அழகா் யானை
அழகரும் சொக்கரும் ஏறும் யானை
கட்டிக் கரும்பை முறிக்கும் யானை
காவிரித் தண்ணீரைக் கலக்கும் யானை
குட்டி ஆனைக்குக் கொம்பு மொளச்சுதாம்
பட்டணம் எல்லாம் பறந்தோடிப் போச்சுதாம்'

என்று பாடல் பாடிச் சுற்றி வருவா்.

**பருப்புக் கடைதல்**

குழந்தைகளைச் சிரிக்க செய்ய, அவா்களின் உடலில் கிச்சுகிச்சு மூட்டி விளையாடும் விளையாட்டு 'பருப்புக் கடைதல்' ஆகும். குழந்தைகள் உள்ளங்கையை நீட்ட செய்து அதில் 'பருப்புக் கட பருப்புக் கட' என்று, தங்கள் முழங்கையால் பருப்புக் கடைவதுபோல பாவனை செய்து, ஒவ்வொரு விரலையும்

'இது சோறு!
இது குழம்பு
இது கூட்டு
இது அப்பளம்
இது பாயாசம்

என்று கூறி, பின் அதிலிருந்து எல்லோருக்கும் ஒவ்வொரு உருண்டை கொடுப்பதாகப் பின்வருமாறு கூறுவா்.

இது அம்மாவுக்கு
இது அப்பாவுக்கு என்று
கழுவிக் கழுவிக் கொட்டு
கழுவிக் கழுவிக் கொட்டு

என்று உள்ளங்கையைக் கழுவி கவுத்துவதுபோல் செய்து வண்ணானுக்குச் சோறு கொண்டு போற வழி எங்க இருக்கு....? எங்க இருக்கு...? என்று சோறு கொண்டு போக வழி தேடுவர். தமது ஆள்காட்டி விரலால் குழந்தையின் உள்ளங் கையிலிருந்து தோள்பட்டை வரை விரல் மாற்றி விரல் வைத்து 'நண்டு ஊருது நரி ஊருது' என்று கூறியவாறு, தொடும் நேரத்தில், 'இந்தா இருக்கு! இந்தா இருக்கு!' குழந்தையின் அக்குளுக்குள் கிச்சு கிச்சு மூட்டிச் சிரிக்கச் செய்வர்.

**நடை வண்டி**

நடைவண்டி என்பது குழந்தை பிறந்து, பின்னர் தவழ்ந்து, நிற்கத் தொடங்கிய பின்பு நடை பயில்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வண்டி அல்லது விளையாட்டுப் பொருள் ஆகும். இந்த நடைவண்டி மரத்தால் செய்யப்பட்டு மூன்று சக்கரங்களுடன் மெதுவாகத் தள்ளிக் கொண்டு செல்லும் வகையில் அமைக்கப்பட்டதாகும். தற்காலத்தில் நடைவண்டிக்குப் பதிலாக புதிய வடிவிலான பொருட்கள் பயன்பாட்டுக்கு வரத் தொடங்கியதால் நடைவண்டி பயன்பாடு இல்லாமல் போய்விட்டது. ஆயினும் நாட்டுப்புறங்களில் மட்டும் இந்நடைவண்டி இன்றும் பயன்பாட்டில் உள்ளது அதைக் குழந்தைகள் தெருவில் உருட்டி வரும்போது,

'தடதடனு ஓடும் வண்டி
        தச்சர் செய்தவண்டி
தம்பி ஓட்டும் வண்டி
        தங்கத் தேர் வண்டி'

என்று மற்றோர் பாடுவர்.

சங்ககாலத்தில் இதனை 'முக்கால சிறுதேர்' என்றனர். காவிரிப்பூம்பட்டினத்தில் உணவு தானியங்களை முற்றத்தில் காயவைத்துக் கொண்டிருக்கும் மகளிர், அந்தத் தானியங்களைக் கவர்ந்து உண்ணக் கோழிகள் வரும்போது, அவற்றை விரட்ட தம் காதுகளில் அணிந்திருந்த குழைகளைக் கழற்றி வீசுவராம். அந்தக் குழைகள் சிறுவர் உருட்டும் நடைவண்டித் தேருக்குத் தடைக்கற்களாக இருந்தனவாம்.

'நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங் கால் கனங் குழை,
பொன் கால் புதல்வர் புரவி இன்று உருட்டும்,
முக் கால் சிறு தேர் முன் வழி விலக்கும்'

(பட்டிணப் பாலை 20-25)

என்று காலில் பொன் கலனை அணிந்த செல்வக் குடியில் பிறந்த குழந்தைகள் சிறுதேர் உருட்டிய நிகழ்வையும்,

'தச்சச் சிறார் நச்சப் புனைந்த
ஊரா நல்தேர் உருட்டிய புதல்வர்

(பெரும்பாணாற்றுப்படை 248-249)

என்ற அடிகள் மரத்தை மூலப்பொருளாகக் கொண்டு கைவினைப்பொருட்கள் தயாரிப்பவர்களின் பிள்ளைகளும் விரும்பும்படியாகச் செய்யப்பட்ட நல்ல சிறுதேர்களை உருட்டித் திரிந்தனர் என்பதையும் சங்க இலக்கியம் எடுத்தியம்புகின்றன.

**விலங்குகள் அறிமுகம்**

குழந்தைப் பருவத்திலேயே விலங்குகளை அறிமுகம் செய்யும் விதமாக, சில பாடல்கள் பாடப்படவதுண்டு.

'தோதோ நாய்க்குட்டி
துள்ளிவா நாய்க்குட்டி'
'மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மீசை வச்ச பூனைக்குட்டி'
'எங்கள் வீட்டு பூனை
இருட்டில் உருட்டும் பூனை'

போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

**அறிவுத்திறன் பயிற்சிப் பாடல்கள்**

குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே பல நிலைகளில் அறிவுத்திறனை வளர்ப்பதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்பயிற்சியைச் சிறுவர்களும் எளிதில் எளிமையாகக் கற்றுக் கொள்கின்றனர்.

**கணிதப் பயிற்சி**

சிறுவயதிலேயே கூட்டல் கணக்குகளில் பயிற்சி அளிக்கும் வகையில் பாடல் பாடப்படுகிறது. ‘தோசையம்மா தோசை’ என்ற பாடல்கள்

‘அப்பாவுக்கு நாலு
அம்மாவுக்கு மூணு
அண்ணனுக்கு இரண்டு
பாப்பாவுக்கு ஒன்னு!
ஆக மொத்தம் பத்து’

என்று எண்களைக் கூட்டுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**நாப்பயிற்சிபாடல்**

குழந்தைகள் பேசக் கற்றுக்கொள்ளும் போது பேச்சு திருத்தமாக அமைய வேண்டி சில பாடல்களைக் கூறி, குழந்தையைப் பாடுமாறு கூறுவர்.

‘யாரு தச்ச சட்ட
தாத்தா தச்ச சட்ட’

‘ஓடுகிற நரியில ஒருநரி சிறுநரி
சிறுநரி முதுகுல ஒருபிடி நரைமயிர்’

‘கடலையில ஒருவாள் உருளுது
பெறளுது தத்தளிக்கது தாளம் போடுது’

இத் தொடர்களை விரைந்து பாடுமாறு குழந்தைகளிடம் கூற, அவர்கள் விரைந்து பாட இயலாமல் தடுமாறுவர். விரைந்து பாட முயலும்போது அவர்களின் பேச்சு திருத்தமுற அமைய அவை வாய்ப்பாக அமைகின்றன.

சிறுமியர் தங்களுக்குள் இது போன்று விளையாடும் போது, ‘ஊருல உள்ள பூவரச மரமெல்லாம் என் பூவரச மரம்’ என்ற தொடரை ஒருவருக்கொருவர் வேகமாகக் கூறச்சொல்வர். அவ்வாறு கூறும்போது, ‘ஊருலவுள்ள புருசமாரெல்லாம் எம் புருசன்மார்’ என மாறிவிடும்.

**அறிவு வளர்ச்சி நிலைப்பாடல்கள்**

குழந்தைகளின் அறிவு வளர்ச்சி நிலையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களால் பல பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்வகைப் பாடல்கள் விளையாட்டுகள், எண்ணிக்கைகள், தெய்வத்திடம் வேண்டுதல், வாழ்க்கை அறிவு போன்றவற்றை உணர்த்துவதாக இருக்கும். சில பாடல்கள் வினா – விடை பாடல்களாகவும், சில பாடல்கள் கேலிப் பாடல்களாகவும் அமைகின்றன. இவை பொழுதுபோக்குவதற்காகப் பாடப்படும் பாடல் ஆகும்.

**பொழுதுபோக்குப் பாடல்கள்**

நாட்டுப்புறச் சிறுவர்கள் விளையாடும் நேரங்கள் தவிர ஓய்வான நேரங்கிலும் மற்றும் எவ்வித வேலைகள் இல்லாத நேரங்களிலும் சிறுவர் சிறுமியர் இணைந்து பொழுதுபோக்காக ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு பாடல்களைப் பாடுகின்றனர். இவற்றையே பொழுதுபோக்குப் பாடல்கள் எனலாம். அவ்வாறு சிறுவர்களின் பாடல்கள் எடுத்துக்கொண்டால் அவற்றில் பலவிதமான சுவைகளும், மிதமிஞ்சிய கற்பனை வளமும் ஆட்சி செலுத்துவதைக் காணமுடிகிறது. சிறுவர்களின் பாடல்கள் பெரும்பாலும் நகைச்சுவையையே மையமாகக் கொண்டுள்ளன. சிறுவர்கள் ஒருசில பாடல்களில் பெரியவர்களின் தவறான செயலைக் கண்டித்தும் பாடுகின்றனர். சிறுவர்கள் பாடும் அனைத்துப் பாடல்களும் ஒருவித மனமகிழ்ச்சிக்காகப் பாடப்பட்டது போலவே தோன்றுகின்றன.

**வகைப்பாடுகள்**

சிறுவர்கள் பாடும் பொழுதுபோக்குப் பாடல்கள் அனைத்தையுமே பின்வரும் ஒன்பது வகைக்குள் அடக்கிவிடலாம்.

1. அறிவுரைப் பாடல்கள்
2. வினா – விடைப் பாடல்கள்
3. கேலிப்பாடல்கள்
4. திரைப்படம் தொடர்பான பாடல்கள்
5. பறவை விலங்குகளைப் பற்றியப் பாடல்கள்
6. பக்திப் பாடல்கள்
7. எண்ணுப் பயிற்சிப் பாடல்கள்
8. சிந்தனை வளர்ச்சிப்பாடல்
9. புதியன படைத்தல்

## 1. அறிவுரைப் பாடல்

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழிக்கு ஏற்ப சிறுவயதிலேயே வாழ்விற்கு வேண்டிய அறிவுரைகள் பாட்டின் மூலம் அறிவுறுத்தப்படுகின்றன.

'ஓட்ட பல்லு சங்கரா
ஒரு வீட்டுக்கும் போகாத
அப்பளம் வாங்கி திங்காத
அடிபட்டு சாகாத'

என்ற பாடல் பல்லு விழுந்த சிறுவர்களைப் பார்த்து பாடப்படும் கேலிப்பாடலாகும். ஆயினும் சிறுவர்களுக்கான அறிவுரைப் பாடலாகவும் இதனைக் கருதலாம். சிறுகுழந்தைகள் அறியாப்பருவத்தில் வேறு வீட்டிற்குச் சென்று பண்டம், பலகாரங்கள் வாங்கித் தின்பர். அவ்வாறு செல்லக்கூடாது என்றும் மீறி சென்றால் தண்டனை கிடைக்கும் என்றும் இப்பாடலில் அறிவுரை வழங்கப்படுகிறது. இந்நூலாசிரியர் சிறுவயதில் பக்கத்துவீட்டில் கொடுத்த 'அவித்த மொச்சைப் பயறை' வாங்கிச் சாப்பிட்டதற்குத் தண்டணையாக அவர் தாயார், வீட்டின் மூலையில் அவரை நிற்க வைக்க, மறுமுறை வாங்கி கொண்டு அவரே மூலையில் போய் நின்றதாக, அவரின் தாயார் அடிக்கடி கூறுவது நகைச்சுவைக்காய் ஈண்டு நினைவு கூறப்படுகிறது.

சிறுவர் பாடல்களில் சில பெரியவர்களை அறிவுறுத்தும் வகையிலும் பாடப்படுவதுண்டு. அவ்வாறு அவர்கள் பாடும் பாடல்களில் தீமையான செயல்களைச் செய்து கொண்டிருப்பவர்களையும், வேலை ஏதும் செய்யாது இருப்பவர்களையும் இடித்துரைத்துச் சிந்திக்க வைக்கும்படியானப் பொருள் அமைந்த பாடல்களைப் பாடுவதைக் காணலாம்.

'மாப்பிள்ளை மாப்பிள்ளை
மண்ணாங்கட்டித் தோப்புளே
அரைக்காசு வெற்றிலைக்கு
கதிகெட்ட மாப்பிள்ளை'

என்று பாடும் பாடல்களில் வேலையேதும் செய்யாமல், அரைக்காசு வெற்றிலைக்குக் கூட காசு இல்லாமல் சும்மா இருப்பதைக் கிண்டல் செய்து பாடுகின்றனர். இதில் ஒருவித நகைச்சுவை உணர்வு இருந்தாலும் வேலைக்குச் செல்ல வேண்டியதின் அவசியத்தை, அறிவுரையாக வழங்கியுள்ளதைக் காணலாம். இவ்வாறு சிறுவர்கள்கூட,

வேலை ஏதும் செய்யாமல் இருப்பதைக் கிண்டல் செய்கிறார்களே என்று அவர்கள் வேலைக்குச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு தமது பாடலால் ஒருவரைத் திருத்தி நல்வழிப்படுத்தும் பணியையும் சிறுவர்கள் செய்கின்றனர்.

**2. வினா – விடைப் பாடல்கள்**

'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்பார் வள்ளுவர். குழந்தைகள் ஏதாவது ஒன்றினைப் பார்த்து, என்ன? என்று கேள்வி கேட்பதில் அதிக ஆர்வமுடையவராகக் காணப்படுவர். அதே நேரத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் அளிக்கும் ஆற்றலை வளர்ப்பதற்குத் துணை செய்யும் விதமாகப் பல பாடல்கள் பாடப்படுகின்றன. வினா – விடை வாக்கியங்களை ஒவ்வொன்றாகப் பின்னி விளையாடுவர். ஒவ்வொரு விடையிலும் ஓர் அடிப்படைச்சொல் இருக்கும். இச்சொல்லின் முதற்பகுதியினை மீண்டும் மீண்டும் விரித்துச் சொல்லுவர். அப்படி விரித்துச் சொல்வது ஒருவரின் சொல்வளத்தையும், கற்பனைத் திறத்தையும் சார்ந்துள்ளது. இந்த விளையாட்டை 'சொல்லடுக்கு' என்று கூறுவர். 'வினா – விடைச் சங்கிலி' என்றும் கூறுவர். இச்சங்கிலித் தொடரின் கடைசியில் ஏதாவது அழகான வார்த்தையில் கொண்டு வந்து முடிப்பதைக் காணலாம்.

'கோபாலா!
ஏன் சார்?
எங்க போற?
கடைக்குப் போறேன்!
என்ன வாங்க?
ரப்பர் வாங்க!
என்ன ரப்பர்?
இந்தியா ரப்பர்!
என்ன இந்தியா?
வட இந்தியா!
என்ன வட?
ஆம வட?
என்ன ஆம?
குளத்து ஆம!
என்ன குளம்?

திரிக் குளம்!
என்ன திரி?
விளக்குத் திரி!
என்ன விளக்கு?
குத்து விளக்கு!
என்ன குத்து?
டிஸ்யூம் குத்து!

எனத் தொடர் வினாக்களை அடுக்குவதும் அதற்கேற்ற பதில்களை உடனே வழங்குவதற்கான பயிற்சியும் இதன்மூலம் கிடைக்கிறது. ‘இவ்வகைப் பாடல்களின் மூலம் சிறுவர்களுக்கு முக்கியமான மொழிப் பயிற்சியினை வளர்ப்பனவாகவும் மனனம் செய்து கொள்ளத்தக்க வகையிலும் அமைந்திருக்கும்’ என்கிறார் இரா.பாலசுப்பிரமணியன் இவ்வகை விளையாட்டுகளில் இடம்பெறும் பாடல்கள் சிறுவர்களுக்குக் கேள்வி கேட்கும் திறனையும், சொல்லடுக்கும் திறனையும் வளர்க்கும். மொழித்திறனையும், கற்பனைச் செழுமையும் வளர்ப்பதற்கு இதனால் பயிற்சி உண்டாக வாய்ப்பு ஏற்படுகிறது எனலாம். மேலும் தம் சுற்றுப்புறத்தில் உள்ள தாவரங்கள், விலங்குகள் ஊர்களின் பெயர்கள், பறவைகளின் பெயர்கள் போன்றவைகளைப் புரிந்து கொள்வதற்கு இது வாய்ப்பாக அமைகிறது.

**3. கேலிப்பாடல்கள்**

குழந்தை பருவம் என்றாலே கேலியும் கிண்டலும் நையாண்டியும் இணைந்து எப்பொழுதும் சந்தோஷங்களை அளிக்கும் பருவமாக இருக்கும். ஒரு சிறுவன் மற்றொரு சிறுவனைக் கேலிசெய்து பாடுவதுதான் கேலிப்பாடலாகும். ஒருவருக்கொருவர் கேலியும் கிண்டலும் செய்து பாடுவது சிறுவர்களின் இயல்பாகும். அவ்வகை கேலி பாடல்கள் பல நிலைகளில் பாடப்படுகின்றன. நாட்டுப்புறங்களில் சிறு ஆண் குழந்தைகள் கீழ் ஆடையின்றி தெருவில் விளையாடும். அதனைக்காணும் மற்ற சிறுவர்கள்,

இராமா இராமா மணியடி
இராம கிருஷ்ணா மணியடி
சீதா சீதா மணியடி
சீக்கிரமா மணியடி
டிங் டிங் டிங்

எனப் பாடிக் கேலி செய்வர்.

**மொட்டையைக் கேலி செய்தல்**

நாட்டுப்புறங்களில் பிறந்து ஒரு வருடம் ஆகியதும், குலதெய்வ கோவிலுக்குச் சென்று மொட்டை அடிப்பர். அதோடு மட்டுமல்லாமல் நேர்த்திக்கடனுக்காகச் சிறுவர்களுக்கு அடிக்கடி மொட்டை போட்டுவிடுவர்.

மொட்டையடித்துக் கொண்ட சிறுமியைப் பார்த்து மற்ற சிறுவர்கள்.

‘மொட்டைப் பாப்பாத்தி
ரொட்டி சுட்டாளம்
எண்ண பத்தலையாம்
கடைக்குப் போனாளாம்
கடைக்காரனைப் பாத்து
கண்ணடிச்சாளாம்’

என்று பாடிக் கேலி செய்வர். சிறுவர்களுக்கும் சிறுவயதில் அடிக்கடி மொட்டை போடுவர். அதனைப் பார்க்கும் போது,

‘மொட்ட மண்ட ரேடியா
கொட்டடிக்க வாரியா’

என்றும், மொட்டை போட்ட இரு சிறுவர்கள் சேர்ந்துவிட்டால்

‘மொட்டையும் மொட்டையும் சேர்ந்துச்சாம்
முருங்க மரத்துல ஏறுச்சாம்’

எனவும் மற்ற சிறுவர்கள் அவர்களைக் கேலி செய்து பாடுவார்.

**நாக்கை நீட்டல்**

சிறுவர்கள் அடிக்கடி தங்கள் நாக்கை வெளியில் நீட்டும் இயல்புடையவர்கள். அந்நேரங்களில்,

‘நாக்க நீட்டாத
வாக்கப் படாத
குதுலுக்குள்ள கிடந்துக்கிட்டு
குட்டி போடாத’

என்று மற்ற சிறுவர்கள் பாடுவதுண்டு.

**அழுகையின் போது பாடல்**

சிறு குழந்தைகள் அழும் போது அவர்களின் அழுகையை நிறுத்தவும் அழுகையை மறந்து சிரிக்கவும் மற்றவர்கள் கேலியாகப் பாடல்கள் பாடுவர்.

‘அழுத பிள்ளை சிரிச்சிதாம்
கழுதப் பாலைக் குடிச்சிதாம்’

எனப் பாடும்போது அழுகிற குழந்தைகள் சில நேரங்களில் சிரித்து விடும்.

**பொருளற்றப் பாடல்கள்**

சில பாடல்கள் பொருளுக்கும் அழுத்தத்திற்கும் முதன்மை அளிக்காமல் யாரையாவது கேலி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் பாடப்படுகின்றன.

‘ஏ பி சி டி
உங்கப்பன் தாடி’
‘தலவாணி
உங்கப்பன் களவாணி’

என்ற பாடல்கள் கேலியாகப் பாடப்படுவன ஆகும்.

**4. திரைப்படம் தொடர்பான பாடல்கள்**

தற்காலங்களில் சிறுவர்களிடையே திரைப்படங்களின் மேல் தணியாத ஆர்வம் உள்ளது. அதனால் சிறுவர் பாடல்களில் திரைப்படங்களின் தாக்கம் அதிகரித்து வருகிறது. தாங்கள் காணும் திரைப்படங்களைக் கொண்டு தங்களுக்கே உரிய கற்பனைத் திறனால் பாடல்களை மாற்றிப் படைக்கின்றனர்.

‘பிஸ்கட் பிஸ்கட்
என்னா பிஸ்கட்
ராணி பிஸ்கட்
என்னா ராணி
ஆட்டோ ராணி’

என்ற பாடல் ‘ஆட்டோ ராணி’ என்கிற திரைப்படம் வந்தபோது சிறுவர்கள் பாடினர். மற்றொரு பாடலான

‘தம்பி தம்பி
என்ன வேணும்?
தண்ணி வேணும்
என்ன தண்ணி?
மலைத் தண்ணி
என்ன மலை
அண்ணாமலை’

என்று அண்ணாமலை திரைப்படத்தைக் குறித்து, அப்படம் வெளிவந்த போது பாடினர். இதன் மூலம் வருங்காலத்தில் சிறுவர்களின் மத்தியில் வழங்கப்படும் வழக்காறுகள் திரைப்படப்பாடல்களையும் நடிகர்களையும் மையமாக வைத்தும் வரும் எனத் தெரிகிறது.

**5. பறவை விலங்குகள் பற்றிய பாடல்கள்**

சிறுவர்கள் பொழுதுபோக்காகப் பாடும் பாடல்களில், தம்மைச் சுற்றியுள்ள விலங்குகளையும், பறவைகளையும் பற்றி குறிப்பிடுகின்றனர்.

‘காக்காவுக்கும் காக்காவுக்கும்
கல்யாணமாம்
கட்டெறும்பு வந்து
சேதிச் சொல்லுச்சாம்’
நரிக்கும் நரிக்கும்
கல்யாணமாம்
நாலுகாலு ஒட்டகத்துக்கு
கொண்டாட்டமாம்.

இத்தகைய பாடல்கள் மூலம் சிறுவயதிலிருந்தே அவர்களுக்கு அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் பக்குவம் வந்துவிடுவதைக் காணலாம்.

**6. பக்திப் பாடல்கள்**

சிறுவர்களின் மத்தியில் ஓரிரு பக்திப்பாடல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. சிறுவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து சாமியாக எண்ணி ஒரு கல்லை நட்டு மணலால் கோயில் கட்டி விளையாடுவார்கள். அப்பொழுது அவர்கள் பாடல்களைப் பாடுவார்கள்.

‘குள்ளக் குள்ளனே
குண்டு வயிறனே
வெள்ளைப் பிள்ளையாரே
விநாயக மூர்த்தியாரே’

என்று பாடல் அமையும்.

**7. எண்ணுப் பயிற்சிப் பாடல்கள்**

சிறுவர்களுக்கு ஒரு பயனுள்ள விளையாட்டு எண்ணுப்பயிற்சி விளையாட்டாகும். இவ்விளையாட்டுப் பாடல்களினூடே சிறுவர்களுக்கு எண் பயிற்சிக் கல்வி கிடைப்பதைக் காணலாம்.

‘நாலும் மூணும் ஏழு
நானும் நீயும் ஒண்ணு’

என்ற பாடல் கல்வியையும் ஒற்றுமையையும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. இத்தகைய பாடல்களின் மூலம் கூட்டல் கணக்கு எளிதாக மனதில் பதிந்து விடுகிறது. திண்ணையில் அமர்ந்து சிறுமிகள் விளையாடும் ‘ஏழாங்கல்’ விளையாட்டில் பாடப்படும்.

‘ஓரிஉலகெல்லாம் சூரியன்
சூரியன் தங்கச்சி சுந்தரவள்ளிக்கு

எனத் தொடங்கும் பாடல் முழுவதும் எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த பாடல் வரிகளாகும். எண்களில் பயிற்சி ஏற்படும் வகையில் வேறு சிலப் பாடல்களும் பாடப்படுகின்றன. கழற்சி விளைாட்டில் ஒன்று முதல் பத்து வரை எண் பயிற்சி அளிக்கப்படுகிறது.

‘ஒன்னு கமலக்கா கண்ணு
ரெண்டு ரோசாப்பூச் செண்டு
முணு முருங்கப்பட்ட தோலு
நாலு நாய்குட்டி வாலு
அஞ்சு அவரைக்காப் பிஞ்சு
ஆறு திருவாரூர் தேரு
ஏழு ஏஞ்சொல்ல கேளு
எட்டு டமடம கொட்டு
ஒன்பது ஓலப்பாயச் சுருட்டு
பத்து பச்சரிசியக் குத்து!

**எண் வரிசைப் பாடல்கள்**

‘ஒரு குடம் தண்ணி எடுத்து
ஒரு பூ பூத்ததாம்’

என்ற பாடல் எண்ணுப் பயிற்சி அளிக்கும் வகையில் அமைந்த பாடல் ஆகும்.

**8. சிந்தனை வளர்ச்சி பாடல்**

சிறுவர்களின் அறிவைத் தூண்டும் விதத்தில் பல பாடல்கள் பாடப்படுகின்றன.

தலைவர் : கோழி பறபற

குழு : பறபற

தலைவர் : கோழி முட்டை பறபற

குழு :

இப்பாடலில் தலைவன் பறவைப் பெயர்கள் சொல்ல மற்றவர்கள் தலையில் கைகளை வைத்து ‘பற பற’ என்று கூறி கையசைப்பர். முட்டை பறக்காது அவ்வாறு ‘முட்டை’ என்று கூறும்போது கையசைப்பவர்கள் விளையாட்டில் இருந்து நீக்கப்படுவார். இதில் சிறுவர்களின் அறிவுத் திறனும் சிந்தனை ஆற்றலும் சோதிக்கப்படுகிறது.

கொழுக்கட்ட கொழுக்கட்ட
ஏன் வேகல?
அடுப்பு எரியல நான் வேகல!
அடுப்பே அடுப்பே ஏன் எரியல?
மழையாப் பெய்தது நான் எரியல!
மழையே மழையே ஏன் பெய்த?
புல் வளர நான் பெய்தேன்!
புல்லே புல்லே ஏன் வளர்ந்த?
மாடு திங்க நான் வளர்ந்தேன்!
மாடே மாடே ஏன் தின்ன?
மாட்டுக்கார பையன் அவுத்திட்டான் நான் தின்னேன்!
மாட்டுக்காரப் பையா ஏன் அவுத்த?
குழந்தை அழுதது நான் அவுத்தேன்!
குழந்தையே குழந்தையே ஏன் அழுத?

எறும்பு கடித்தது நான் அழுதேன்!
எறும்பே எறும்பே ஏன் கடித்த?
புத்துல கை வைத்ததால் நான் கடித்தேன்!
அப்ப சரி!

என்ற பாடல், ஒரு நிகழ்வு நடப்பதற்கான காரணங்களைப் பட்டியல் இடுவதாய் அமைந்துள்ளது.

**9. புதியன படைத்தல்**

'வளரிளம் பருவத்திற்கு முந்தைய குழந்தைகள். மனனம் செய்யும் திறன்களை முழுமையாகப் பெறவுமில்லை. அவர்தம் சுற்றுச்சூழலைச் சுற்றி ஊடாடும் கற்பனையான மகிழ்ச்சிகளை அவர்கள் இழந்து விடுவதும் இல்லை. இவ்வாறாக மரபைச் சார்ந்து நிற்கும் குழந்தைகள், சொந்தமாகப் புதிவன புனைதலில் தளர்வதில்லை' என்பார் லூர்து அவர்கள். அவ்வாறு குழந்தைகள் தங்கள் வளர்ச்சி நிலையிலும் வாழும் சூழல் நிலைக்கு ஏற்பவும் பாடல்களைப் பாடியும் புதியனவற்றைச் சேர்த்தும் பாடி மகிழ்கின்றனர்.

'ஜன கன மன கதி
கீழே விழுந்தால் என்ன கதி'
'நீராரும் கடலுடுத்த
நீ எனக்கு என்ன கொடுத்த'

என்று தேசியக் கீதத்தையும் தமிழ்த் தாய் வாழ்த்தையும் கிண்டல் செய்து பாடுகின்றனர்.

சிறுவர் பாடல்களில் பொழுதுபோக்குப் பாடல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. பொதுவாகச் சிறுவர்களிடையே வழங்கிவரும் பொழுதுபோக்குப் பாடல்களில், அவர்களோடு தொடர்புடைய நிகழ்வுகளே கருவாக அமைந்துள்ளதையும், சிறுவர்களின் கற்பனைத் திறம் மிகுதியாக இருப்பதையும் காண முடிகிறது. நகர்ப்புறச் சிறுவர்களைக் காட்டிலும் கிராமப்புறச் சிறுவர்கள் தாங்கள் பொழுதுபோக்கிற்காகப் பலவிதமான நிகழ்வுகளை நடத்தும்போதும் பங்குகொள்ளும்போதும் பாடல்களைப் புனைவது மிகுதியாகக் காணப்படுகிறது. கிராமப்புறச் சிறுவர்கள் தங்களைச் சுற்றியுள்ள காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் கூர்ந்து கவனித்து அதைப் பொழுதுபோக்குப் பாடல்களில் அமைத்து விடுகின்றனர். நகர்ப்புறத்தில் உள்ள சிறுவர்கள் ஒன்றுகூடி விளையாடும் போதும், பொழுதுபோக்காகப் பல நிகழ்வுகளை

நடத்தும்போதும் பாடல்களைப் பாடுவது இல்லை. நகர்ப்புறச் சிறுவர்களைக் காட்டிலும் கிராமப்புறச் சிறுவர்களிடம் நல்ல கற்பனை வளமும், பாடல்களைப் புனையும் ஆற்றலும் மேம்பட்டே இருப்பதை அறியமுடிகிறது.

# அலகு - 2

## விளையாட்டுப் பாடல்கள்

நாட்டுப்புறக் கலைகளில் விளையாட்டுகளும் அடங்கும். “விளையாட்டு“ என்பது வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்பார் இரா.பாலசுப்பிரமணியம், விளையாட்டில் பொழுதுபோக்குதல் என்பது பொதுக்கருத்து. ஆனால் அதில் உடல் நலமும் மனநலமும் அடங்கியிருக்கின்றன. “உயிரினங்கள் வாழ்க்கையில் ஆவலாகச் செய்ய வேண்டிய வேலைகளுக்காகத் தங்களைத் தயார் செய்து கொள்வது விளையாட்டு மூலமாகும்“ என்பார் தாம்சன். எந்த வகையில் பார்த்தாலும் இயல்பாகவே குழந்தையிடமுள்ள மனவெழுச்சி, அதன் உடல் வளர்ச்சிக்கும் விளையாட்டு இன்றியமையாததாகிறது. ஒரு மொழி எவ்வளவு தொன்மை வாய்ந்ததோ அதே போன்று அந்தந்த நாட்டின் விளையாட்டுகளும் தொன்மை வாய்ந்தன. அவ்விளையாட்டுகளின்போது பாடப்படுகின்ற பாடல்கள் விளையாட்டுப் பாடல்கள் எனப்படும். பிறரது உதவி இன்றிக் குழந்தைகள் தாமாகவே விளையாடுவர். அவ்வாறு விளையாடும்போது பாடல்களைப் பாடுவர். அதுவே விளையாட்டுப் பாடல்கள் ஆகும், இப்பாடல்களைத் தனியாகவும், குழுக்களாகவும் பாடுவர்.

சிறியோர் விளையாட்டுகளில் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இப்பாடல்கள் சிறுவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதோடு உலக அறிவையும் மொழித்திறனையும் கணிதப் பயிற்சியையும் வளர்ப்பனவாக உள்ளன. பாடலின் முதலடியைக் கொண்டே விளையாட்டுகளும் நினைவுபடுத்தப்படுகின்றன. விளையாட்டில் இடம்பெறும் பாடல்கள் விளையாட்டுகளின் தன்மைக்கு ஏற்பவும் வயது, பருவம், மனம், விருப்பம் போன்றவற்றிற்கு ஏற்பவும் உடல் வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டும் உருவாக்கப்பட்டுள்ளன. சொற்கூட்டுப் பாடல்கள், தொட்டு வருபவரைத் தேர்ந்தெடுக்கும் பாடல்கள், மொழிப் பயிற்சிப் பாடல்கள், நாப்பிறழ்ச்சிப் பாடல்கள், எண்ணுப் பயிற்சிப் பாடல்கள் என்று விளையாட்டுப் பாடல்கள் பல திறத்தன.

### திறன் வெளிப்பாடு

விளையாட்டு உலகம் தனித்தன்மை வாய்ந்தது. விளையாட்டின் போது சிறுவர்கள் தம்மிடையே ஒரு நெருக்கமான உறவினைக் கொண்டிருப்பர். இந்த நெருக்க உறவும் உணர்வும் மற்றவர்களைப் புரிந்து கொள்ளவும் தோழமை கொள்ளவும் உதவுகின்றன. பெற்றோர், ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்வதை விட, நண்பர் குழுவின் வாயிலாகச் நிறையக் கற்றுக் கொள்கின்றனர். சிறுவர்கள் தன்னை

ஒத்த வயதினருடன் சேர்ந்து கற்றுக் கொள்ளும் வழக்கங்களும், நடத்தைகளும் பழக்க வழக்கங்களும், முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்தவையாகும். விளையாட்டின்போது சிறுவர்களுக்குள் நிகழும் உரையாடல், கேலி கிண்டல் போன்றவை ஒரு சுதந்திரத் தன்மையை அவர்களின் மனத்தில் விதைக்கின்றன. புதிய புதிய கதாபாத்திரமாகத் தங்களை உருவகித்துக் கொண்டு ஆடுவது (எலியும், பூனையும் விளையாட்டில் எலியாகவும் பூனையாகவும் மாறுவது, பூசணிக்காய் விளையாட்டில் பூசணிக்காய், இராஜா, வேலைக்காரனாக மாறுவது, துப்பறியும் விளையாட்டில் கள்ளன் போலீசாக மாறுவது) போன்ற செயல்கள் "போலச் செய்யும்" நடிப்புத் திறனை வெளிப்படுத்தக் கூடியனவாக உள்ளன. ஓடுதல், தாவிப்பாய்தல், குதித்தல், தாண்டுதல் போன்ற உடற்பயிற்சிகளை வளர்ப்பவையாகவும் ஐம்புலன்களுக்கும் ஒரு சேர இன்பம் ஊட்டுவனவாகவும் விளையாட்டுகள் அமைந்துள்ளன.

நாட்டுப்புற விளையாட்டுகளுக்குத் தனி ஆடுகளம் தேவையில்லை. தாங்கள் காணும் ஆங்காங்கே உள்ள வெற்றிடங்களிலும், வயல்களிலும், வீடுகளிலும் கூட விளையாடுவர். மரக்குச்சிகள், கொட்டைகள், சிறு கற்கள் போன்றவைகளே போதுமானவை. உடற்பயிற்சியையும் மனப்பயிற்சியையும் இந்த விளையாட்டுகள் நல்குகின்றன. உடல் திறன், உள்ளக் கிளர்ச்சி, வீரப் பண்பு, அறிவுத்திறன், ஆளுமைத் தன்மை, குழு மனப்பான்மை, இசை, வாழ்க்கையைப் புரிந்துகொள்ளுதல், நீண்ட ஆயுள் போன்றவை விளையாட்டில் ஈடுபடுவோருக்கு விளையாட்டுகள் வழங்கும் கொடையாகும்.

நாட்டுப்புறங்களில் சிறுவர்கள் தங்கள் மன உணர்வுகளையும், பழக்கவழக்கங்களையும் பாடல்களின் மூலமும், விளையாட்டுகளின் மூலமும் வெளிப்படுத்துகின்றனர். தங்களின் கருத்துகளைப் பிறரிடம் என இருபாலரும் பரிமாற்றம் செய்வதற்கும், சிறுவர் சிறுமியர் பால்பாகுபாடின்றி பழகுவதற்கும் ஒரு வடிகாலாக விளையாட்டுகள் அமைகின்றன.

**விளையாட்டுப் பாடலின் வகைகள்**

1. உடற்பயிற்சி விளையாட்டுப் பாடல்கள்
2. வாய்மொழி விளையாட்டுப் பாடல்கள்

என்ற இரண்டை ஆறு. இராமநாதன் குறிப்பிடுவார்.

விளையாடும் குழந்தைகளின் பால் வேறுபாட்டு அடிப்படையில் இப்பாடல்களை மூன்று வகைப்படுத்தலாம்.

1. சிறுவர் விளையாட்டுப் பாடல்
2. சிறுமியர் விளையாட்டுப் பாடல்
3. இருபாலர் விளையாட்டுப் பாடல்

**சிறுவர் விளையாட்டுப் பாடல்**

சிறுவர் விளையாடும்போது பாடப்பெறும் பாடல் சிறுவர் விளையாட்டுப் பாடலாகும். பந்தடித்தல், சடுகுடு, குச்சியடித்தல், பட்டம் பறக்கவிடுதல், ஐயம் கொம்பு, ஆணை அடித்தல் ஆகிய விளையாட்டுகளைச் சிறுவர்கள் விளையாடுவர். இவ்வேளைகளில் சிறுவர்கள் பாடல் பாடுவர்.

**சிறுமியர் விளையாட்டுப் பாடல்கள்**

பெண் குழந்தைகள் விளையாடும்போது பாடப்பெறும் பாடல்கள் சிறுமியர் விளையாட்டுப் பாடலாகும். ஊஞ்சல், கழற்சி, ஐந்தாம் கல் போன்ற விளையாட்டுகளை விளையாடுவர். அவ்வாறு அவர்கள் விளையாடும்போது பாடப்படுகின்ற பாடல்கள் சிறுமியர் விளையாட்டுப் பாடல் ஆகும். சிறுமியர் தனித்துக் கரகர வண்டி, திரிதிரி பம்பக்கா (அ) கிச்சுக் கிச்சுத் தாம்பூலம், பூப்பறிக்க வருகிறோம் போன்ற விளையாட்டுகளை விளையாடுகின்றனர். உடல் திறனைவிட அறிவுத்திறனை வளர்க்கும் வகையிலேயே சிறுமியர் விளையாட்டுகள் அமைந்துள்ளன. இவர்களின் விளையாட்டுக் களம் குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டது. பெரும்பாலானவை போட்டியின்றி ஆடப்பெறும் அக விளையாட்டுகள் ஆகும். அவை மென்மைத் தன்மை வாய்ந்தவை. சிறுமியரது விளையாட்டுகளில் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. சிறுமியர் விளையாட்டில் ஓடுதல், குதித்தல், சுழலுதல், நொண்டுதல், பாடுதல் என்ற செயல்கள் முதன்மையாய் அமைகின்றன. மேலும், கீழ்ப்படிதல், பொறுப்புடன் நடந்து கொள்ளுதல், பாதுகாப்புணர்வு போன்றவற்றின் பயிற்சிக் களமாகவும் சிறுமியர் விளையாட்டுகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கனவாகும்.

**இருபாலர் விளையாட்டுப் பாடல்**

சிறுவர், சிறுமியர் ஆகிய இருபாலரும் பங்கேற்கும் விளையாட்டுகள் குழு விளையாட்டுகளாகவே அமைந்துள்ளன. பத்து வயதிற்கு உட்பட்ட சிறுவர் சிறுமியரே இவ்விளையாட்டுகளில் கலந்து கொண்டு ஆடுகின்றனர். ஒரே குழுவாகவோ, இரு அணிகளாகப் பிரிந்தோ (இரு) அணியிலும் ஆண், பெண் என இருவரும் கலந்து

இருப்பர்) விளையாடுகின்றனர். ஆண், பெண் குழந்தைகள் இணைந்து விளையாடும் விளையாட்டுகளின்போது பாடும் பாடல் சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பாடல் ஆகும். கபடி, கண்ணாம்மூச்சி, பூசணிக்காய் குலைகுலையா முந்திரிக்காய், ஒரு குடம் தண்ணி ஊத்தி, யாரு கொம்பு?, நொண்டி, கல்லா? மண்ணா?, கை வைத்து விளையாடல், திரிதிரி பம்பக்கா, கரகர வண்டி, தத்தைக்கா புத்தைக்கா போன்ற விளையாட்டுகள் இருபாலராலும் விளையாடப்படுகின்றன. அவ்வாறு விளையாடுகையில் பாடல் பாடி மகிழ்வர். இதன் அடிப்படையில்,

1. தனிப்பாடல்
2. இருவர் விளையாட்டுப் பாடல்
3. குழு விளையாட்டுப் பாடல்
4. அணி விளையாட்டுப் பாடல்

என்ற நான்குப் பிரிவுகளின் கீழ் விளையாட்டுப்பாடல்கள் ஈண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**தனிப்பாடல்**

விளையாடும் போது ஒரு ஆண் குழந்தையோ அல்லது பெண் குழந்தையோ தனித்து நின்று பாடும் பாடல் தனிப் பாடல் ஆகும். ஐந்தாங்கல், கழற்சி ஆகியன விளையாடும் போது பாடப்படும் பாடல் தனிப்பாடல்கள் ஆகும். காற்றாடி சுற்றல் சிறுவர்கள் பனை ஓலையைச் செவ்வக வடிவில் கிழித்து, அதில் முள்ளைக் குத்தி, காற்றாடி சுற்றுவர். அவ்வாறு காற்றாடி செய்யும்போது, முள் குத்திய ஓலையைத் தம் வாயருகே வைத்து,

“குன்னாங் குன்னாங் காட்டுக்குள்ள
குருட்டுப் பாம்பு செத்துக் கிடக்கு

ஆடுவியா ஆட மாட்டியா
குர்..ரா...”

எனப் பாடி மகிழ்வர்.

**கொக்கை வேண்டல்**

அதிகாலை நேரம் மற்றும் மாலை நேரங்களில் வானில் பறவைகள் கூட்டமாய்ப் பறந்து செல்லும், அவ்வேளைகளில் சிறுவர்கள் தங்கள் கைகளை அசைத்து, உயரமாகக் காண்பித்து,

“வெள்ளை வெள்ளை கொக்கே
வெள்ளாட்டங் கொக்கே
மாரியாத்தா கோயில்ல
மஞ்சத் தண்ணி ஊத்துறேன்
எனக்கொரு வெள்ள போடு”

என வேண்டுவர். கொக்கு தங்கள் நகங்களில் வெள்ளை போட்டுள்ளதாக நம்புவர்.

**தட்டாங்கல் ஆட்டம்**

ஒரே மாதிரியான உருண்டையான சிறு கூழாங்கற்களைக் இவ்விளையாட்டு வெவ்வேறு ஊர்களில், வெவ்வேறு எண்ணிக்கையுள்ள கற்களைக் கொண்டு விளையாடப்படுகிறது. விளையாட்டை மேலும் சுவாரசியமானதாக்கப் பாட்டுப்பாடிக் கொண்டு ஆடுவர். தேவர்குளம் வட்டாரத்தில் ஐந்து கற்களைக் கொண்டு தட்டாங்கல் ஆடுகின்றனர். இவ்வாறு ஆடப்படும் ஆட்டத்தில், ஒண்ணான், இரண்டான், மூன்றாள், நான்கான், ஐந்தான், ஆறான், ஏழான், எட்டான், ஒன்பதான், பத்தான் எனப் பத்து பிரிவுகள் ஆட வேண்டும். ஒவ்வொன்றுக்கும் எடுக்க வேண்டிய கற்களின் எண்ணிக்கைக்கும் எடுக்கவேண்டிய விதத்திற்கும். விதிமுறைகள் உண்டு.

ஒவ்வொரு முறை ஆரம்பிக்கும் போதும் ஐந்து கற்களையும் ஒரு கல்லை கீழே விரித்தவாறு போட்டுவிட்டு, அதில் இருந்து ஒற்றைக்கல் எனக் கையில் எடுத்துக்கொள்வர். இக்கல்லை மேலே வீசியெறிந்துவிட்டு அது கீழே கைக்கு வந்து சேருமுன் கீழே கிடக்கும் மற்ற கற்களை அலுங்காமல் (ஒன்றை எடுக்கும்போது அடுத்ததைத் தொட்டுவிடக் கூடாது)ஒவ்வொரு கல்லாய்த் தனித்தனியே கையில் எடுத்துக்கொண்டு மேலிருந்து விழும் ஒற்றைக்கல்லைப் பிடித்துவிட வேண்டும். தொடர்ந்து இரண்டாவது ஆட்டத்தில் இரண்டு, இரண்டு கற்களைச் சேர்த்து இரண்டு முறை எடுப்பர். மூன்றாவது ஆட்டத்தில் ஒரு கல்லை முதல் முறையாகவும் மூன்று கற்களை அடுத்த முறையாகவும், நான்காவது ஆட்டத்தில் நான்கு கற்களை ஒரே முறையிலும் ஐந்தாவது ஆட்டமாக நான்கு காய்களை வைத்து எடுத்து, ஆறாவது ஆட்டமாகக் கற்களைப் புறங்கையில் ஏந்தி, ஏழாவதாய் உள்ளங்கையில் மடக்கி,

எட்டாவதாக சுண்டு விரலால் தரையைத் தடவி (நக்கி), ஒன்பதாவதாக ஐந்து கற்களையும் விரித்துப் போட்டு, ஒரு கல்லால் ஒவ்வொரு கல்லையும் சுண்டி, பத்தாவதாய் ஒரு கல்லை எதிர்தரப்பினரிடம் தந்துவிட்டு, நான்கு கற்களை விரித்துப் போட்டு, எதிர்தரப்பினர் அதிலிருந்து ஒரு கல்லை எடுத்துவிட, மீதமுள்ள மூன்று கல்லில் ஒரு கல்லைத் தாண்டி மற்றொரு கல்லை அடித்து ஆடிவிட்டால் ஒண்ணான் கட்டை மீண்டும் அவரே விளையாடுவார். அதிகக் கட்டை எடுத்தால் வெற்றியாகக் கொள்ளப்படும்.

**ஏழாங்கல் விளையாட்டு**

தேவர்குளம் வட்டாரத்திற்கு வேறு பகுதிகளில் இருந்து திருமணம் முடிந்து வந்த பெண்கள், ஏழாங்கல் விளையாட்டைக் கற்றுக் கொடுக்கின்றனர்.

ஓரிரு உலகெல்லாம் சூரியன்
சூரியன் தங்கச்சி சுந்தரவல்லிக்கு
நாளக்கழிச்சிக்கு மாயக் கல்யாணம்
ஈரா எழுதிக்கோ
என் பேரைச் சொல்லிக்கோ
முக்குட்டு தக்குட்டு
முருங்கைப் பதினெட்டு
நான்கன்னம் தங்கிவா
நாகம் படர்ந்து வா
ஐவாழைப்பூ தும்பப்பூ
ஆசை அரும்பும்பூ
ஆறே அரும்பிக்கோ
ஆறுமுகனை நம்பிக்கோ
ஏழே எழுதிக்கோ
எம் பேரைச் சொல்லிக்கோ!

என்று ஏழாங்கல் விளையாடும் போது பாடலும் பாடுகின்றனர். ஒரு கல்லை மேலே போட்டு, அது கீழே வருவதற்கு முன், தரையைத் தொட்டுக் கல்லைப் பிடிப்பர். அவ்வாறு ஒவ்வொரு முறை மேலே போடும் போதும்,

மாரி மாரி ஒண்ணு
மத்தாப்பு ரெண்டு
சோளப்பொறி மூணு

செங்கோட்ட நாலு

தேர் அஞ்சு

திருக்காங்குடி ஆறு

மலர் ஏழு

பட்டு எட்டு

கிண்ணி ஒன்பது

கிடாரி பத்து

அப்பளம் அப்பளம்

ஒரு கட்ட

என்ற பாடலையோ,

ஒன்னுக் கமலாக்கா கண்ணு

ரெண்டு ரோசாப்பூ செண்டு

என்ற பாடலையோ பாடுவர்.

**திரிதிரிப் பம்பக்கா**

இருவர் விளையாடும் விளையாட்டு இது. இருவர் எதிர்எதிரே அமர்ந்து, மண்ணை நீளமாகக் குவித்து கரைபோல் வைத்துக்கொள்வர். ஒருவர் திரி போல் சிறிய குச்சியை அம்மண்ணுக்குள் புதைப்பர் அவ்வாறு புதைக்கும் போது,

“திரித்திரி பம்பக்கா

தியக்காலி பம்பக்கா

திருடன் வாரான்

ஒளிஞ்சுக்கோ ஒளிஞ்சுக்கோ”

என்று பாடியவாரே மண்ணுக்குள் மறைத்துவிடுவார். மற்றொரு பாடலான,

“கிச்சுக் கிச்சுத் தாம்பூலம்

கிய்யாக் கிய்யாத் தாம்பூலம்

மச்சு மச்சுத் தாம்பூலம்

மாயா மாயாத் தாம்பூலம்“

என்ற பாடலைப் பாடிக்கொண்டும் தம் கையிலுள்ள சிறுகுச்சியை மறைப்பார். கண்டுபிடிப்பவர் தம் இருகை விரல்களையும் கோத்துக்கொண்டு அக்குச்சி இருக்கும் இடம் இது என ஒரு இடத்தைக்கணித்து, கரையையும் சேர்த்துப் பொத்திக்கொள்வார்.

மறைத்தவர் கை பொத்தப்படாத கரையைக் கிளறித் தான் மறைத்த குச்சியை எடுக்கவேண்டும்.

அப்பகுதியில் குச்சியை இல்லையென்றால், இருக்குமிடத்தைக் கையால் பொத்தி மறைத்தவர் தான் மறைத்த இடத்தில் குச்சி இருப்பதை எடுத்துக் காட்டவேண்டும். அப்படி எடுத்துவிட்டால், எதிர் நபர் கையில் சிறிது மண்ணை அள்ளிக் கொள்ள, அதில் குச்சியை வைத்து, அவர் கண்ணைப் பொத்தியவாறு சிறிது தூரம் அழைத்துச் சென்று, குச்சியுடன் மண்ணைப் போட வைத்துவிட்டு, தொடங்கிய இடத்திற்கே அழைத்து வந்து கண்ணைத் திறந்து விடுவார். அவர் தாம் போட்ட குச்சியை எடுத்து வர வேண்டும். எடுத்துவிட்டால், அவரே குச்சி மறைக்கும் ஆட்டத்தைத் தொடங்குவார். இல்லையெனில், முதலில் குச்சி மறைத்தவரே மீண்டும் ஆட்டத்தைத் தொடருவார். இது ஒரு ஊக விளையாட்டு. இதனை ஊழ்த்திற விளையாட்டு சங்ககாலத்தில் என்றும் கொள்ளலாம். இப்படி ஒரு புன்னைக்கொட்டையை மறைத்து விளையாடிய பெண் ஒருத்தி அதனை எடுக்காமலே விட்டுவிட்டுப் போய்விட்டதையும், அது முளைத்து வளர்ந்தபோது மறைத்து விளையாடிய சிறுமி அதற்குப் பால் ஊற்றி வளர்த்ததையும் நற்றிணை பாடல் ஒன்று,

விளையாடு ஆயமொடு வெண்மணல்
அழுத்திமறந்தனம் துறந்த காழ்முளை
அகையநெய்பெய் தீம்பால் பெய்து
இனிது வளர்த்தது நும்மினும்
சிறந்தது நுவ்வை ஆகும்
என்று அன்னை கூறினள்
புன்னையது நலனே - நற்றிணை 172

எனக் குறிப்பிடுகிறது.

**கரகர வண்டி**

“கரகர வண்டி“ என்னும் விளையாட்டு சிறுவர் சிறுமியர் ஆடும் விளையாட்டுகளில் ஒன்று. வண்டி என்னும் சொல் வட்டமாக உள்ள கைகளை மாற்றிப் சக்கரத்தைக் குறிக்கும். இருவர் தங்கள் கைகளை பிணைத்துக் கொண்டு, உடம்பைப் பின்னோக்கி வளைத்தும் சுற்றுவர்.

“கரகர வண்டி
காமாட்சி வண்டி“

என்று திரும்பத் திரும்பப் பாட்டுப் பாடிக்கொண்டே சுற்றுவர். இரு கைகளையும் பக்கவாட்டில் நீட்டிக்கொண்டு தனியாகச் சுற்றியும் இவ்விளையாட்டை விளையாடுவதுண்டு. சுற்றும்போது வரும் கிறுகிறுப்பு ஒருவகைத் தனி இன்பம் தரும். அதை சிறுவர்கள் அனுபவிப்பர். சுற்றும்போது மயக்கம் வந்தால் உட்கார்ந்துகொள்வர் அல்லது படுத்துக்கொள்வர்.

மாடுகள் அவிழ்க்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும் மாட்டுவண்டியின் மோக்காலில் (நுகத்தடி) இரண்டு பக்கங்களில் சிறுவர்கள் அமர்ந்து கொண்டு மேலும் கீழுமாகப் போய் வருவர். அப்போது,

“தை தக்காத் தை
அரைப் படி நெய்
வெள்ளக்காரன் கப்பல்ல
தீயக் கொளுத்தி வை“

என்று பாடி மகிழ்வர். இன்றைய சீ-சா விளையாட்டுப் போன்றது

**குழு விளையாட்டுப் பாடல்**

ஒரு நபரின் தலைமையின் கீழ் ஒரு குழுவாக இருந்து எனலாம். அதற்குச் சில நடைமுறைகள் கையாளப்படுகின்றன.

**காயா? பழமா? முறை**

குழுத் தலைவர் ஒரு சிறு கல்லினைக் கையில் வைத்துக் கொண்டு மற்றைய சிறுவரிடம் கையினை நீட்டுவார். நீட்டிய இரு கைகளில் கல்லுள்ள கையினைப் பிடித்தவரை “பழம்“ என்றும், கல்லில்லாத கையினைப் பிடித்தவரைக் “காய்“ என்றும் சொல்வதுண்டு. இதன் மூலம் தொட்டு வருபவரைத் தேர்ந்தெடுப்பர்.

**பாடல் முறை**

தொட்டு வருபவரைத் தேர்ந்தெடுக்கப் பாடல் முறையும் பயன்படுத்தப்படுகிறது. குழுவில் உள்ள ஒருவர், பாடலைச் சொல்லி தன்னோடு சேர்த்து, ஒவ்வொரு குழந்தையினையும் தொடுவார். பாடலின் இறுதிச் சொல் யார் மேல் முடிகிறதோ அவர் “பழம்“ இப்படியே எல்லோரும் பழமாக இறுதியில் நிற்பவர் தொட்டு வருபவராகிறார்.

“பச்ச தவக்கா பளபளங்க
பன்னீர் மச்சான் மினுமினுங்க

செங்கழனி செவத்தபுள்ள
ஆடுகட்டி ஓடிவா!
கிண்ணி வந்தா கிணுக்குப்புள்ள
கிட்டே வந்தா ஓடிப்போ!
அருளுக் குச்சிக்குத் தாலிகட்டி
சிங்காரத்திற்கு மேளம் போட்டு
சின்னாத்தூ ஓடிப்போ!”

என ஒவ்வொருவரையும் தள்ளி இறுதியில் நிற்போரே தொட்டுவருபவராய்த் தெரிவு செய்யப்படுகிறார்.

**தோல்விக்குத் தண்டனை**

குழு விளையாட்டுகளிலும், அணி விளையாட்டுகளிலும் தோல்வி பெறும் நபர்களுக்குத் தண்டணைக் குறித்துக் கூறுவதும் நடைமுறைப்படுத்துவதும் தலைவரின் பணி. சில நேரங்களில், சில விளையாட்டுகளில் விதிமுறை, தண்டனை வகுக்கப்பட்டிருந்தாலும் தலைவர் சொன்னால் தண்டனைத் தளர்வு உண்டு. இது உடன் விளையாடும் மற்ற நபர்களைப் பொறுத்தும் அமையும்.

**கல்லா? மண்ணா?**

சிறுவர் சிறுமியரால் விளையாடப்படும் விளையாட்டு இது. பட்டவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் தொடவேண்டும். பட்டவர் “கல்“ என்று சொன்னால் கல்லில் நிற்பவரை மட்டுமே தொடுவார். மண்ணில் நிற்பவரைத் தொடக்கூடாது. பட்டவர் “மண்“ என்று சொன்னால் மண்ணில் நிற்பவரை மட்டுமே தொடுவார். கல்லில் நிற்பவரைத் தொடக்கூடாது. பட்டவராகித் தொடுபவர் கல் என்று சொன்னதையும் மண் என்று சொன்னதையும் மாற்றிச் சொல்லிவிட்டுத் தொட முனைவார். தொட்டுவிட்டால் தொடப்பட்டவர் தொடுபவர் ஆகி ஆட்டம் தொடரும்.

**ஒரு குடம் தண்ணி எடுத்து**

இருபாலரும் இணைந்து விளையாடும் விளையாட்டாகும். இருவர் கோபுரம்போல் கைகோர்த்து உயரமாகப் பிடித்து நிற்க, மற்றவர்கள் ஒருவர் பின் ஒருவர் வரிசையாக உள் நுழைந்து வெளியில் வருவர்.

“ஒரு குடம் தண்ணி எடுத்து
ஒரு பூ பூத்ததாம்“

எனப் பத்து வரைப் பாடுவர்.

“பத்து குடம் தண்ணி ஊத்தி
பத்தே பூ பூத்ததாம்”

என்று உள்ளே நுழைந்து வரும் பொழுது கைகோர்த்து நிற்கும் சிறுவர்கள் கடைசியில் வருபவனைக் கைக்குள் அடக்கி விடுவார்கள்.

**பூப்பூ புளியம்பூ**

“ஒரு குடம் தண்ணி எடுத்து“ என்ற விளையாட்டைப் போலவே, சிறுமியர் மட்டும் விளையாடும் விளையாட்டு இது.

“பூப்பூ புளியம்பூ
பூத்துக் கிடக்கும் தாழம்பூ“

நுழைந்து சுற்றிவரும் போது பாடுவர். ஒரு சிறுமியை உள்ளே பிடித்துக் கொள்ளும்போது பின்வருமாறு உரையாடல் நிகழும்.

குழுவினர் : பிள்ளையை எதற்குப் பிடித்தாய்?

பிடித்தவர் : மண்ணை மிதித்தது!

குழுவினர் : மண்ணுக்கு மண் தாரேன்!

பிடித்தவர் : வேண்டாம்! வேண்டாம்!

குழுவினர் : மண்ணுக்குப் பொன் தாரேன்!

பிடித்தவர் : வேண்டவே வேண்டாம்!

குழுவினர் : மாமன் மகனைக் கட்டிக்கச் சொல்கிறேன்!

பிடித்தவர் : சரி சரி!

என்று கூறியதும் விட்டுவிடுவர்.

**தபால் தந்தி விளையாட்டு**

சிறுவர் சிறுமியர் வட்டமாக உட்கார்ந்து ஆடும் விளையாட்டு இது. ஒருவர் பட்டவர். அவருக்குத் தெரியாமல் ஒரு கல் வட்டத்தில் உள்ளவரிடையே கைமாறும். ஒருவா் கையில் கல் தங்கிவிட்டாலும், அவா் அடுத்தவரிடம் கல்லைக் கொடுத்துவிட்டது போல் நடிப்பார். இதனால் அந்தக்கல் யாரிடம் உள்ளது என்பது வைத்திருப்பவரைத் தவிர யாருக்கும் தெரியாது. மூன்று சுற்று கைமாற்றம் நிகழ்வதற்கு முன் பட்டவர் யாரிடம் கல் உள்ளது என்று சொல்லிவிட வேண்டும். சொல்லாவிட்டால் பட்டவரைக் குனியவைத்து அவர் முதுகில் ஆளுக்கொரு தட்டுத் தட்டுவர்.

சொல்லிவிட்டால் கல் வைத்திருந்தவர் முதுகில் அனைவரும் தட்டுவர். இப்படி ஆட்டம் முடிந்தபின் மீண்டும் புதிதாகப் பட்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அடுத்த ஆட்டம் தொடரும். கல்லைக் கடத்தும்போது,

“தந்தி போவுது தபால் போவுது”

திரும்பத் திரும்ப ராகத்துடன் எல்லாரும் சேர்ந்து பாடுவர்.

**குச்சிக்கல்**

சிறுவர்களால் தெருவில் விளையாடப்படும் விளையாட்டு. ஒரு சதுரமும் அதற்குள் ஒரு வட்டமும் போடுவர். வட்டத்துக்குள் 4 கற்கள் வைத்திருப்பர். 5 பேர் விளையாடுவர். விளையாடுவோர் எல்லாரும் சுமார் ஐந்தடி நீளமுள்ள குச்சி ஒன்று வைத்திருப்பர். முறையைப் பின்பற்றிப் பட்டவர் ஏதாவது ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். பட்டவர் தன் இரண்டு கால்களையும் பரப்பிச் சதுரத்தின் எதிர் எதிர் முனைகளில் வைத்துக்கொண்டு நிற்பார். அவர் தன் குச்சியைப் பிறர் தட்டுவதற்கு வசதியாகத் தன் தலைக்கு மேல் உயர்த்தி விரல் கவட்டையில் பிடித்துக்கொண்டிருப்பார். பழமேறியவரில் ஒருவர் தன் குச்சியால் தூக்கி எறிவார்.

பட்டவர் தன் காலடி வட்டத்துக்குள் இருக்கும் கற்களை எடுத்துச் சதுரத்தின் 4 முனைகளிலும் வைத்துவிட்டு ஓடி மற்றவர்களில் ஒருவரைத் தொடவேண்டும். பிறர் தப்பிக்க அங்குமிங்கும் ஓடிச் சதுரத்தின் முனைகளில் வைக்கப்பட்டுள்ள கல் ஒன்றில் காலை ஊன்றிக்கொண்டு நிற்க வேண்டும். இடையில் தொடப்பட்டுவிட்டால் தொடப்பட்டவர் பட்டவராக மாறி விளையாட்டுத் தொடரும். யாரையும் தொடாவிட்டால் பட்டவர் தன் குச்சி கிடக்கும் இடத்திலிருந்து உத்திக்கட்டம் வரையில் தன் குச்சியை வாயில் கவ்விக்கொண்டு நொண்டி அடித்துக்கொண்டு வந்து சேர வேண்டும்.

வாயில் குச்சியுடன் நொண்டி அடித்துக் கொண்டு பட்டவர் வரும்போது மற்றவர்கள்,

“எங்க வீட்டு நாயி
எலும்பு கடிக்கப் போனது
கல்லால் அடிச்சேன்
கால் ஒடிஞ்சுப் போச்சு“

என்ற பாடலைப் பாடுவர்.

**கல்லொடு ஓடு**

ஓர குழு விளையாட்டு இது. தலைவா் ஒருவா் இருப்பாா். அவா் தம் கையிலுள்ள ஒரு கல்லை மற்றவருக்குக் காட்டுவார். மற்றவர்கள் அவர்முன் பிறைபோல் வளைவாக நிற்பர்.

“கல்லுக் கொடுத்தான் கல்லே வா“

என்று பாடிக்கொண்டு ஒவ்வொருவர் கையிலும் கல்லைக் கொடுப்பதுபோல் நடிப்பார். அனைவரும் தம் கையில் கல் வாங்கியது போல் கையை மூடிக்கொண்டு நடிப்பர். ஒருவரிடம் உண்மையாகவே கல் கொடுக்கப்படும்.

இறுதியில் “கல்லைக் கொண்டு ஓடிப்போ“ என்று தலைவர் பாடியதும் கல்லைக் கையில் வைத்திருப்பவர் ஓடி, முன்பு குறிக்கப்பட்ட உத்தி இடத்தைத் தொடவேண்டும். உத்தி இடத்தை அவர் அடைவதற்கு முன் பிறர் அவரைத் தொட முனைவர். கல் வைத்திருப்பவர் இடையில் தொடப்பட்டுவிட்டால், ஆட்டம் முன்பு போல் மீண்டும் ஆடப்படும். கல் வைத்திருப்பவர் பிறரிடம் பிடிபடாமல் உத்தியைத் தொட்டுவிட்டால், ஏனையோரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர்மேல் குதிரை ஏறிக்கொண்டு தலைவர் இருக்குமிடம் வரையில் சவாரி செய்யலாம்.

**நெல்லிக்காய் விளையாட்டு**

நெல்லிக்காய் என வழங்கப்படும் இந்த விளையாட்டு பாடித் தொடும் விளையாட்டு வகையைச் சேர்ந்தது. திருமணவிழாக் காலங்களில் போடப்பட்டிருக்கும் பந்தலில் சிறுவர் சிறுமியர் இவ்விளையாட்டை விளையாடுவர். விளையாடுவோரின் எண்ணிக்கையில் ஒன்று குறைந்த எண்ணிக்கையில் பிடிக்க வேண்டிய பந்தற்கால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும். பந்தற்காலைப் பிடித்துக்கொண்டால் தொடக்கூடாது

என்பது விளையாட்டு விதி. இவ்விளையாட்டில் ஓடிக்கொண்டிருக்கும்போது தொட்டு வருபவர் அல்லது அவ்வப்போது தோற்றவர் பாடுவார்.

“காயோ கடப்பங்காய்
காஞ்சிபுரத்துப் புளியங்காய்
உப்போ புளியங்காய்
ஊறுகாய் போட்ட நெல்லிக்காய்!”

“நெல்லிக்காய்“ என்றதும் தூணைப் பற்றிக்கொள்ள வேண்டும். பற்றிக் கொள்ள தூண் இல்லாதவர் தொட்டுவருபவர் ஆகிடுவார்.

**ஆலமர விளையாட்டு**

சிறுவர் சிறுமியர் விளையாட்டுகளில் ஒன்று இது. ஒருவர் குருவியாகவும், மற்றவர் மரங்களாகவும் நடிப்பர். பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்னும் நீதியைப் புகட்டும் நடிப்பு விளையாட்டு இது. புதரில் சிக்குண்டு பறந்து வரும்போது சிறகு ஒடிந்த குருவி ஒன்று தனக்குக் கூடு கட்டிக்கொள்ள மரங்களைப் பார்த்து இடம் கேட்பது போலவும், வாழைமரம், தென்னைமரம், பனைமரம் போன்றவைப் பல காரணங்களைக் கூறி இடம் தரத் தட்டிக்களிப்பது போலவும், ஆலமரம் இடம் தருவது போலவும் உரையாடி இவ்விளையாட்டு விளையாடப்படும்.

குருவி : கிய்யா கிய்யா குருவி நான்
சிறகொடிந்த குருவி நான்
வாழை மரமே வாழை மரமே
மழைகாலத்தில் கூடு கட்ட
நீ இடம் தருவாயா?

வாழைமரம் : மழையில் நான் சாய்ந்திடுவேன்
இடம் தர மாட்டேன்!

குருவி : தென்னைமரமே தென்னைமரமே
மழைக்காலத்தில் கூடு கட்ட
நீ இடம் தருவாயா?

தென்னைமரம் : காற்றில் நான் அசைந்திடுவேன்

இடம் தர மாட்டேன்!

குருவி : பனை மரமே பனை மரமே

மழைக்காலத்தில் நான் தங்க

நீ இடம் தருவாயா?

பனைமரம் : குறுகிய கூந்தல் எனக்குண்டு

இடம் தர மாட்டேன்!

குருவி : ஆல மரமே ஆல மரமே

மழைக்காலத்தில் நான் தங்க

நீ இடம் தருவாயா?

ஆலமரம் : அநேக இடம் எனக்குண்டு

உனக்கு நான் இடம் தாரேன்

**குரங்கு விளையாட்டு**

தேவர்குளம் வட்டாரச் சிறுவர்கள் குற்றாலத்திற்குச் செல்வதும். அங்குள்ள குரங்குகளைக் காண்பது வழக்கமான ஒன்றாகும். அங்கு குரங்குகள் செய்யும் சேட்டைகளைக் கவனித்து இருக்கும் சிறுவர்கள். விளையாடும்போது யாரெனும் ஒருவர் உயரமான இடத்தில் ஏறி நின்றால்,

"குத்தாலத்துக் குரங்கு
குப்பைய விட்டு இறங்கு"

என்று கேலியாகப் பாடுவர்.

சிறுவர் சிறுமியர் தொட்டு விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று குரங்கு விளையாட்டாகும். உள்வட்டம் ஒன்று, வெளிவட்டம் ஒன்று போடுவர். பட்டவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அவரைக் குரங்கு என்பர். அவரை நடுவில் உள்ள உள்வட்டத்துக்குள் உட்கார வைப்பர். மற்றவர்கள் வெளிவட்டக் கோட்டில் உட்காருவர். முதலில் குரங்குடன் உரையாட விளையாட்டத் தொடங்கும்.

வட்டத்தில் உள்ளவர் : குரங்கே குரங்கே மணி எத்தனை

குரங்கு : ஒன்று

வட்டத்தில் உள்ளவர் : குரங்கே குரங்கே மணி எத்தனை

குரங்கு : இரண்டு --- (எனப் பத்து வரை தொடர்வர்)

வட்டத்தில் உள்ளவர் : குரங்கே குரங்கே மணி எத்தனை

குரங்கு : பத்து

பத்து என்றதும் எல்லாரும் எழுந்து ஓடுவர். தான் இருந்த வட்டத்திற்குள் மற்றவரை நுழையவிடாமல், குரங்கு ஓடுபவரைப் பிடிக்க வேண்டும். ஓடுபவர் குரங்கு இருந்த வட்டத்துக்குள் நுழைந்துவிட்டால் அவரைக் குரங்குத் தொடக்கூடாது. இலலையெனில் பிடிபட்டவர் குரங்காக்கப்படுவார்.

**சாம்பலெடு விளையாட்டு**

ஐந்து வயது முதல் பத்து வயதுக்கு இடைப்பட்ட ஆண் பெண் இருபாலரும் விளையாடும் விளையாட்டு இதுவாகும். ஒருவர் தலைமை பொறுப்பை ஏற்கிறார். அனைவரும் வட்டமாக நெருங்கி உட்கார்ந்து இருகை விரல்களையும் தரையில் ஊன்றியவாறு வைப்பர். இரண்டு விரல்களுக்கு இடையே உள்ள இடைவெளியை அடுப்பாகக் கற்பனை செய்து கொள்வர்.

முதல்நாள் பயன்படுத்திய விறகு அடுப்பிற்குள் சாம்பலாய்க் கிடக்க, தலைவி அச்சாம்பலை வெளியே எடுத்துவிட்டு, பெருக்கி, மெழுகி, கோலம் போட்டு, விறகு வைத்து, தீமூட்டி, தோசைக்கல்லை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் தடவி, மாவை ஊற்றி, திருப்பிப் போட்டு, தோசை வெந்து விட்டதா இல்லையா என்று தலைவி இடையிடையே பார்ப்பது போல் விளையாட்டுத் தொடரும். வெந்தபின் தோசையை எடுத்து அடுக்கி வைத்துவிட்டு, நான் குளித்துவிட்டு வரும்மட்டும் அப்படியே இருக்கட்டும் என்று சொல்லி விட்டு, தள்ளிப் போய் குளிப்பது போல பாவனை செய்வாள். அதற்குள்ளாக எல்லாரும் தோசையை அவசர அவசரமாகச் சாப்பிட்டு விடுவர். குளித்து விட்டு வரும் தலைவி, தோசை காணாமல் போனதைக்கண்டு எங்கே என்று கேள்வி கேட்க மற்றவர் பதில் அளிப்பது போல் இவ்விளையாட்டு அமையும்.

தலைவி : சாம்பலெடு! சாம்பலெடு!

பெருக்கு ! பெருக்கு

மெழுகு! மெழுகு!

கோலம் போடு! கோலம் போடு

விறகு வைங்க ! விறகு வைங்க !

தீமூட்டுங்க! தீமூட்டுங்க!

தோசக்கல்ல போடுங்க!

தோசக்கல்ல போடுங்க!

(ஒவ்வொருவர் கையையும் தொட்டுச் சொல்லும் போது உயரமாக வைத்திருக்கும் கைகளை மற்றவர் தோசைக்கல் அகலத்திற்குக் குறைத்துக் கொள்வர். தொடர்ந்து ஒவ்வொரு கையிலேயும்)

எண்ண தடவுங்க!

சுரீர்!

எண்ண தடவுங்க!

சுரீர்!

மாவூத்துங்க!

சுரீர்!

மாவூத்துங்க!

சுரீர்! (எனக் கூறுவர். தோசை வேகுவதற்கு நேரம் கொடுத்து)

வெந்துட்டா வேகலையா?

(ஒவ்வொருவரின் புறங்கைகளையும் கிள்ளித் தூக்கிப் பார்ப்பார்)

வெந்துட்டா வேகலையா? (முதல்முறை)

வேகலை!

வெந்துட்டா வேகலையா? (அடுத்த முறை)

வெந்துட்டு!

(எனக் கூறியவாறு, தோசையை அடுக்குவது போல ஒவ்வொருவரின் கையை எடுத்து ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்குவார்)

பல் தேய்ச்சி குளிச்சிட்டு வரேன் பார்த்துக்கோங்க!

(என்று கூறி தலைவி பல் தேய்க்கச் சென்றுவிட அனைவரும் தோசையைத் தின்பது போல பாவலா செய்வர். திரும்பி வரும் தலைவி)

தலைவி : தோசையைத் தின்னது யாரு?

குழு : கள்ளன் தின்னுட்டப் போயிட்டான்

தலைவி : கள்ளன எங்க?

குழு : மரத்து மேல

தலைவி : மரத்த எங்க?

குழு : வெட்டியாச்சு

தலைவி : வெட்ன கட்டைய எங்க?

குழு : விறகாயிருச்சு

தலைவி : விறகு எங்க?

குழு : தீ எரிச்சாச்சு

தலைவி : தீ எங்க?

குழு : சாம்பலாயிருச்சு!

தலைவி : சாம்பல் எங்க?

குழு : பல் தேய்சாச்சு

தலைவி : பல் எங்க?

குழு : ஈஈஈ.. (பல்லைக் காண்பிப்பர்)

**தத்தைக்கா புத்தைக்கா**

சிறுவர் சிறுமியர் குழுவாக இணைந்து விளையாடும் விளையாட்டு இது. குழுவினர் வட்டமாக நெருங்கி உட்கார்ந்து, கைகளைத் தரையில் பதித்து வைப்பர். குழுவில் உள்ள ஒருவர் முதலில் மற்றவர் புறங்கைகளைத் தம் விரலால் தொட்டவாறு

தத்தைக்கா புத்தைக்கா
தவளச் சோறு
எட்டு எருமை
பன்னி பாலு
பறையன் வந்து நீராட
பறையன் வந்து நெல்லு குத்த
கூப்பிடுங்க கொல போடுங்க
குறத்தி மவா கை எடுங்க

எனப் பாடுவார். “கையெடுங்க“ என யார் கை மீது விரல் வைக்கும் போது முடிகிறதோ, அவர் உள்ளங்கையை மாற்றி வைக்க வேண்டும். உள்ளங்கையையும் தொட்டுவிட்டால் கையை எடுத்துவிட வேண்டும். இவ்வாறு இறுதி கை வரை தொட்டுப் பாடிக் கொண்டே இருப்பர்.

**சினுக்குவளி**

கால்களை நீட்டி மற்றவர் கால்களில் உதைந்துகொண்டு, சிறுமியர் வட்டமாக உட்காருவர். கைகளை மடக்கி அவரவர் விலாவைப் புடைத்துக்கொண்டு பாடல் பாடிக்கொண்டே பக்கவாட்டில் நகர்வர்.

“அக்கக்கா சினுக்குவளி

ஆவுடையக்கா சினுக்குவளி

அக்கக்கா சினுக்குவளி

ஆவுடையக்கா சினுக்குவளி

எனப் பாடிக்கொண்டே, கூந்தலைச் சிக்கெடுக்கப் பயன்படுத்தும் சினுக்குவளி போல ஒரு குச்சியைக் கைமாற்றிக் கொண்டிருப்பர். கடைசி நபருக்கு வருகிற போது, அனைவர் கால்களும் சேர்ந்திருக்கும் குழி போன்ற இடத்தைக் கிணறாகக் கருதி அதற்குள் போட்டு விட்டு, கிணற்றுக்குள் தவறி விழிந்திருச்சு எனக் கூறுவர்.

**குடுகுடு ராசா**

இருபாலரும் வட்டமாக நெருங்கி உட்கார்ந்து,

“குடுகுடு ராசா
குண்டமணி ராசா
காது ராசா
காத்தப்பிடி ராசா“

என ஒவ்வொரு முறை பாடும்போதும், அருகில் இருப்பவர் காதை ஒவ்வொருவராகப் பிடிப்பர். இறுதியாக எல்லோரும் மற்றவர் காதுகளைப் பிடித்துக்கொள்வர்.

இறுதியில்,
குடுகுடு ராசா
குண்டமணி ராசா
காது ராசா
காத்தவிடு ராசா

எனக் கூறியவாறு, ஒரே நேரத்தில் காதைப் பிடித்திருக்கும் கைகளை விட்டுவிடுவர்

**குலை குலையா முந்திரிக்கா**

சிறுவர் சிறுமியர் இருவரும் இணைந்து குழுவாக விளையாடும் விளையாட்டு இது. குழுவினர் வட்டமாக உட்கார்ந்திருக்க, ஒரு சிறுவன் கையில் ஒரு துணியைக் கையில் சுருட்டி வைத்துக்கொண்டு, குழுவினரைச் சுற்றி வந்து, குழுவினருள் யாரேனும் ஒருவர் பின்னால் அத்துணியை யாரும் கவனிக்காதவாறு வைத்துவிட, அவர் எழுந்து, சுற்றி வருபவரைத் துரத்த வேண்டும். முன் அவரைத் தொட்டுவிட்டால், அவர் இடத்தில் உட்காரும் அச்சிறுவன் சுற்றிவர வேண்டும். தொடும்முன் உட்கார்ந்து விட்டால், மீண்டும் அவரே சுற்றி வர வேண்டும்.

சிறுவன் : குலை குலையா முந்திரிக்கா

குழு : நரிய நரிய சுத்திவா

சிறுவன் : கொள்ளை அடிச்சவன் எங்கிருக்கான்

குழு : கூட்டத்தில் இருக்கான் கண்டுபிடி

சிறுவன் : அம்மா... வாசை

குழு : அடுப்புல தோசை

சிறுவன் : பச்சரிசிய தின்பேன்

குழு : பல்லை உடைப்பேன்

சிறுவன் : ஓட்டு மேல ஏறுவேன்

குழு : ஈட்டிய வைச்சு குத்துவேன்

சிறுவன் : கப்பலடி கப்பல்

குழு : தூத்துக்குடி கப்பல்

சிறுவன் : குலையா குலையா முந்திரிக்கா

குழு : நரிய நரிய சத்தி வா

**கொக்கு விளையாட்டு**

பட்டவர் கொக்கைப் போல் ஒற்றைக்காலில் நிற்க எல்லாரும் வினா-விடையாகப் பாடி மகிழும் விளையாட்டு இது. மற்றவர் வினவ, கொக்காக நிற்பவர் ஒற்றைக்காலில் நின்றவாரே விடை கூற வேண்டும்.

எவ்வளவு நேரம் ஒற்றைக் காலால் நிற்கமுடியும் என்னும் திறனை அளவிடுவதும், கேட்கும் கேள்விக்கு விடை கூறும் திறனை அறிதலும் இவ்விளையாட்டின் நோக்கமாகும்.

மற்றவர் : கொக்கே கொக்கே எங்கே போன?

கொக்கு : மீன் பிடிக்க!

மற்றவர் : மீன் எங்க?

கொக்கு : குளத்துல!

மற்றவர் : குளம் எங்க?

கொக்கு : ஊருக்கு மேற்க!

மற்றவர் : மேற்க என்ன பார்த்த?

கொக்கு : சூரியன் மறையிறத?

மற்றவர் : வேற என்ன பார்த்த?

கொக்கு : ஆலமரம் பார்த்தேன்.

மற்றவர் : ஆலமரம் எப்படி இருக்கும்?

கொக்கு : “இப்படி இருக்கும்“

எனக் கைகளை அகலமாய் விரித்துக் காண்பிக்க, கொக்காய் நிற்பவர் சில நேரங்களில் தடுமாறி காலை ஊன்றி விடுவர். அதில் கொக்காய் நடிப்பவர் கால் ஊன்றாமல் பதில் சொல்லிவிட்டால் மீண்டும் வினாக்கள் தொடரும்.

மற்றவர் : ஆலமரத்தில் எது தங்கும் ?

கொக்கு : பறவை தங்கும்

மற்றவர் : பறவை எப்படிப் பறக்கும்?

என விழச்செய்யும் நோக்கத்தோடே வினாக்கள் தொடுக்கப்படும்.

**ஊசி தேடல்**

இது ஒரு குழு விளையாட்டாகும். “பாட்டி“ மாதிரி ஒருவர் கம்பு ஊன்றியவாறு, ஏதோ ஒன்றைத் தேடுவதுபோல் நடிக்க, சிறுவர்கள் பாட்டியிடம் உரையாடுவது போன்று அமைந்தது இவ்விளையாட்டு.

சிறுவர்கள் : பாட்டி பாட்டி என்ன தேடுத?

பாட்டி : ஊசி தேடுதேன்.

சிறுவன் : ஊசி எதுக்கு?

பாட்டி : பை தைக்க.

சிறுவன் : பை எதுக்கு?

பாட்டி : துட்டுப் போட.

சிறுவன் : துட்டு எதுக்கு?

பாட்டி : அருவா வாங்க.

சிறுவன் : அருவா எதுக்கு?

பாட்டி : உங்கள வெட்ட! (என விரட்டுவார்)

**பாட்டி பாட்டி எங்க போற**

இதுவும் ஒரு குழு விளையாட்டாகும். "பாட்டி" மாதிரி ஒருவர் கம்பு ஊன்றியவாறு, எங்கோ செல்வது போல் நடிக்க, சிறுவர்கள் பாட்டியிடம் உரையாடுவது போன்று அமைந்தது இவ்விளையாட்டு.

குழுவினர் : பாட்டி பாட்டி எங்க போற?

பாட்டி : விறகு பொறக்கப் போறேன்

குழுவினர் : விறகு எதுக்கு

பாட்டி : அடுப்பு எரிக்க

குழுவினர் : நான் வாரேன்

பாட்டி : நெருஞ்சி குத்தும் செருப்பு இருக்கா?

குழுவினர் : இல்லை

பாட்டி : என் வீட்ல செருப்பு இருக்கு, போய் அடுப்புல பால் வச்சிருக்கேன். கொட்டிறாம பாத்து எடுத்துட்டு வாங்க (குழந்தைகள் பாலைக் குடித்துவிட்டு)

குழுவினர் : பாட்டி பாட்டி பாலை பூனை குடிச்சிருச்சு

பாட்டி : "புடி புடி" (சிறுவர்களை விரட்டல்)

**கண்ணாமூச்சி**

குழுவாக விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்று கண்ணாமூச்சி. இவ்விளையாட்டில், தொட்டு வருபவரைத் தலைவர் ஏதேனும் ஒருமுறையில் தெரிவு செய்கிறார். பின்னர், தொட்டு வருபவர் கண்ணினை, தலைமை ஏற்பவர் மூடிக்கொள்ள, மற்ற குழந்தைகள், ஓடி ஒளிந்து கொள்வர். மற்றவர்கள் ஓடி ஒளிந்து கொள்ளும் நேரத்தில் தலைவருக்கும் தொட்டுவருபவருக்கும் இடையில் கீழ்க்கண்டவாறு உரையாடல் நிகழும்.

தலைவர் : கண்ணா மூச்சி ரேரே

தொட்டுவருபவர் : உம்.. ம்..ம்..

தலைவர் : எத்தனை முட்டையிட்டே?

தொட்டுவருபவர் : மூணு முட்டையிட்டேன்

தலைவர் : ஒரு முட்டையைத் தின்னுப்புட்டு, ஒரு முட்டையைத் தண்ணியிலே போட்டுட்டு, ஒரு முட்டையைக் கொண்டு வா!

பாடல் முடிந்தவுடன் தொட்டு வருபவரின் கண்ணைத் தலைவர் விட்டு விடுவார். தொட்டுவருபவர், ஒளிந்திருக்கும் மற்ற குழந்தைகளைத் தேடுவார். தொட்டுவருபவர் ஒவ்வொருவராய்க் கண்டுபிடிக்க கண்டுபிடிக்கத் தலைவரை வந்து தொட்டு விட்டு “ஐஸ் பால் ஒன்னு, இரண்டு, மூணு எனக் கூறுவார். தொட்டுவருபவரிடம் கண்களில் முதலில் அகப்படுவர் பட்டவராகிறார். தொட்டுவருபவர் தேடும்பொழுது அவரிடம் அகப்படாமல் குழந்தைகள் தலைவரைத் தொட்டுவிட்டால் அவர்கள் பழமாவார்கள். மீண்டும் அவரே தொட்டு வரவேண்டும்.

**ஐயன் கொம்பு**

இது ஒரு குழு விளையாட்டாகும். குழுவில் உள்ள ஒவ்வொருவரும் ஒருவர் கை மீது மற்றவர் கை வைக்க குழுத் தலைவர் ஒவ்வொருவர் கையையும் தொட்டு “இதாரு கொம்பு?” எனக் கேட்க உரையாடல் தொடரும்.

தலைவர் : இதாரு கொம்பு?

குழுவினர் : ஐயன் கொம்பு!

துலைவர் : ஐயன எங்க ?

குழுவினர் : பூப்பறிக்க

தலைவர் : பூ எங்க ?

குழுவினர் : தண்ணியில கிடக்கு

தலைவர் : தண்ணிய எங்க ?

குழுவினர் : ஆடு மாடு குடிச்சிருச்சு

தலைவர் : ஆடு மாடு எங்க ?

குழுவினர் : கள்ளன் பிடிச்சிட்டுப் போயிட்டான்!

தலைவர் : கள்ளன எங்க?

குழுவினர் : மரத்தில இருக்கான்!

தலைவர் : கள்ளன வெட்டவா குத்தவா ?

எனக் கேட்கக் குழுவினர் : வெட்டணும் எனக் கூறினால், தலைவர் தம் கைகளால் வெட்டுவதற்கும், குத்தணும் எனக் கூறினால் குத்துவதற்கும் கையை ஓங்கும்போது, மற்றவர் எல்லாரும் கைகளை எடுத்துவிடுவர். தலைவரின் கைக் கீழே தரையில் பட்டு விடும்.

**எலியும் பூனையும்**

எலியும் பூனையும் விளையாட்டில் பங்கு பெறுவோர் வட்டமாக நின்று கொள்வர். அவர்களில் ஒருவர் எலியாகவும் ஒருவர் பூனையாகவும் நடிப்பார். எலியாக நடிப்பவர் வட்டத்திற்கு உள்ளேயும் பூனையாக நடிப்பவர் வட்டத்திற்கு வெளியேயும் நிற்பர்.

இப்பொழுது பூனை, "எலி என்ன செய்யுது?" என்ற வினாவோடு பாடலைத் தொடங்கும். அதற்கு வட்டத்தில் நிற்போர் "தூங்குது" என்று பதில் கூறுவர். மீண்டும் "எலி இப்ப என்ன செய்யுது?" என்று பூனைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும். எலியின் செயல்களுக்கு ஏற்ப வட்டத்தில் உள்ளோர் "எழுந்திருக்கிது. பல் தேய்க்கிது. சாப்பிடுது, சட்டை போடுது" என்று பதில் கூறிக்கொண்டே வருவர்.

பூனை : எலி என்ன செய்யுது?

குழுவினர் : தூங்குது

பூனை : எலி இப்ப என்ன செய்யுது?

குழுவினர் : எழுந்திருக்கிறது

பூனை : எலி இப்ப என்ன செய்யுது?

குழுவினர் : பல் தேய்க்கிது

பூனை : எலி இப்ப என்ன செய்யுது?

குழுவினர் : சாப்பிடுது

பூனை : எலி இப்ப என்ன செய்யுது?

குழுவினர் : சட்டை போடுது

பூனை : எலி இப்ப என்ன செய்யுது?

குழுவினர் : வெளியே வரப்பார்க்குது

கடைசியாக "வெளியே வரப் பாக்குது" என்று கூறியவுடன் பூனை எலியைப் பிடிக்கத் தயாராகிவிடும். பூனை வட்டத்திற்கு உள்ளே வந்துவிட்டால் எலி வெளியே ஓடி விடும். பூனை வெளியே வந்தால் எலி வட்டத்திற்குள் ஓடிவிடும். வட்டத்தில் நிற்போர் எலிக்கு ஆதரவாகச் செயல்படுவர். அதையும் மீறிப் பூனை எலியைப் பிடித்துவிட்டால் ஆட்டம் முடிந்துவிடும். பின் வேறு இருவர் எலியும் பூனையுமாக மாறி விளையாட்டைத் தொடருவர். யார் திறமையானவர் எலியா? பூனையா? என்று பலம் பார்ப்பதும், சிறியோரின் நடிப்புத் திறனை வெளிப்படுத்துவதும் இந்த விளையாட்டின் அடிப்படையாகும்.

**அணி பிரித்து விளையாடுவது**

மெல்லவந்து முள்ளிப்போ, பூச்சொல்லி போன்ற விளையாட்டுகளில் இரு உத்திதாரர் இருக்கிறார்கள். இவை அணி பிரிந்து விளையாடும் விளையாட்டுகள் ஆகும். அணி பிரிந்து விளையாடும் விளையாட்டுகளில் இரு தலைவர்கள் இருப்பர். இவ்விருவரும் தங்கள் அணிக்கு ஆட்களைத் தெரிவு செய்தல், பின் விளையாட்டை நடத்தல் போன்ற பணிகளைச் செய்கின்றனர்.

**கட்சி பிரித்தல்**

அணி பிரித்து விளையாடும் விளையாட்டுகளில் கட்சி பிரித்து ஆடும் முறை காணப்படுகிறது. இது உத்தி பிரித்தல், அணி பிரித்தல் என்றும் கூறப்படுவது உண்டு. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு தலைவர் நியமிக்கப்படுவார். தங்கள் கட்சிக்கான விளையாட்டு உறுப்பினர்களைத் தலைவர்களே தேர்ந்தெடுப்பர்.

தலைவர்கள் தவிர்த்த ஏனையோர், இருவர் இருவராகப் பிரிந்து தங்களுக்கு இரு பெயர்களை வைத்து வந்து,

முதல் உத்தி வருபவர் : உத்தி உத்தி யாரு உத்தி?

முதல் குழுத் தலைவர் : என் உத்தி

முதல் உத்தி வருபவர் : சிங்கம் வேண்டுமா? புலி வேண்டுமா?,

முதல் குழுத் தலைவர் : புலி

இரண்டாம் உத்தி வருபவா் : உத்தி உத்தி யாரு உத்தி?

இரண்டாம் குழுத் தலைவர் : என் உத்தி

இரண்டாம் உத்தி வருபவர் : தாமரைப் பூ வேண்டுமா? மல்லிகைப்பூ வேண்டுமா?

இரண்டாம் குழுத் தலைவர் 2 : தாமரைப் பூ.

தலைவர்கள் எப்பெயரைக் கேட்கின்றனரோ அப்பெயருக்கு உரியவர்கள் அந்தந்தத் தலைவரின் கட்சியில் இடம் பெறுவர். மற்றவர் அடுத்த அணியில் இடம் பெறுவர். இவ்வாறு இறுதிவரை விளையாட உள்ளோர் உத்திப் பிரிக்கப்பட்டு, இரு கட்சியாகப் பிரிந்து பின்னர் விளையாடத் தொடங்குவர்.

**தொடங்கும் முறை**

இரு கட்சியினராகப் பிரிந்த நிலையில் எந்தக் கட்சி முதலில் விளையாடத் தொடங்குவது என்பதை முடிவு செய்வதற்குச் சிலதேர்வு முறைகள் பின்பற்றப்படுவதுண்டு. உடைந்த ஓட்டில் எச்சில் தடவி உயரே போட்டுப் பார்த்தல், நாணயத்தைச் சுண்டிவிட்டுப் “பூவா? தலையா? பார்த்தல் ஆகிய முறைகள் பின்பற்றப்படுவதுண்டு. இன்றைய விளையாட்டுகளிலும் இம்முறை பின்பற்றப்பட்டு வருவதைக் காணலாம். இதனையே தற்பொழுது டாஸ் போடுதல் என்று கூறுகிறோம்.

**இடை நிறுத்தல்**

நாட்டுப்புற விளையாட்டுகளில் பங்குபெறும் நபர்களில் யாரேனும் தவிர்க்க வியலாத காரணத்தால் கலந்து கொள்ள இயலாத நிலை வரும்போது “இடை நிறுத்தல்“ என்ற செய்கை நடைபெறுகிறது. ஆடை ஆவிழ்வது, கூந்தல் கலைவது, உடலில் அடிபடல் போன்றவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். அச்சமயம் “தூ“ என்பதைத் தலைவரிடமும், மற்ற நபர்களிடம் தெரிவிக்கின்றனர். தோற்றவரின் நிலை விளையாட்டின் இறுதியில் யாராவது தோற்க நேர்ந்தால், “தோத்தாங்கோலி“ என்ற பட்டம் கொடுப்பர். சில விளையாட்டுகளில் தோற்றவர் மேல் குதிரை ஏறுதல், தலையில் குட்டுதல், கோலிக் குண்டைக் கை முட்டியால் தரை மீது தேக்கச் செய்தல், பாடிக் கொண்டே குறிப்பிட்ட தூரம் வரை ஓடித் திரும்பச் செய்தல் போன்ற தண்டனைகள் வழங்கப்படுவது உண்டு. இத்தகைய தண்டனைகள் இழிவாகக் கருதப்படுவது இல்லை. விளையாட்டுப்போல் அமைவதும் உண்டு. தண்டனைகளே தனி

**ஒழுங்கு முறைகள்**

விளையாட்டில் பங்கு பெறுவோர் நேர்மையாக நடத்தல், உடன் ஆடுவோர், எதிர்த்து ஆடுவோர், நடுவர், பார்வையாளர் ஆகியோரை மதித்தல், விளையாட்டு விதிமுறைகளுக்குக் கட்டுப்படுதல் போன்றவையும் விளையாட்டில் கடைப்பிடிக்கத் தக்கவையாகக் கருதப்படுகின்றன.

**பூப்பறிக்க வருகிறோம்**

சிறுமியர் குழுவாக இணைந்து ஆடும் விளையாட்டு இது. சிறுமியர் பூக்குழு, பூப்பறிக்கும் குழு என இரு குழுக்களாகப் பிரிந்து எதிர் எதிர் வரிசையில் நின்று கொள்வர். பூக்குழுவில் இடம்பெறும் சிறுமியர் ஒவ்வொருவரும் ஒரு பூவின் பெயரைத் தங்களுக்குச் சூட்டிக் கொள்வர். சிலர் தங்கள் பெயருக்குப் பின்னால் தேவி பூ, செல்வி பூ, எழில் பூ என்று சூட்டிக் கொள்வதும் உண்டு. யார் யார் எந்தப் பூவின் பெயரைச் சூட்டியுள்ளனர் என்பது பூப்பறிக்கும் குழுவிற்குத் தெரியாது. பூப்பெயர் தெரியாத நிலையில் தேவி பூ. கமலா பூ என்று பெயரைக் குறிப்பிட்டே அழைப்பதும் உண்டு. பூப்பறிக்கும் குழுவினருக்குத் தனிப் பெயர் சூட்டப்படுவதில்லை.

**விளையாடும் முறை**

முதலில் பூப்பறிக்கும் குழு எதிர்வரிசையில் நிற்கும் பூக்குழுவினரிடம், “பூப்பறிக்க வருகிறோம்“, “பூப்பறிக்க வருகிறோம்“ என்று பாடிக் கொண்டே முன்னேறிச் செல்வர். பூக்குழுவினர் “எந்த மாதம் வருகிறீர்? எந்த மாதம் வருகிறீர்?“ என்று பாடிக்கொண்டு முன்னோக்கி வருவர். “ஐப்பசி மாதம் வருகிறோம்“ என்று பாடிக்கொண்டு முன்னோக்கி வருவர். பூக்குழுவினர் “எந்தப் பூவைப் பறிக்கிறீர்?

“எந்தப் பூவைப் பறிக்கிறீர்?“ என்று பாடிக்கொண்டு முன்னோக்கி வருவர். பூக்குழு முன்னோக்கி வரும்போது பூப்பறிக்கும் குழுவினர் பின்னோக்கிச் செல்வர். மீண்டும் பூப்பறிக்கும் குழுவினர் “தேவி பூவைப் பறிக்கிறோம். “தேவி பூவைப் பறிக்கிறோம்“ என்று பாடிக் கொண்டு முன்னோக்கிச் செல்வர். இப்படியாக இரு குழுவினரும் பாடிக் கொண்டே முன்னோக்கியும் பின்னோக்கியும் சென்று வருவர். இறுதியில், பறிக்கப் போகும் பூ அடையாளப்படுத்தப்பட்டவுடன் அடையாளப்படுத்தப்பட்ட சிறுமியும் பூவைப் பறிக்கும் குழுவிலிருந்து ஒரு சிறுமியும் முன்னால் வந்து எதிர்எதிர் நின்று கொள்வர். குழுவிலுள்ள ஏனையோர் ஒருவர் பின் ஒருவராக நின்று கொள்வர். பின் பூப்பறிக்கும் குழுவினர் தாங்கள் விரும்பிய பூவைத் தங்கள் பக்கம் இழுக்க முயற்சி மேற்கொள்வர்.

பூவைப் பறித்துத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டு மீண்டும் விளையாட்டைத் தொடருவர். கடைசிப் பூவைப் பறிக்கும் வரை விளையாட்டுத் தொடர்ந்து கொண்டே இருக்கும். எந்த அணியினர் அதிகப் பூவை பறித்துள்ளனரோ அவ்வணியே வெற்றிப் பெற்றதாகக் கருதப்படும்.

முதல் குழுவினர் : பூப்பறிக்க வருகிறோம்! பூப்பறிக்க வருகிறோம்!

இரண்டாம் குழுவினர் : எந்த மாதம் வருகிறீர்? எந்த மாதம் வருகிறீர்?

முதல் குழுவினர் : ஐப்பசி மாதம் வருகிறோம்! ஐப்பசி மாதம் வருகிறோம்!

இரண்டாம் குழுவினர் : எந்தப் பூவைப் பறிக்கிறீர்? எந்தப் பூவைப் பறிக்கிறீர்?

முதல் குழுவினர் : தேவி பூவைப் பறிக்கிறோம்! தேவி பூவைப் பறிக்கிறோம்!

இரண்டாம் குழுவினர் : யாரை விட்டுப் பறிக்கிறீர்? யாரை விட்டுப் பறிக்கிறீர்?

முதல் குழுவினர் : எழிலை விட்டுப் பறிக்கிறோம்! எழிலை விட்டுப் பறிக்கிறோம்!

இரண்டாம் குழுவினர் : என்று வந்து பறிக்கிறீர்? என்று வந்து பறிக்கிறீர்?

முதல் குழுவினர் : இன்று வந்து பறிக்கிறோம்! இன்று வந்து பறிக்கிறோம்!

பூக்களின் பெயர்களை அறிதல், மாதங்களின் பெயர்களை அறிதல், இழுவைப் போட்டி, உடல் திறன் என்று மகிழ்ச்சியாக இவ்விளையாட்டு ஆடப்பெறும்.

**பூசணிக்காய் விளையாட்டு**

பூசணிக்காய் விளையாட்டு இரு முறைகளில் விளையாடப்படுவதுண்டு.

1. சிறுமியர் விளையாட்டு
2. இருபாலர் விளையாட்டு

**சிறுமியர் விளையாட்டு**

சிறுமியர் மட்டும் விளையாடும் பூசணிக்காய் விளையாட்டில் சிறுமியர் ஒருவர்பின் ஒருவராக அமர்ந்து கொள்வார்கள். அவர்களுள் மூத்த சிறுமி தோட்டக்காரியாகவும், மற்றொரு சிறுமி பூசணிக்காய் வாங்க வருபவராகவும் செயற்படுவர். பூசணிக்காய் வாங்க வரும் சிறுமி, தோட்டக்காரியாக இருக்கும் சிறுமியைப் பார்த்து, 'பூசணிக்கா

இருக்கா? என்று கேட்பாள். தோட்டக்காரி “இப்பதான் பூப்பூத்திருக்கு என்பாள். மறுபடியும் மற்றொரு ஆள் வந்து ‘பூசணிக்கா இருக்கா? என்பான். தோட்டக்காரி “இல்லை இப்பதான் பிஞ்சு விட்டுருக்கு“ என்பாள் இப்படியே ஒவ்வொருவராக வந்து கேட்க, தோட்டக்காரி பூசணியின் வணர்ச்சிகளை ஒவ்வொன்றாகச் சொல்லுவர். இறுதியாக ‘பூசணிக்காய் விற்பனைக்குத் தயார்“ என்ற பருவத்துக்கு வரும் போது, கேட்டு வரும் சிறுமியரிடம் தம் பின்னால் இருக்கும் குழந்தைகளைக் காண்பித்து, “உங்களுக்கு எந்தப் பூசணிக்காய் வேண்டும்? என்று தோட்டக்காரி கேட்பாள். அவர்கள் ஒருவரைக் காண்பித்து, “எனக்கு அந்த பூசணிக்காய் வேண்டும்“ என்றவுடன் அந்தச் சிறுமி, சப்பணக் கால் போட்டு உட்கார்ந்து, தம் இரு கால்களின் பெரு விரல்களையும் தம் கைகளால் பிடித்துக்கொள்ள, மற்ற இருவர் பூசணிக்காயைத் தூக்குவது போல் தாக்கிக் கொண்டு போவார்கள். பின்பு அந்த பூரணிக்காயைச் சமைத்து சாப்பிடுவது போல் நடிப்பர் பூசணிக்காய் விளையாட்டுக் குழந்தைகளுக்குத் தாவர வளர்ச்சியின் பருவத்தை அறிவுறுத்துவதாகவும் அவற்றின் தேனையும் அவசியத்தையும் புரியவைக்கிறது.

**இருபாலர் விளையாட்டு**

இருபாலரும் சேர்ந்தும் விளையாடுவதில் சிறுமியர் தரையில் கால்களை மடக்கி ஒருவர் பின் ஒருவராக வரிசையாக உக்கார்ந்து ஒருவர் இடுப்பை மற்றவர் கைகளால் கோர்த்துப் பிடித்துக் கொள்வர். வரிசையில் முன்னால் ஒரு பையன், ரெயில் பெட்டிகளின் முன்னால் இருக்கும் ரயில் எஞ்சின் போல உட்கார்ந்து இருப்பான். அவன்தான் இந்த விளையாட்டில் தோட்டக்காரனாக நடிப்பான். வுரிசையாக உட்கார்ந்த நிலையில் இருக்கும் சிறுமிகள் பூசணிக்காய்களாக நடிப்பார்கள். இந்தச் சிறுவர், சிறுமிகளின் நீண்ட வரிசை அமர்வுக்குச் சற்று தொலைவில் ஒரு மேடான பகுதியில் அல்லது ஒரு கல்லின் மேல் ஒரு பையன் உக்கார்ந்திருப்பான். அவன் ராஜாவாக நடிப்பான். ராஜாவின் பக்கத்தில் கைகட்டி வாய் பொத்தி ஒரு பையன் நின்று கொண்டிருப்பான். அவன் வேலைக்காரனாக நடிப்பான்.

**விளையாடும் முறை**

முதலில் ராஜா, வேலைக்காரனைப் பார்த்து, “நீ போய் அந்தத் தோட்டக்காரனிடம் சென்று, நான் கேட்டேன் என்று ஒரு பூசணிக்காய் வாங்கிக் கொண்டு வா! உத்தரவு போடுகிற தொனியில் கூறுவான். வேலைக்காரன், ராஜாவிடம், “சரி ராஜாவே, உத்தரவு! என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பி, தோட்டக்காரனிடம் வந்து வேலைக்காரனும் அதிகாரத் தோரணையில், “ஏய்

தோட்டக்காரா. கல்யாணமாம், மகளுக்குக் அதனால் உன்னிடம் பூசணிக்காயை உடனே வாங்கி வரச்சொன்னார்“ என்பான். தோட்டக்காரன் வேலைக்காரனைப் பார்த்து இப்பதான் “பூசணி விதையே ஊன்றி இருக்கிறேன் அதற்குள் பூசணிக்காய் கேட்டால் எப்படி? வேலைக்காரன், ராஜாவிடம் வந்து. என்று பதில் சொல்வான். தோட்டக்காரன் இப்பதான் விதை நட்டிருக்கிறானாம் என்பான். ராஜா, அப்படி என்றால் அந்த விதையையே கேட்டு வாங்கிட்டுவா என்பார். சேவகன், தோட்டக்காரனிடம் வந்து “ராஜா பூசணி விதையை வாங்கிட்டு வரச் சொன்னார்“ என்பான். தோட்டக்காரன், “நட்டவிதை இப்பதான் முளைச்சிருக்கு, காய் காய்ச்சதும் தருகிறேன்“ என்பான். ராஜா வேலைக்காரனிடம், “பரவாயில்லை, முளைத்த செடியைக் கொண்டு வா” என்பார்.

வேலைக்காரன் மீண்டும் ராஜாவிடம் வந்து, “ராஜா முளைத்த செடி இப்பதான் கொடி வீசி இருக்கிறது“ என்பான். ராஜா விடாமல். “கொடி வீசியதைக் கொண்டு வா” என்பார். வேலைக்காரன் தோட்டக்காரனிடம் வந்து, “வீசியக் கொடியைக் கொடு“ என்பான். தோட்டக்காரன், “இப்பத்தான் கொடியில் பூ பூத்திருக்கிறது“ என்பான். தோட்டக்காரன் சொன்னதை வேலைக்காரன் ராஜாவிடம் சென்று சொல்வான். ராஜா “அந்தப் பூவைக் கொண்டுவா“ என்பார். இப்படியாகத் தோட்டக்காரன், இப்பதான் பூ, பிஞ்சாகி இருக்கிறது பிஞ்சு, இப்பதான் விளைகிறது. இப்பதான் காய் திரண்டிருக்கிறது“ என்று படிப்படியாகச் சொல்ல, வேலைக்காரன், அதை ஒவ்வொரு முறையும் ராஜாவிடம் போய் சொல்வான்.

ராஜாவும் சளைக்காமல், அந்தந்தப் பருவத்தில் விளைந்ததை, “உடனே பறித்து வா” என்று உத்தரவிட்டுக் கொண்டே இருப்பார். இந்த விளையாட்டில் வேலைக்காரனாக நடிப்பவன்தான் அதிகமாக அலைவான். கடைசியில் தோட்டக்காரன் வேலைக்காரனைப் பார்த்து, “கொடிகளுக்குத் தண்ணீர் விட்டுட்டு, ஒரே ஒரு பூசணிக்காயை மட்டும் பிடுங்கிக்கிட்டுப் போ“ என்பான். தோட்டக்காரன் பூசணிக் கொடிகளுக்குத் “தண்ணீர் விடுவது“ போல, பாவனை செய்வான். அடுத்தமுறைத் தோட்டத்திற்கு “வேலி அடைப்பது“ போல பாவனை செய்வான். வேலைக்காரன், வரிசையாக அமர்ந்திருக்கும் சிறுமியரின் தொட்டு, திருப்பிப் பார்த்து ஒவ்வொரு தலையை உடம்பைத் இருக்கு சிறுமியையும், பூசணிக் காயாகப் பாவித்து, இது சூத்தை, இது சொள்ளை இதில் வடுப்பட்டிருக்கு, இது சூம்பிப் போய் என்று ஒவ்வொரு பூசணிக்காயையும் கழிப்பதைப் போல பாவனை செய்வான். வேலைக்காரன் இப்படி, ஒவ்வொரு பூசணிக்காயையும் புரட்டிப் பார்க்கும் போது, அதில் ஒரு சிறுமி வேலைக்காரனின் காலில் “கடுக்“கென்று முள்ளி வைத்து விடுவாள். வேலைக்காரன்

நடிப்புடன், “ஐயோ தேள்கடித்து விட்டதே! என்று அழுது கொண்டே அந்த இடத்தைவிட்டு நொண்டிக் கொண்டே நகர்வான்.

வரிசையின் இடையில் உள்ள ஒரு சிறுமியைப் (பூசணிக்காயை) பிடித்து வேலைக்காரன் இழுப்பான். அப்போது மற்ற சிறுமியர் நாய்கள் குரைப்பதைப் போல “லொள், லொள்“ என்று சத்தமிட்டுத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள். எனவே வேலைக்காரன் வரிசையின் கடைசியில் இருக்கும் சிறுமியைப் (பூசணிக்காயை) பிடித்து இழுப்பான். கடைசியாக உக்கார்ந்திருக்கும் சிறுமி தனக்கு முன் உள்ள சிறுமியைத் தன் கைகளால் கோர்த்துப் பிடித்துக் கொள்ளும். அதேபோல சிறுமியரும் தனக்கு முன்னால் உள்ள சிறுமியின் இடுப்பைத் தன் கைகளால் கோர்த்துப் பிடித்துக் கொள்ளும். வேலைக்காரன் விடாமல் முயன்று கடைசியாக வரிசையில் இருக்கும் சிறுமியை, அத்தொடரில் இருந்து பிரித்து இழுத்து விடுவான்.

சிறுமியரின் தொடர் இருக்கையில் இருந்து பிரித்து எடுத்தச் சிறுமியை (பூசணிக்காயை) இழுத்துக்கொண்டு போய் வேலைக்காரன் ராஜாவின் முன்னால் கொண்டு சென்று நிறுத்தி, “ராஜா, பூசணிக்காய் கொண்டு வந்திருக்கிறேன்“ என்பான். ராஜா, அந்தப்பிள்ளையைச் சுற்றிச்சுற்றி வந்து பார்த்து விட்டு, “இந்தப் பூசணிக்காய் அழுகி இருக்கு, வேறு ஒரு பூசணிக்காய் கொண்டு வா!“ என்று உத்தரவிடுவார்.

வேலைக்காரன், தோட்டக்காரனிடம் வந்து, “தோட்டக்காரரே,நான் முதலில் பிடுங்கிக் கொண்டு சென்ற பூசணிக்காய் அழுகிஇருக்காம். எனவே ராஜா வேறு ஒரு பூசணிக்காயை வாங்கிவரச்சொன்னார்“ என்பான். தோட்டக்காரன், வேலைக்காரனைப் பார்த்து, தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்த்து விட்டு, உரம் போட்டு விட்டு வேறொரு பூசணிக்காயைப் பறித்துக் கொண்டு போ! என்று சொல்வான். வேலைக்காரனும், தோட்டத்திற்குத் தண்ணீர் பாச்சுவது போலவும், உரம் போடுவது போலவும் பாவனை செய்து விட்டு, வரிசையில் இப்போது கடைசியாக இருக்கும் சிறுமியைப் பிடித்து இழுப்பான்,

தொடராக அமர்ந்திருக்கும் சிறுமியர் ஒருவரை ஒருவர் கோர்த்துப் பிடித்திருப்பதால் வேலைக்காரன் கஷ்டப்பட்டுக் கடைசியாக உட்கார்ந்திருக்கும் சிறுமியைப் பிடித்து இழுப்பான். ஒரு மட்டுக்கும் மல்லுக்கட்டி இழுத்த அந்தப் சிறுமியைக் கூட்டிக்கொண்டுபோய் ராஜாவின் முன்னால் நிறுத்தி, “ராஜா புதிய பூசணிக்காய் கொண்டு வந்திருக்கிறேன்“ என்பான். ராஜா, இரண்டாவது பூசணிக்காயாக வந்த சிறுமியைச் சுற்றி வந்து பார்த்து விட்டு, “சே, இந்தப் பூசணிக்காய்ச் சூத்தையாக இருக்கிறது. வேறு ஒரு பூசணிக்காய்க் கொண்டு வா” என்பார்.

வேலைக்காரன் மீண்டும் தோட்டக்காரனிடம் சென்று, “ராஜாக்கு நீ தந்த பூசணிக்காய் சூத்தையாக இருக்கிறது. எனவே வேறொரு பூசணிக்காய்க் கேட்கிறார் என்பான். தோட்டக்காரன் இப்போதும் வேலைக்காரனைச் சில வேலைகள் செய்யச் சொல்லி, வேறொரு பூசணிக்காயைப் பறித்துக் கொண்டு போ!“ என்பார். வேலைக்காரன் மீண்டும் வரிசையில் கடைசியாக அமர்ந்திருக்கும் சிறுமியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் ராஜாவின் முன்னால் கொண்டு போய் நிறுத்துவான். இப்படியாக, வேலைக்காரன், தோட்டக்காரன் அடுத்தடுத்து ராஜா, அக்காய்களைப் பூசணிக்காய்களைக் கேட்டு வாங்க, (பிள்ளைகளைப்) பார்த்து “குறை“ சொல்லி “வேறொரு பூசணிக்காயைக் கொண்டு வா“ என்பார். இப்படி, கடைசி சிறுமி பூசணிக்காயாக வரிசையில் இருக்கும் வரை வேலைக்காரன், சிறுமியரை இழுத்துக் கொண்டு போய் ராஜாவின் முன்னால் நிறுத்தும் வரை விளையாட்டுத் தொடரும்.

**மெல்ல வந்து முள்ளிப்போ**

இரு அணியினரும் குறிப்பிட்டத் தூரத்தில் எதிரெதிர் வரிசையாக அமர்வர். இங்கு, பங்கு பெறும் குழந்தைகளுக்கு மாற்றுப் பெயர் அதாவது பழங்களின் பெயர் வைக்கப்படுகிறது. முதல் அணியின் தலைவர் மறு அணியில் அமர்ந்திருப்பவர்களில் ஒருவரின் கண்களைத் தம் கைகளால் பொத்தியவாறு, தம் அணியில் உள்ள ஒருவரை அழைப்பார்.

“மாதுளம்பழமே மாதுளம்பழமே
மெல்ல வந்து முள்ளிப்போ
மாதுளம்பழமே மாதுளம்பழமே
மெல்ல வந்து முள்ளிப்போ
(முள்ளிச் செல்லும் வரை தொடர்ந்து பாடுவர்)
தலையை வெட்டி நாய்க்குப் போடு
சிரிக்காதே சிரிக்காதே
காலாட்டம் கையாட்டம்
கடவுளுக்குப் பொதுவாட்டம்”

என பல முறை ராகம் பாடி கூறுவர். “மாதுளம்பழம்“ எனப் பெயர் வைக்கப்பட்டுள்ள நபர், மெல்ல வந்து, கண் மூடப்பட்டுள்ள நபரை முள்ளி விட்டுச் செல்வார். அவ்வாறு சென்று அவர் தம் இருப்பிடத்தில் அமர்ந்த பின் தலைவர், “எல்லோரும் தலையை வெட்டி நாயிக்குப் போடுங்க..““காலாட்டம், கையாட்டம், எல்லாருக்கும் பொது ஆட்டம்” என்று தம் அணியினரைப் பார்த்துக் கூறிவிட்டு,

பொத்தியிருக்கும் கண்களை விடுவார். கண் மூடப்பட்டிருந்த நபர், தன்னை “யார் முள்ளியது“ என்பதைச் சரியாகச் சொல்ல வேண்டும். சரியாகச் சொன்னால் வெற்றி, சொன்ன அணிக்கும், சொல்லாவிட்டால் எதிரணிக்கும் செல்லும்.

**சடுகுடு**

உடற்பயிற்சி விளையாட்டுகளுள் ஒரு சில விளையாட்டுகளில் பாடல்கள் இடம் பெறுகின்றன. சான்றாக ஆண்கள் விளையாடும் சடுகுடு விளையாட்டை எடுத்துக் கொள்ளலாம். இதில் பாடல் பாடும் மரபு உண்டு. எதிரியின் எல்லைக்குள் நுழையும் போது பாடத் தொடங்கி கடைசி வார்த்தையைத் திரும்பத் திரும்பப் பாடுவர். பாடல் வாய்விட்டு சத்தமாகப் பாடப்படுவதால் அவர்கள் மூச்செடுப்பது நன்கு தெரியும். மூச்சை விடாமல் எதிரியிடம் சிக்காமல் நடுக்கோட்டைத் தொட வேண்டும் என்பது ஆட்ட விதி.

ஈச்சி எலுமிச்சி
மூச்சி விட்டாப் போச்சி

எனப் பாடியவாறு செல்வர்.

எதிரணியின் எல்லைக்குள் நுழையும் போது அந்த அணியினரைச் சீண்டுவது போலவும், சவால் விடுவது போலவும், சில பாடல்கள் அமைவதுண்டு. இறுதிச் சொற்கள் திரும்பத் திரும்பப் பாடப்படும்.

“நான் தாண்டா ஒங்கப்பன்
நல்லமுத்து பேரன்
வெள்ளிச் சிலம்பெடுத்து
விளையாட வாரேன்
தங்கச் சிலம்பெடுத்து
தாலி கட்ட வாரேன்
வாரேன் வாரேன்....”

இந்தப் பாடல் எதிரணியினரைச் சீண்டி வம்புக்கு இழுப்பதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

**அழிப்பாங்கதை**

நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகளுள் ஒன்று விடுகதையாகும். இவ்வழக்காறு சிறுவர்களின் விளையாட்டு நேரங்களிலும், பொழுதுபோக்கு வேளைகளிலும்

சிறுவர்களுக்கிடையேயும், சிறுவர் பெரியோர் இடையேயும் நிகழ்வதுண்டு. சிறுவர் உள்ளத்தில் இயல்பிலேயே, ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகள் எழுவதுண்டு. புதிதாக எதையாவதுக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், ஆசையும் அவர்களிடம் மிகுதியாகக் காணப்படுவதால் புரியாத புதிர்களுக்கு விடை தேடி, வெற்றியும் அடைகின்றனர். அவர்களின் இத்தகைய ஆர்வத்திற்கு இவ்விடுகதைகள் வடிகாலாய் அமைகின்றன. இதனை நாட்டுப்புறத்தில் அழிப்பாங்கதை என்று கூறுவர். விடுகதையைப் பொதுவாக இலக்கிய வடிவமாகவும் வாய்மொழி இலக்கியமாகவும் சிலர் அடையாளப்படுத்துவர். இதை “நொடி“ என்றும், பழந்தமிழில் “பிசி“ என்றும் கூறுவர். தொல்காப்பியர் விடுகதையைப் “பிசி“ என்கிறார்.

1. ஒப்பொடு புணர்ந்த உவமத்தது (செய் 176)
2. தோன்றுவது கிளந்த துணிவினது (செய் 176)
3. நொடியொடு புணர்ந்தது (செய்.165)

என உரையாசிரியர்கள் பொருள் தருகின்றனர். “பூடகமாய்ச் சொல்லி புரிந்து கொள்ள வைப்பதுதான் விடுகதையின் பண்பு“ என நாட்டுப்புறத் திறனாய்வாளர் சு.சண்முகசுந்தரம் குறிப்பிடுகிறார். இவ்வழிப்பாங்கதை அதன் பொருண்மை அடிப்படையில் “பண்பாட்டுக் கருவூலம்“ மற்றும் “சுற்றுச் சூழலியல்“ பகுதிகளில் எடுத்தாளப்பட்டுள்ளன.

# அலகு – 3

## பண்பாட்டுக் கருவூலம்

நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை. இனியவை எழுதப்படாதவை நாவில் பிறந்து செவிகளில் உலவிக் காற்றில் மிதந்து கருத்தில் இனிப்பவை. தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வாழ்ந்து கொண்டிருப்பன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் பாடல்கள் இடம்பெற்று வருகின்றன. மனித உள்ளத்தின் ஆழத்தில் அங்கே தோன்றி. எதிரொலிக்கும் பல்வேறு இதய வழிகளையும் இன்ப துன்பங்களையும் ஆபாசங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம். இவ்வாறான பாடல்கள் எப்போது தோன்றின யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்ற வினாக்களுக்கு விடை காண இயலாது. இவை வாழ்வியலோடு இணைந்தவை. மக்களுடைய எண்ணங்கள், ஏக்கங்கள், கனவுகள், விளைவுகள், வெறுப்புகள். நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலியன நாட்டுப்புறப் பாடல்களில் இடம் பெற்றிருக்கும்.

“சமுதாயம் என்பது மக்கள் சேர்ந்து வாழும் அமைப்பு ஆகும்“ என்பார் சி.சத்தியசீலன். சமுதாய மக்களிடையே இலக்கியங்கள் எழுந்த போதும் அவை அவர்களைப் பற்றியதாகவே விளங்கியது. “இலக்கியங்கள் பாமர மக்களிடையே முகிழ்ந்த போதும் அவை மனித வாழ்வை ஒட்டியே முழுமையாக இலங்குவதால் அவர்தம் வரலாறு பெருமளவில் வெளிப்படுகின்றது“ என்று சா.வளவன் தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டதாகச் சமுதாயம் விளங்குகிறது. அச்சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக நாட்டுப்புற வழக்காறுகள் விளங்குகின்றன.

“ஒரு நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்தின் முக்கிய அம்சம் அந்நாட்டில் வழங்கும் நாட்டுப்பாடல்கள். கிராம மக்களிடையே அன்றாடம் காணும் உள்ளுணர்வுகள் இப்பாடலில் பிரதி பலிக்கும்“ என்கிறார் இசைப் பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி. “மனிதனின் முழுமையை நாட்டுப்புறப் பாடல்கள் செம்மையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன“ என்பார் மீ.அ.மு. நாசீர் அலி.

“ஓரினத்தில் பண்பாட்டையும், அவர்கள் கொண்டிருந்த பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தெற்றன விளக்க வல்லவனாய்த் திகழ்வன நாட்டுப்புறப் பாடல்களே ஆகும்.“ “எழுத்து வாசனை அறியா மக்களால் பாடப்பட்ட வாய்மொழி இலக்கியம் ஒரு நாட்டின் நாகரிகத்தை, பண்பாட்டின் மேம்பாட்டை அறிவதற்குத்

துணை செய்யும் கருவிகளுள் ஒன்றாகும்." என்ற கருத்துகளை "நாட்டுப்புறப் பாடலும் பண்பாடும்" என்ற நூல் எடுத்துரைக்கிறது.

நாட்டுப்புறங்களில் சிறுவர்கள் தங்கள் மன உணர்வுகளையும், பழக்கவழக்கங்களையும் பாடல்களின் வழியும், விளையாட்டுகளின் மூலமும் வெளிப்படுத்துகின்றனர். தங்களின் கருத்துகளைப் பிறரிடம் பரிமாற்றம் செய்வதற்கும், சிறுவர் சிறுமியர் என இருபாலரும் பால்பாகுபாடின்றி பழகுவதற்கும் ஒரு வடிகாலாக இப்பாடல்கள் அமைகின்றன. இச்சிறுவர் பாடல்களில் பண்பாட்டுக் கூறுகளான குடும்பம், சாதி, சமயம், நாகரிகம், பழக்க வழக்கம், நம்பிக்கைகள் எனப் பல்வேறு செய்திகள் மறைந்துள்ளதைக் காணமுடிகிறது. அவ்வகையில் சிறார் வழக்காறுகள் சித்தரிக்கும் மனிதச் சமூகத்தின் பண்பாட்டை இப்பகுதி பதிவிடுகிறது.

**குடும்பம்**

சமுதாயத்தின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்று குடும்பம். அக்குடும்பத்தின் நெருங்கிய தொடர்புடையது உறவுமுறை. உறவினர்கள் இடையே ஏற்படும் உறவின் அடிப்படையில் சு.சண்முகசுந்தரம் உறவினை ஆறு வகைப்படுத்துவார்.

1. அன்பு கொள்ளும் உறவு
2. போராட்ட உறவு
3. மதிக்கத்தக்க உறவு
4. கேலிக்குரிய உறவு
5. தழுவல் உறவு
6. தள்ளல் உறவு

**அன்பு கொள்ளும் உறவு**

ஒரே குடும்பத்தில் வசிக்கும் இரத்த உறவுடைய குடும்ப உறுப்பினர்களிடையே பெரும்பாலும் அன்புறவு காணப்படுகிறது. இதை தவிர்த்து ஆண் பெண் என்ற மாறுபட்ட சேர்ந்த உறவினர்களிடையே பெரும்பாலும் அன்புறவு காணப்படுகிறது. மிகுந்த அன்பும் பாசமும் கொண்ட நெருங்கிய உறவினர்களிடையே கொள்ளும் உறவு அன்பு கொள்ளும் உறவுகளான பெற்றோர் - குழந்தைகள், பாட்டன் - பாட்டி, பேத்தி. மாமன் மருமகன், அத்தை மருமகள், உடன்பிறப்புக்கள் ஆகிய உறவுகள் இடையே இவ்வன்பு நிலை காணப்படுகின்றது. இவ்வுறவுகளிடையே சிறுவர்கள் கொள்ளும் இணக்கத்தைச் சிறுவர் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

**பாட்டன் பாட்டி**

பாட்டன், தாத்தா, பேரனார் என்று பாட்டனையும், ஆத்தா, அப்பத்தா என்று தந்தையைப் பெற்றவளையும், ஆச்சி, பொன்னத்தா என்று தாயைப் பெற்றவளையும் "பாட்டி" என்று பொதுநிலையிலும் தேவர்குளம் வட்டாரத்தில் பாட்டியைக் குழந்தைகள் அழைக்கின்றனர். அவ்விருவர் இடமும் குழந்தைகள் கேலி செய்யும் உரிமை கொள்கின்றனர். சிறுவர்கள் தாத்தா உறவினைக் கேலி செய்து.

"தாத்தா தாத்தா தண்ணிக்குள்ள
தவள ரெண்டும் பொந்துக்குள்ள"

என்ற பாடலைப் பாடுகின்றனர். பாட்டி உறவினைக் கேலி செய்யும் விதமாக,

"பாட்டி பாட்டி எங்க போற
விறகு பொறக்கப் போறேன்"

"பாட்டி பாட்டி என்ன தேடுத"

எனத் தொடங்கும் பாடல்கள் அமைகின்றன. இப்பாடல்கள் சிறுவர்கள் பொழுதுபோக்கிற்காக விளையாடும்போது பாடுவது ஆகும். முதல் பாடலில் சிறுவர்கள் பாட்டியை ஏமாற்ற முனைவதும் பாட்டி அவர்களை விரட்டுவதுமாக இறுதியில் முடிகிறது. இரண்டாவது பாடலிலும் பாட்டி குழந்தைகளை உரிமையுடன் விரட்டுவதைப் பார்க்க முடிகிறது. பாட்டி தம் பேரக் குழந்தைகளிடம் மிகுந்த அன்பு கொண்டவர். அதே நேரத்தில் கண்டிக்கும் உரிமையும், மீறினால் தண்டிக்கும் உரிமையும் அவளுக்கு உண்டு என்பதையே இச்சிறுவர் பாடல்கள் உணர்த்துகின்றன.

**மாமன் உறவு**

குழந்தைகளிடம் மாமன் கொள்ளும் அன்பும் அக்கறையும் சிறப்பானது எனலாம். "தாய்மாமன்" என்றழைக்கப்படும் தாயின் உடன் பிறந்த சகோதரர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தன் சகோதரியின் மண விழாவில் மாப்பிள்ளைத் தோழனாகத் துணைநிற்கும் அவன், சகோதரிக்குக் குழந்தைகள் பிறக்கும் நிலையில் 'தாய்மாமன்" என்ற சிறப்பு அந்தஸ்தைப் பெறுகிறான். குழந்தை பிறந்தவுடன் தொட்டிலில் இடுதல், பெயர் சூட்டுதல், காது குத்துதல், மொட்டையிடுதல், பூப்புச்சடங்கு திருமணம் செய்தல், நிச்சயித்தல் என எல்லாக்கட்டங்களிலும் தம் பங்கை அவன் சிறப்பாகச் செய்கிறான். தேவர்குளம் வட்டாரத்தில் மொட்டையிடுதலும் காது குத்துதலும் பெண்ணின் புகுந்த வீட்டுக் குலதெய்வக் கோயிலில் நடைபெற்றாலும், அக்குழந்தை "தாய்மாமன் மடி'யில்

அமர வைக்கப்பட்டே அந்நிகழ்வை நிகழ்த்துகின்றனர். இது தாய்மாமனுக்கே உரிய சிறப்பாகும்.

குழந்தைகளும் மாமனிடம் உரிமையுடன் பழகி கேலி செய்து விளையாடும் இயல்பு கொண்டுள்ளனர்.

“தொந்தி மாமா வந்தாராம்
தொப்பிய கழத்திப் போட்டாராம்”

என்ற பாடலில் மாமனின் உருவத்தையும் அவர் சறுக்கி விழுந்த நிகழ்ச்சியையும் கேலியுடன் பாடி மகிழ்கின்றனர். “மழை பெய்யுது மழை பெய்யுது“ என்ற மற்றொரு பாடலில்,

”தேடி வந்த மாமனுக்கு
முறுக்கு கொடுங்க
சும்மா வந்த மாமனுக்குச்
சூடு போடுங்க“

என்று உரிமையுடன் கேலி செய்கின்றனர். குழந்தைகள் தன் மாமனிடம் ஏதாவது ஒன்றினை எதிர்பார்ப்பர். அவர்கள் அதனைக் கொண்டுவந்தால் மகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்பர். இல்லை என்றால் அவர்களுக்கு மதிப்பு குறையும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**அத்தை உறவு**

ஒரு பெண் தன் உடன் பிறந்தானின் குழந்தைகள் மீது அன்பு செலுத்த தவறுவதில்லை. குழந்தைகளும் அத்தையின் உறவை மிகுந்த விருப்பத்தோடு ஏற்றுக் கொள்கின்றனர். சில குழந்தைகள் முதன்முதலில் பேசிப்பழகும் போது, “அத்த அத்த“ என்று “அத்தை“ என்ற சொல்லையே உச்சரித்துப் பழகுகின்றன.

“மாம்பூ மகிழம்பூ
மாமியார் வீட்டு மல்லிகப்பூ“

“அத்த செத்த நெய்யுது“

“மாக் கொழுக்கட்டை
மஞ்சக் கொழுக்கட்டை

மாமியார் கொடுத்த

பிடிகொழுக்கட்டை“

என்ற பாடல்கள் இதற்குச் சிறந்த உதாரணங்கள் ஆகும்.

**இறைபக்தி**

குழந்தைப் பருவத்திலேயே இறைபக்தி நம்பிக்கை ஆகியன பெரியவர்களால் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. “கைவீசம்மா கைவீசு“ என்ற பாடலில்

“கோவிலுக்குப் போகலாம் கைவீசு

கும்பிட்டு வரலாம் கைவீசு“

என்று இறை உணர்வு ஊட்டப்படுகிறது. இறைவனின் தோற்றமும் குழந்தைகளின் இதயங்களில் குத்தப்படுகிறது. “சங்கு சக்கர சாமி வந்து ஜிங்கு ஜிங்குன்னு ஆடிச்சாம்“ என்ற பாடல் திருமாலின் உருவத்தினைப் படம்பிடித்துக் காட்டும் பாடலாகும். “யானை யானை அழகர் யானை“ என்ற பாடலில், வரும் “அழகரும் சொக்கரும் ஏறும் யானை“ என்ற வரியில் வைணவக் கடவுளான அழகரையும், சைவ கடவுளான சொக்கநாதரையும் ஒருங்கே இணைத்துக்கூறும் இயல்புக் காணப்படுகிறது.

**ஆணாதிக்கம்**

நாட்டுப்புறச் சிறுவர்களால் விளையாடப்படும் பூசணிக்காய் விளையாட்டு, விளையாட்டாக மட்டும் அல்லாமல் சமுதாயச் சிந்தனையுடைய செய்திகளை மக்களுக்கு அறிவிக்கும் விளையாட்டாகவும் திகழ்கிறது. நிகழ்த்துக் கலைபோல, குழந்தைகளால் பாவனைகளுடனும், நடிப்புடனும் விளையாடப்படுகிற இந்த விளையாட்டில் ராஜா, தோட்டக்காரன், வேலைக்காரனாக ஆண் பிள்ளைகளும் பூசணிக்காயாகப் பெண்பிள்ளைகள் மட்டும் இடம் பெறுவதில் சிறுவரிடையே இயல்பிலேயே ஆணாதிக்க மனோபாவமும் இருப்பதைக் காணமுடிகிறது.

**முதலாளித்துவம்**

ராஜாவின் மேலாண்மையும், வேலைக்காரன் அலைச்சலும், தோட்டக்காரன் சுரண்டப்படுவதும், பூசணிக்காய்கள் நுகர்பொருளாகக் கருதப்படுவதும், இவ்விளையாட்டு மறைமுகமாக உணர்த்தும் செய்திகளாகும். அறிஞர் அண்ணா, “செவ்வாழை“ எனும் தம் சிறுகதையில், முதலாளியால் தொழிலாளி சுரண்டப்படும் நிலையைப் பதிவு செய்துள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

**நம்பிக்கைகள்**

நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளரச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்று கூறுலாம். நம்பிக்கைகள் காலம் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவி வருகின்றன. "நம்பிக்கை ஒரு செயலின் காரணமாகவும் மரபு வழியாகச் சந்ததி, பின் சந்ததி ஆகியோரால் பின்பற்றப்படும் வழக்காகவும் உள்ளது" என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடுகிறது. 'மனித வாழ்வைச் சமூகச் சிக்கல்களும் பொருளாதார நெருக்கடிகளும் உணர்வு அலைக்கழிப்புகளும் வலைவிரித்துப் பற்றிப் பிணைக்க முனைந்தாலும் காலங்காலமாய் மனித மனதை ஆக்ரமித்து வந்துள்ள நம்பிக்கைகள் அவனைத் தேற்றுகின்றன. வாழ்வுச் சூழல் கண்டு சலிப்படையும் வேளைகளில் அவனைக் கைதூக்கி விடுகின்றன" என்று மனித வாழ்வில் நம்பிக்கை பெற்றுள்ள இடம் குறித்து க.மீனாகுமாரி குறிப்பிடுகிறார். இத்தகு நம்பிக்கைகளால் அந்தந்த இனத்தின், நாட்டின் பண்பாடுகள் வெளிப்படக் காணலாம். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பலவித நம்பிக்கைகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். அவற்றில் சமயம் சார்ந்த நம்பிக்கைகளே மக்களிடம் அதிகம் நிலவுகிறது.

**தெய்வ நம்பிக்கை**

மக்களின் வாழ்க்கையின் அடிப்படையாய் அமைந்தது தெய்வ நம்பிக்கை ஆகும். பழங்காலம் முதல் இக்காலம் வரை தெய்வம் காக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகிறது. காலம் காலமாக அந்நம்பிக்கை காப்பாற்றப்பட்டு வருகிறது. அந்நம்பிக்கையின் அடிப்படையில் தெய்வத்திற்குக் காணிக்கை செலுத்துவதும் நேர்த்தி செய்வதும் மக்களிடையே வழிவழியாக நிலவி வருகிறது.

"ஒத்த ரூபா கிடைச்சிது

கோவிலுக்குப் போட்டேன்"

"மாரியாத்தா கோயில்ல

மஞ்சத் தண்ணி ஊத்துறேன்"

என்ற பாடல் வரிகள் இதனைக் காட்டுகின்றன.

**நேர்த்திக் கடன்**

நேர்த்திக் கடனாகக் காணிக்கை செலுத்தாவிட்டால் துன்பம் வரும் என்ற நம்பிக்கை எல்லா மக்களிடமும் பரவலாக உள்ளது.

“ஆருகடன் நின்றாலும்
மாரிகடன் ஆவாது
மாரிகடன் தீர்த்தவர்க்கு
மனக்கவலை தீருமம்மா“

என்ற பாடல் வரிகள் மாரியம்மனுக்குச் செலுத்த வேண்டிய நேர்த்திக் கடனைச் செலுத்தாவிட்டால் துன்பம் வரும் என்னும் மக்களின் நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது. சிறுதெய்வங்களுக்கு நேர்த்திக் கடனாக நிகழ்த்தப்படும் தீமிதி, அக்கினிச் சட்டி எடுத்தல், அலகு குத்திக் கொள்ளுதல் போன்ற நிகழ்ச்சிகளின் வாயிலாக மனிதனின் பண்பட்ட மன உறுதியையும் நம்பிக்கையையும் அறியமுடிகிறது. இவ்வாறு தன்னை வறுத்திக் கொள்வதன் மூலம் வாழ்வில் ஏற்படும் எல்லா இடையூறுகளையும் எதிர்கொள்ளும் மனத்திட்பம் மக்கள்பால் ஏற்படுகிறது என்பதை இத்தகைய தெய்வ வழிபாட்டால் அறியலாம்.

**மொட்டை போடுதல்**

குழந்தை பிறந்து ஓராண்டு முடிவதற்குள் குழந்தைக்கு மொட்டை போட்டுக் காது குத்த வேண்டும் என்பது நாட்டுப்புற மக்களிடையே வழிவழி வரும் மரபாக உள்ளது. காது, மூக்கு ஆகிய பகுதிகளில் துளையிட்டு உலோக ஆபரணம் பூட்டுவதால், தீமை தரும் ஆவிகளிடமிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க முடியும் (காத்து கருப்பு அண்டாது) என்ற நம்பிக்கையில் இப்பழக்கம் மக்களிடம் ஏற்பட்டிருக்கலாம். வழிவழியாக வந்த இப்பழக்கமே சடங்காகவே மாறிவிட்டது. அவரவர் தம் குல தெய்வக் கோயில்களில் முடியெடுத்து காது குத்தும் சடங்கு அனைத்துக் குழந்தைகளுக்கும் தவறாது நடத்துகின்றனர்.

“மொட்ட மண்ட ரேடியோ“

“மொட்டையும் மொட்டையும் சேர்ந்துச்சாம்“

“மொட்ட பாப்பாத்தி“

என்ற கேலிப்பாடல்கள் சிறுவர்களுக்கு மொட்டை போடும் பழக்கம் இருந்ததைக் காட்டுகின்றன.

**திருவிழா**

புதிய ஆடைகள், உறவினர்கள் வீட்டிற்கு வருதல், தின்பதற்குப் பண்டங்கள் ஆகிய காரணங்களால் சிறுவர்கள் திருவிழாவினால் பெரிதும் இன்பம் அடைகின்றனர். மகிழ்வுடன் சிறுவர்கள் கொண்டாடும் விழாக்களில் ஒன்று கார்த்திகை தீபத் திருவிழா ஆகும். நெருப்புக் கட்டைகளைத் தட்டி அதிலிருந்து சிதறும் மத்தாப்பு பூ போன்ற அனல் பொறிகளைக் கண்டு ரசிக்கின்றனர். அப்போது சிறுவர்கள்,

“சோளப்பொறி
சொங்குப் பொறி
இன்னைக்குவந்த மாப்பிள்ளைக்கு
இத்தினிப் பொறி
நாளைக்குவரும் மாப்பிள்ளைக்கு
நாழிப்பொறி’

எனப் பாடி மகிழ்வர்

**தொழில்**

பெரும்பாலும் உழவுத் தொழிலிலே இப்பகுதிமக்கள் ஈடுபடுகின்றனர். வாழும் மண்ணிற்கேற்பவும், பருவ மழைக்கு ஏற்பவும் ஏற்ற பயிர்களைச் செய்கின்றனர். காய், கனிகள், மிளகாய் பயிர், தானிய வகைகள் ஆகியவற்றைப் பயிர் செய்கின்றனர். அதனாலேயே சிறுவர்கள் தங்கள் பகுதியில் விளைந்த பொருள்கள் பற்றியே அதிகமாக பாடல்களில் குறிப்பிடுகின்றனர். ஆடு மாடுகளை வளர்த்த அவர்கள், மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டனர். “குலை குலையா முந்திரிக்கா’ என்ற பாடலில்,

“சுற்றிவருபவர் : என்னாட்டைக் காணோம்

குழுவினர் : தேடிப் பிடிச்சிக்கோ“

என்றும், “ஆடு புலி“ விளையாட்டில்,

“புலி : சங்கிலி புங்கிலி கதவத் திற

பிள்ளைகள் : நான் மாட்டேன் வேங்கப் புலி

புலி : ஆட்டுக் குட்டியைக் கண்டீங்களா?

என்றும் பாடுகின்றனர். இவை தவிர, மட்பாண்டம் செய்தல், துணி வெளுத்தல், தச்சு வேலை செய்தல் முதலிய தொழில்களும் நடக்கிற செய்தியை அழிப்பாங்கதைகளில்,

“குயவன் பண்ணாத பாண்டம்
வண்ணான் வெளுக்காத வெள்ளை“
“ஆயிரம் தச்சன் கட்டிய மண்டபம்“

என்று சுட்டப்படுவதன் மூலம் அறியலாம்.

**நாகரிகம்**

“நாகரிகத்தின் சிறப்பினை உணவு, உடை, உறையுள், கருவிகள், அணிகலன், வாகனங்கள், மணிகள், பயன் பொருள்கள், விளையாட்டுகள், ஒப்பனைகள், அளவுமுறைகள், பொழுது குறிப்புகள் போன்றவற்றின் வழியாக அறிந்து கொள்ளலாம்“ என்பார் சு.சண்முசுந்தரம்.

**உணவுப்பொருட்கள்**

தேவர்குளம் வட்டாரத்தில் அரிசி, தானிய வகைகள் (கம்பு, சோளம், கேழ் வரகு) பால், தயிர், நெய், காய்கறிகள், கீரைகள், தேங்காய், உளுந்தஞ் சோறு, உளுந்தங்கழி, வெந்தயக்கழி, கம்பங் கூழ். கேப்பங் கூழ், இளநீர், பதநீர், நுங்கு, கள் ஆரோக்கியத்திற்கு உகந்த உணவுகளை உட்கொள்கின்றனர். உடல் பழம், தயிர் சோறு, பருப்புச் சோறு, நெய் போன்ற உணவு வகைகள் குழந்தைகளுக்கு அடிப்படை உணவாக வழங்கப்பட்டன. அப்பம், அவல், ரொட்டி, கொழுக்கட்டை, அப்பளம், முறுக்கு, கடலைமிட்டாய், பணியாரம் போன்ற பண்டங்கள் சிறுவர்களால் விரும்பி உண்ணப்பட்டன. இச்செய்திகளைப் பல பாடல் வழி அறியலாம்.

“தத்தாங்கி கொட்டும்பிள்ளை
தயிரும் சோறும் தின்னும்பிள்ளை
அப்பஞ்சுட்டா தின்னும்பிள்ள
அவல் இடிச்சா மொக்கும்பிள்ளை“

“பருப்புக் கட பருப்புக் கட“ என்ற பாடலில் சோறு, அப்பளம், கூட்டு, சாம்பார், நெய், மோர், பாயாசம் என வகைப்படுத்தப்படுகின்றன.

“கடலை மிட்டாய்ப் பொட்டணமாம்
நான்கு பேருக்குக் காணுமாம்
திங்க… நீங்க… இங்க… வாங்க!“

**வாகனங்கள்**

நாட்டுப்புற மக்கள் பயன்படுத்திய வாகனங்கள் எளிமையானவை. மாட்டு வண்டிகள், சக்கடா வண்டி பயன்படுத்தப்பட்டன. ஆனாலும் ஆங்கிலேயரின் வரவால் வாகனங்களின் வளர்ச்சியாக கார், ரெயில், கப்பல் போன்ற வாகனப் பெயர்களைப் பாடலில் பாடி மகிழ்ந்தனர்.

“அதோ பார் ரோடு
ரோட்டு மேல காரு“
“தூத்துக்குடிக் கப்பல்“
“நீண்ட வண்டி தொடர் வண்டி
நீண்ட தூரம் போகும் வண்டி“

**நாணயங்கள்**

வாழ்வில் புழங்கிய நாணயங்களைப் பற்றி பாடல்களில் குறிப்பிடுகின்றனர். சல்லி, துட்டு, காலணா, பணம், பைசா, ரூபாய் போன்ற பல பெயர்களில் பணத்தை வழங்கி வந்தனர். “குத்தடி குத்தடி சைலக்கா“ என்ற பாடலில் பைசா என்ற சொல் பயன்படுகிறது. ”மொட்ட பாப்பாத்தி” என்று பாடலில் “காசு“ என்ற சொல்லும் “பாட்டி பாட்டி என்ன தேடுத“ பாடலில் “துட்டு“ என்ற சொல்லும் நாணயத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

**அணிகலன்**

நாட்டுப்புறங்களில் “பாம்படம்“ அணியும் பழக்கம் இன்றும் நிலவுகிறது. அதைப் பதிவு செய்யும் விதமாக அமைந்த விடுகதை,

கொத்து கொத்தாய் ஈத்தங்காய்
குலையோட ஈத்தங்காய்
மதுரைக்குப் போனாலும்
வாடாத ஈத்தங்காய் - அது என்ன?

என்பதாகும்.

**நகரங்கள்**

பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்கள், தஞ்சாவூர், மயிலாப்பூர், தூத்துக்குடி, செங்கோட்டை, திருக்காங்குடி போன்ற பல்வேறு நகரங்களின் பெயர்கள்

இவர்கள் பாடும் பாடல்களில் காணப்படுவதால் இவர்களின் நகரங்கள் மற்றும் ஊர்கள் பற்றிய அறிவினை அறிந்து கொள்ள முடிகிறது.

“சென்னை பம்பாய் கல்கத்தா
செவுட்டுல ரெண்டு கொடுக்கட்டா!
ஊட்டி பம்பாய் கல்கத்தா
உனக்கு ரெண்டுகொடுக்கட்டா!
திருச்சி பம்பாய் கல்கத்தா
திருப்பி ரெண்டு கொடுக்கட்டா”

**பழக்க வழக்கம்**

சமுதாயத்தில் வாழும் மக்களிடையே சில பழக்க வழக்கங்கள் இருந்து வந்தன. அவற்றை இச்சிறார் வழக்காறுகள் பதிவிட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**விருந்தோம்பல்**

தமிழர்களின் பண்பாட்டில் தலைசிறந்த ஒன்று விருந்தோம்பலாகும். நம் தமிழர் பண்பாட்டில் முன்பின் தெரியாதவராக இருந்தாலும் வீட்டிற்கு வந்தால் அவர்களை அன்புடன் அழைத்து அவர்களைக் கவனிப்பது வழக்கமாகும். இதனை,

“விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்”

என்று தொல்காப்பியர் கற்பியலில் சுட்டுகின்றார். அந்தப் பண்பினை குழந்தைகள் சிறுவயதிலேயே கற்றுக்கொள்கின்றனர். யானையின் தோற்றமும் அதன் நடையும் சிறுவர்களை மிகவும் கவரும் யானையைப் பாகன் தன்மையுடையது. கிராமப்புறங்களில் அழைத்துவரும் போது அதன் பின்னாகச் சிறுவர்கள் கூட்டமாகச் செல்வர். பாகன் கடைகள் தோறும் யானையை ஆசிர்வதிக்க வைத்து காணிக்கை (பணம்) வசூல் செய்வதும், குழந்தைகளை யானையின் மீது அமர்த்தி, பின் இறக்கி யானையின் துதிக்கையில் தண்ணீர் ஊற்றி குழந்தைகளின் மீது தெளிக்கச் செய்வதும் இப்பகுதியில் நடைபெறும் நிகழ்வாகும். இவ்வாறு செய்வதால் குழந்தைக்கு “சீர் தட்டாது“ என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. யானையின் சாணத்தை மிதித்தால் காலில் பித்த வெடிப்பு வராது என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுவதாலும் யானையின் சாணத்தைச் சிறுவர்கள் போட்டி போட்டு மிதிப்பதுண்டு. இவ்வாறு தாங்கள் விரும்பும் யானையைத் தங்கள் வீட்டிற்கு வருமாறு அழைக்கும் சிறுவர்கள்,

“யானையாரே யானையாரே
எங்க போறீங்க
விருந்தாளியா வீட்டுக்கு வாங்க
விருதுண்டு போவீங்க”

எனப் பாடி மகிழ்கின்றனர்.

**கல்வி**

பள்ளி சென்று கல்வி கற்க வேண்டும் என்று சிறுவர்கள் உற்சாகப்படுத்தப்பட்டதைப் பாடல் வழி அறியமுடிகிறது.

காலையிலே எழுந்திடு
காலைக் கடனை முடித்திடு
கல்விசாலை சென்றிடு
கற்றபடி நடந்திடு

**திருமணம்**

“டப்பா டப்பா வீரப்பா
எப்ப கல்யாணம்
மாசி பொறக்கட்டும்
மல்லிகப்பூப் பூக்கட்டும்“

என்ற பாடலில் இருந்து தை பிறந்தால் வழிப்பிறக்கும் என்ற பழமொழிக்கு ஏற்ப தை, மாசி மாதங்களில் திருமணங்கள் நடத்தப்பட்டன என்பது அறியப்படுகிறது.

**திருமண உறவு**

மாமன் மகளை, அத்தை மகளைத் திருமணம் செய்துகொள்ளும் பழக்கம் காணப்பட்டது.

“அடிச்சிக்கோ புடிச்சி கோ
அத்தை மகளைக் கட்டிக்கோ“

என்று விளையாட்டாகப் பாடும் பாடல் வழி, அத்தை மகளைத் திருமணம் செய்யும் பழக்கம் வழக்கில் இருந்ததைக் காணலாம்.

“நான் தாண்டா உங்கப்பன்

நல்லமுத்து பேரன்

வெள்ளிச் சிலம்பெடுத்து

விளையாட வாரேன்

தங்கச் சிலம்பெடுத்து

தாலி கட்ட வாரேன்

வாரேன் வாரேன்.....”

என்ற கபடி விளையாட்டுப் பாடல் எதிரணியினரைச் சீண்டி வம்புக்கு இழுப்பதாக அமைந்துள்ளது. எதிரணியில் மண உறவு முறையுடைய யாரேனும் இருந்தால் அவர்களைப் பார்த்தே “தங்கச் சிலம்பெடுத்து தாலி கட்ட வாரேன்“ என்ற வரிகள் பாடப்படும். எதிரணியிலுள்ள ஒருவரின் அக்கா அல்லது தங்கையைத் தாலி கட்ட வருவதாகக் கேலி செய்து அவரைச் சீண்டும் போக்கு பாடல்களில் காணப்படுகிறது. திருமண விழா பெரியோர்களுக்கு சிறுவர்களுக்கும் மகிழ்ச்சிச் தருவதாக பறவைகளையும், விலங்குளையும் மணமக்களாக்கி சிறுவர்கள் பாடல் பாடி மகிழ்வர். மட்டுமல்லாமல் அமைந்துள்ளது.

“காக்காவுக்கும் காக்காவுக்கும் கல்யாணம்“

“காக்காவுக்கும் நரிக்கும் கல்யாணம்

சந்தனம் தெளித்து, முழங்க மணவிழா“

“பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்

பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்“

என்ற பாடல்கள் வழி மணவிழா முறையினை அறிந்து கொள்ள முடிகிறது.

**வரதட்சணை**

பெண்வீட்டார், மாப்பிள்ளைக்கு வரதட்ணை வழங்கி வறுமைக்குஆளாகினர் என்பதனையும் சிறுவர்கள் தங்கள் பாடல்களில் சுட்டிக் காட்டுகின்றனர்.

“பெண்ணைப் பெத்தா ஆத்தா வாரா

ஓட்ட வண்டியில

மாப்பிள்ளையைப் பெத்த ஆத்தா வாரா

மாட்டு வண்டியில”

என்று பெண், மாப்பிள்ளை வீட்டு வசதியை முரண்படுத்தி வேறுபடுத்திக் காட்டுகின்றனர்.

**விதவையர் நிலை**

விதவைகளுக்குச் சமுதாயம் கொடுக்கும் மதிப்பு குறைவானதே. இழிந்த பொருளாக்கி ஒதுக்கி வைக்கும் பழக்கம் இருந்தது. மங்கலம் குறைக்கப்பட்டு, அமங்கலமாக்கிப் பல கொடுமைகளைச் சமூகம் இழைத்ததை “மொட்டப் பாப்பாத்தி“ என்ற பாடல் வரி உணர்த்தும்.

**களவு**

பிறருடைய பொருள்களை, ஆடு மாடுகளை, நகைகளைக் கவர்ந்து செல்லும் பழக்கம் நாட்டுப்புறங்களில் காணப்பட்டது.

“டிக் டிக்!
யாரது?
திருடன்!
என்ன வேண்டும்?
நகை வேண்டும்!“

என்ற பாடல் திருடன், நகையைத் திருட வருவதைக் காட்டுகிறது. “இதாரு கொம்பு“ என்ற பாடலில் மாட்டைத் திருடன் பிடித்துச் செல்வது சுட்டப்படுகிறது. திருடர்களைப் பிடிப்பதும், அத்திருடர்களுக்கு உரிய தண்டை அளிப்பதும் சமூகத்தில் நிகழ்ந்துள்ளது. “கள்ளன் - போலீஸ்“ என்ற விளையாட்டு மூலமாகவும், “இதாரு கொம்பு“ பாடலின் இறுதியில், “கள்ளனை - வெட்டவா? குத்தவா?“ என்று கூறுவதில் இருந்து இதனை அறியலாம்.

**வீட்டுப் பராமரிப்பு**

“சாம்பலெடு“ விளையாட்டில் அதிகாலை எழுத்தவுடன் குடும்பப் பெண் செய்யும் பணிகள் வரிசையாகச் சொல்லப்பட்டள்ளன.

**சமையல் கலை**

நாட்டை ஆளும் உரிமை கொடுக்கும் இக்காலக் கட்டத்திலும் பெண்களுக்கு உரிய கலையாக சமையல் வலியுறுத்தப்படுகிறது. சிறுவயதிலேயே சமையல்

செய்வதில் வல்லவர்களாகப் பெண்கள் விளங்கினர். பெண்கள் செய்யும் சமையல் வகையினைப் பல பாடல்கள் காட்டுகின்றன.

"தோசையம்மா தோசை
அரிசி மாவும் உளுந்த மாவும்
அரைச்சு சுட்ட தோசை"

"பரங்கிக் காயைப் பறித்து
பட்டையெல்லாம் சீவி"

"பாவக்கா பாவக்க
பச்சை பச்சை பாவக்க
பாலூத்தி பொறி பொறிக்க"

**புழங்கு பொருள்கள்**

இன்று நெகிழி (பிளாஸ்டிக் பயன்பாட்டை அரசு தடை செய்திருந்தாலும் கடைகளுக்குச் சென்று பிளாஸ்டிக் பைகளிலே பொருள்களை வாங்கி வரும் கலாச்சாரம் பரவலாக உள்ளது. முன்புள்ள காலங்களில் சாக்குப்பைகளை மக்கள் பயன்படுத்தியமையை,

"தொந்தி மாமா வந்தாராம்
தொப்பியக் கழத்திப் போட்டாராம்
சாக்குப் பைய எடுத்தாராம்
சந்தக் கடைக்குப் போனாராம்"

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

"அண்டா கொப்பரை
அடுத்தே மங்கலம்
துட்டுப் பெட்டி
பெட்டி திறக்க"

மக்கள் பயன்படுத்தும் அண்டா, கொப்பரை, பெட்டி ஆகியன சுட்டப்பட்டுள்ளன.

**அழிப்பாங்கதை**

சிறுவர் வழக்கான விடுகதையில் மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் சுட்டப்படுகின்றன.

இரவெல்லாம் படுத்திருப்பான்
காலையில் சுருண்டிடுவான்
அவன் யர்?
பாய்

அக்கா வீட்டுக்குத் தங்கச்சி போவாள்
தங்கச்சி வீட்டுக்கு அக்கா போகமாட்டாள்
அவர்கள் யார்?
நாழி உலக்கு

ஊருக்கே ராசா அவர்
வரது மட்டும் கம்பியில்ல
அது என்ன?
மின்சாரம்

“உடம்பெல்லாம் பல் இருந்தாலும்
கடிக்க மாட்டாள்“
“ஒரு சாண் உடம்பிற்கு
வயிறெல்லாம் பல்லு
என்ற இரண்டு விடுகதைக்கும் பதில் “சீப்பு“ என்பதாகும்.
ஒரு நெல்லு குத்தி
வீடெல்லாம் உமி
அது என்ன?
தீக்குச்சி

உணவை எடுப்பாள்
ஆனால் உண்ணமாட்டான் - அவன் யார் ?
அகப்பை

குதிரை ஓட ஓட
வால் குறையும். அது என்ன?
ஊசி நூல்

உயிர் இல்லாத நீதிபதியிடம்
ஒழுங்கான நியாயம் - அது என்ன?
தராசு

அம்மா படுத்திருக்க
மகள் ஓடித்திரிவாள் அது என்ன?
அம்மி, குளவி

வீட்டுக்கு வந்த விருந்தாளியை
வரவேற்க ஆளில்லை அது என்ன?
செருப்பு

வீட்டிலிருப்பான் காவலாளி,
வெளியில் சுற்றுவான் கூட்டாளி அவர்கள் யார்?
பூட்டும் சாவியும்

எத்தனை தரம் சுற்றினாலும்
தலை சுற்றாது, அது என்ன ?
மின்விசிறி

உயிரில்லாதவனுக்கு
உடம்பெல்லாம் நரம்பு அது என்ன ?
பாய்

**தலைவர்கள்**

நாட்டை ஆளும் தலைவர்கள் பற்றியும் சிறுவர்கள் அறிந்திருந்தனர். “அதோ பார் ரோடு“ என்ற பாடலில், “எங்க மாமா நேரு“ என்று நேருவும், மற்றொரு பாடலில்,

“எம்.ஜி.ஆர் சண்ட
பார்வதி கொண்ட”

என்று எம்.ஜி.ஆரும் குறிப்பிடப்படுகின்றனர்.

**வரலாற்று அறிவு**

தங்கள் நாட்டை முகலாயர் ஆட்சி செய்ததன் விளைவாக, “துலுக்கர்“ என்ற சொல்லைப் பாடலில் பயன்படுத்தினர். “ஒரு குடம் தண்ணி எடுத்து ஒரு பூப் பூத்தது“ என்ற பாடலில்,

“இம்புட்டு பணம் தாரேன்
விடுடாத் துலுக்கா“

என்று பாடுகின்றனர். இறுதியில்,

“ராசா மகளைக் கட்டித் தாரேன்
விடுடாத் துலுக்கா“ எனக்கூற
“விட்டுவிட்டேன் பலுக்கா“

என்று பாடி முடிக்கின்றனர்.

**தகவல் தொடர்பு**

நாட்டுப்புறத்தில் தகவல் தொடர்பு அஞ்சல் வழியாக நடைபெறும். அது குறித்து சிறுவர்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பதை அழிப்பாங்கதை வழி அறிய இயலும். தபால் பெட்டியின் அமைப்பு, நிறம், செயல்பாடு ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றர்

வாயைப் பிளந்து
வீதியோரங்களில் நிற்பான் அவன் யார்?
தபால்பெட்டி

உடல் சிவப்பு,
வாய் அகலம்,
உணவு காகிதம்
நான் யார்?
தபால்பெட்டி

குத்துப்பட்டவன் கோபித்துக் கொள்ளாமல்
தகவல் சொல்கிறான். அவன் யார் ?
தபால்
பேச்சுக் கேட்குது

பேசுபவர் தெரியவில்லை. அது என்ன?

வானொலிப் பெட்டி

**ஊர்ப் பற்று**

நாட்டுப்புறச் சிறுவர்கள் தாங்கள் வாழும் பகுதியை அதிகம் நேசிப்பவர்கள். தங்கள் மாவட்டமான “திருநெல்வேலி“ என வரும்படியாகப் பாடல் பாடுகின்றனர்.

பால் பால்
என்ன பால்
ஆட்டுப் பால்
என்ன ஆடு
வேலி ஆடு
என்ன வேலி
திருநெல்வேலி

# அலகு – 4

## சுற்றுச்சூழலியல்

மனிதன் தாம் வாழும் இடத்தையும், தம்மைச் சுற்றியுள்ள அமைப்பையும் பற்றிய அடிப்படையான புரிதலையே சூழலியல் எனக் கூறலாம். தற்காலத்தில் புவியியல், வானியல், தாவரவியல், விலங்கியல், பறவையியல், சுற்றுச்சூழலியல் என்பன போன்று பல அறிவியல் வளர்ச்சிப் பெருகியிருந்தாலும், இன்றைய மனிதர்கள் இயற்கையோடு இயைந்து வாழத் தலைப்படாமல் அவற்றையெல்லாம் தாங்கள் அடைந்த கல்வியறிவின் மேம்பாடாகவே கருதுகின்றனர். இவ்வாறு மனிதன் இயற்கையை விட்டு விலகி வாழ எத்தனித்ததால் பல இன்னல்களையும் அடைந்து வருகின்றான். ஆனால், நாட்டுப்புற மக்கள் இயற்கைச் சூழ்நிலையோடு இயைந்து வாழ்ந்து, தங்கள் வாழ்வைத் திறம்பட நடத்தியுள்ளனர். அதற்கு அவர்கள் வாய்மொழியாகப் பயன்படுத்திப் பாதுகாத்து வந்த, நாட்டுப்புற இலக்கியங்களே சான்று பகரும். சிறுவர் வழக்காறுகளில் இடம்பெற்றுள்ள செய்திகளும், நிகழ்ச்சிகளும், பொருட்களும் அவர்களைச் சுற்றியுள்ளனவையே மையமாகக் கொண்டே அமைந்திருக்கும்.

இக்காலத்தில் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, சிறுவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதையோ, அலைபேசி மற்றம் கணிணியில் தனித்து இருந்து விளையாடுவதையோ மட்டுமே தங்கள் பொழுதுபோக்காகக் கொண்டுள்ளனர். நாட்டுப்புற சிறுவர்களைப்போல வெளியில் சென்று விளையாடுவதையோ, வீட்டிற்குள்ளாகப் பிறருடன் கூடி விளையாடுவதையோ விரும்புவதில்லை. இதனால் இயற்கை குறித்த புரிதல் இக்கால சிறுவர்களிடம் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. ஆனால் அன்றைய சிறுவர்கள் மண்ணோடு விளையாடி, தாங்கள் காணும் இயற்கைக் காட்சிகளைத் தாங்கள் பாடும் பாடல்களிலும், விடுகதைகளிலும் பாடுபொருளாகக் கொண்டனர். தாங்கள் அறிந்த மரங்களையும் மலர்களையும் விலங்குகளையும் பறவைகளையும் தம் பாடல்கள் வழி உறவாக்கி மகிழ்ந்தனர். அவ்வகையில் நாட்டுப்புறச் சிறுவர் வழக்காறுகளான சிறுவர் பாடல்கள் மற்றும் விடுகதையில் காணலாகும் சூழலியல் கருத்தாக்கங்களை இனங்கண்டு பதிவிடும் முயற்சியில் அமைந்துள்ளது இப்பகுதி கொண்டதாக அமைகிறது.

**இயற்கையின் இயக்கம்**

உலகம், சூரியன், மலை, மழை போன்ற இயற்கையின் இயக்கம் குறித்த சிந்தனையைச் சிறுவர் பாடல்களில் காணமுடிகிறது. பெண் குழந்தைகள் கழற்சிக்காய் விளையாடும்போது,

‘ஓரிஉலகெல்லாம்
உலகெல்லாம் சூரியன்“

என்று பாடும் பாடலில் உலகம் அனைத்திற்கும் சூரியன் ஒன்றே என்ற சிந்தனையை வெளிப்படுத்துகின்றனர்.

**புவியியல் அறிவு**

நாம் வாழும் பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது என்பது அறிவியல் உண்மை. இவ்வுண்மையை நாட்டப்புறச் சிறார்கள் சிறுவயதிலேயே அறிந்திருக்கின்றனர்.

சுற்றுவது தெரியாது ஆனால்
சுற்றிக் கொண்டிருப்பான் அவன் யார் ?
பூமி

என்ற விடுகதை அதை உணர்த்துகிறது. அத்தகைய பூமியைத் தாயாகவும் தெய்வமாகவும் மதிப்பது நம் தமிழர் மரபு.

“தார் தார் வாழைக்கா“ என்ற பாடலில்,
பூம் பூம் நல்லெண்ணை
பூமாதேவி கையெடு“

என்று சிறுவர்கள் குறிப்பிடுவதிலிருந்து, இதனை அறியலாம்.

**வானியல்**

வானத்தின் அமைப்பு, அவ்வானத்தில் உள்ள சூரியன், சந்திரன், விண்மீன்கள் இவற்றின் தன்மைகள், செயல்பாடுகள் ஆகியன குறித்த அறிவைச் சிறுவர்கள் விடுகதைகள் மூலம் கற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

உலகுக்கெல்லாம்
ஒரே துப்பட்டி - அது என்ன?

ஊருக்கெல்லாம்

ஒரே கூரை - அது என்ன?

என்ற இவ்விரண்டு விடுகதைகளுக்கும் “வானம்“ என்பதே விடை. உலகம் முழுமைக்கும் ஒரே வானம் என்ற நியதியை சிறுவாகள் அறிந்துள்ளனர்.

அரசன் ஆளாத கோட்டைக்குப்
பகல்ல ஒரு காவல்காரன்
இரவுல ஒரு காவல்காரன்
அவர்கள் யார்?
சூரியன், நிலா

எட்டாத ராணி இரவில் வருவாள்.
பகலில் மறைவாள் - அவள் யார் ?
நிலா

இரவெல்லாம் பூந்தோட்டம்
விழித்துப் பார்த்தால் வெறுந்தோட்டம் - அது என்ன?
விண்மீன்

என்ற விடுகதைகள் சூரியன், சந்திரன், விண்மீன் ஆகியவற்றைத் தனித்தனியாகச் சுட்ட,

தபால் பெட்டி கிழிஞ்சு கிடக்குது
தைக்க நாதியில்லை
ராசாமகா கோவிச்சுக்கிட்டுப் போறா
அழைக்க நாதியில்லை
மல்லிகைப்பூ சிதறிக் கிடக்கு
அள்ள நாதியில்லை - அது எவை?

என்று ஒரே விடுகதையில் வானம், நிலவு, நட்சத்திரம் ஆகியவற்றிற்குப் புதிர் போடப்படுகிறது.

முத்தான முத்துகள்
முற்றத்திலே காயுது,
படி போட்டு அளக்கத்தான் ஆளில்லை அது என்ன?
நட்சத்திரங்கள்

ஆள் இல்லாத மலையில்
ஆயிரம் பூ பூத்திருக்கும் - அது என்ன?
வானம், நட்சத்திரம்

மழை பெய்துமுடித்தபின் வானவில் தோன்றும் என்பதற்கு,
ஏழு நிறத்துக்காரி

ஏப்பம் விட்டபின் தோன்றுவாள்
வானவில்
என்ற விடுகதையைச் சுட்டவர்.
ஆலமரம் தூங்க
அவனியெல்லாம் தூங்க,
ஸ்ரீரங்கம் தூங்க,
திருப்பாற்கடல் தூங்க,
ஒருவன் மட்டும் தூங்கவில்லை - அவன் யார்?

உருவம் இல்லாத மனிதன்
உலகம் எல்லாம் சுற்றுவான் அவன் யார்?

மேற்குறிப்பிட்ட விடுகதைகளுக்கு விடை காற்று. அனைத்து உயிரினங்களும் சுவாசிக்கக் காற்று இன்றியமையாதது. காற்றை நம்மால் உணர மட்டுமே முடியும். கண்களால் பார்க்க இயலாது. அதன் அவசியத்தையும் மற்றவர்களுக்கு உணர்த்தும் விதமாகவும் இந்த விடுகதைகள் அமைந்துள்ளன.

**வானியல் அறிவு**

சிறுவர்களுக்கு மழை மிகுந்த மகிழ்ச்சியைத்தரும் இயற்கை நிகழ்வாகும்.

“மழை வருது மழை வருது“ என்ற பாடல் வழி,

மழை வரும் முன் செய்ய வேண்டிய ஆயத்த வேலைகளைக் குறிப்பிடுகின்றனர். பருவ மழை காலங்களில் வெயிலோடு மழை பொழிவது இயல்பு. அச்சூழல் சிறுவர்களுக்கு உற்சாகத்தை அளிக்க,

“வெயிலு மழை பெய்யுது
காக்காவுக்கும் நரிக்கும் கல்யாணம்“

என்று பாடி மகிழ்வர்.

**மலை**

வெயில் காலங்களில் மலைப் பகுதிகளில் உள்ள மரங்கள் ஒன்றோடொன்று உரசுவதினால் சில நேரங்களில் தீப்பிடிக்கும் அபாய நிலை ஏற்படுவதுண்டு. இவ்வியற்கை நிகழ்வு.

“மலையில் தீப்பிடிக்குது
பிள்ளைகளே ஓடி வாங்க“

என்ற சிறுவர் பாடலில் சுட்டப்பெறுகிறது.

**நீர்வள இயல்**

புவியியலின் உட்பிரிவுகளில் ஒன்று நீர்வள இயல். இன்று தண்ணீரின் தேவையையும், தேடலும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில்,

தாத்தா ஆற்றில் பார்த்தார் !
அப்பா கிணற்றில் பார்த்தார்!
நாம் குழாயில் பார்த்தோம்!
மகன் பாட்டிலில் பார்க்கிறான்!
பேரன் எங்குப் பார்ப்பானோ?

என்ற “தண்ணீர் குறித்த விழிப்புணர்வு“ வாசகம் ஈண்டு நோக்கத்தக்கது. ஆனால் நாட்டுப்புறச்சிறுவர் வழக்காறுகளில் என்றான விடுகதைகளைப் பார்க்கும்போது, நீரின் தோற்றுவாய் முதல் அது சென்றடையும் நிலைவரையுள்ள நீரின் பல வடிவங்களை நாட்டுப்புறச் சிறுவர்கள் அறிந்துள்ளனர் என்ற உண்மைப் புலனாகிறது.

“அள்ள முடியும்,
ஆனால் கிள்ள முடியாது“
அது என்ன?
“ஓடோடும் சங்கிலி
உருண்டோடும் சங்கிலி
பள்ளத்தைக் கண்டால்
பாய்ந்தோடும் சங்கிலி“ அது என்ன?

என்பதற்கு, “தண்ணீர்“ என்பது விடை என அறிந்துள்ள சிறுவர்கள், மலையில் பொழியும் மழை நீர், அருவியாக வீழ்ந்து, ஆறாகப் பெருக்கெடுத்து, கடலில் சென்று

சேருகிறது என்ற உண்மையையும் அந்நீர் நிலைகள் அருவி, ஆறு, கடல் என்ற வகைப்படுத்தப்படுவதையும் அறிந்திருக்கின்றனர்.

ஈர்க்கு ஈர்க்கு நெட்டை ஈர்க்கு
ஈரப்பதம் ஆக்கும் உயிர்க்கு
வானத்தையும் பூமியையும்
ஊசியாக தைக்கும் ஈர்க்கு - அது என்ன?
மழை

சலசலவென சத்தம் போடுவான்
சமயத்தில் தாகம் தீரப்பான் - அவன் யார்?
அருவி

வளைந்து நெளிந்து செல்பவள்
வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் -அவள் யார் ?
ஆறு

ஓயாமல் இரையும் இயந்திரமல்ல,
உருண்டோடி வரும் பந்தும் அல்ல அது என்ன?
கடல்
என்ற விடுகதைகள் அதற்குச் சான்றாக அமைய,
அள்ள அள்ளக் குறையாது
ஆனால் குடிக்க உதவாது - அது என்ன?
கடல்நீர்

என்ற விடுகதை அவற்றின் தன்மையையும் சிறுவர்கள் அறிந்துள்ளனர் என்பதைச் சுட்டுகிறது.

**நீர்நிலைகள்**

கிராமங்களில் உள்ள கிணறுகள், குளங்கள் சிறுவர் வழக்காறுகளில் சுட்டப்பெறுகின்றன.

ஊசி நுழையாத கிணற்றிலே
ஒரு படித் தண்ணீர்
இளநீர்

எங்க வீட்டுக் கிணற்றிலே

வெள்ளிக் கிண்ணம் மிதக்குது

நிலா

அவற்றில் நண்டு, தவளை, ஆமை போன்ற உயிரினங்கள் வாழுகிற செய்தி நாட்டுப்புற சிறுவர்கள் அறிந்த ஒன்றாக உள்ளது. அதனாலேயே தங்கள் பாடல்களுக்கு அவற்றைப் பாடுபொருளாக்கி மகிழ்ந்தனர்.

“கேள்வி : கோபாலா

பதில் : ஏன் சார்“ என்ற கேள்வி பதில் விளையாட்டில்

“கேள்வி : என்ன ஆமை?

பதில் : குளத்தாமை“

“தாத்தா தாத்தா தண்ணிக்குள்ள

தவள ரெண்டும் பொந்துக்குள்ள“

“கோனாரையா கோனாரு

கொளத்துக்குப் போனாரு

நண்டப் பிடிச்சாரு“

என்ற பாடல்களில் குளத்தில் வாழும் ஆமை, நண்டு, தவளை முதலியன சுட்டப்பெறுகின்றன.

**உயிரியல்**

உயிரியல் என்பது மனிதன், விலங்கு, பறவை மற்றும் தாவரம் போன்ற உயிரினங்களைப் பற்றி அறிதலைக் குறிக்கும்.

**மனித உடலியல்**

அஞ்சு பேருக்கு ஒரு தட்டு

அது என்ன?

உள்ளங்கை

ஓர் அரண்மனையில்

முப்பத்திரெண்டு காவலர்கள் அவர்கள் யார்?

பற்கள்

யாரும் செய்யாத கதவு
தானே திறக்கும்
தானே மூடும் - அது என்ன ?
கண் இமை

வெள்ளி ஓடையில்
கருப்பு மீனு துள்ளி விளையாடுது - அது என்ன?
கண்

அதட்டுவாள், அலறுவாள்
ஆனால் கோட்டையை விட்டு
வெளியே வரமாட்டான்
அவள் யார்?
நாக்கு
ஒரு குகை
32 வீரர்கள்,
ஒரு நாகம் அது எந்தக் குகை?
வாய், பற்கள், நாக்கு.

பாலாற்றின் நடுவே
கறுப்பு மீன் ஓடுது - அது என்ன?
கண்கள், கருவிழி

தொட்டுப் பார்க்கலாம்
எட்டிப் பார்க்கமுடியாது அது என்ன?
முதுகு

அண்ணனுக்கு எட்டாதது
தம்பிக்கு எட்டும் - அது என்ன?
உதடு.

இரண்டு பேர் கண்டு
அஞ்சி பேர் பறிச்சான்
முப்பத்தி ரெண்டு பேர் நொறுக்கி

ஒருத்தன் விழுங்கிட்டப் போறான்.
அது யார் யார் ?
கண், கை, பல், நாக்கு.

சின்ன வீட்டுக்குள்ளே சிப்பி
அடங்கி இருக்கு - அது என்ன?
பல்

**விலங்கியல்**

“சங்கிலி புங்கிலி கதவைத்திற“ என்ற பாடலில், புலி, ஆடு, ஓநாய் ஆகியன இடம்பெறுகின்றன. கீரிப்பிள்ளையை,

கீரி கீரி நண்டு பிடி
கீரிப்பிள்ள நண்டு பிடி
பிடிச்ச நண்ட சட்டில போட்டு
பின்னும் பின்னும் நண்டு பிடி“
என்ற பாடல் வழி அறிமுகம் செய்கின்றனர்.
“ஓடுகிற நரியில் ஒருநரி சிறுநரி“
“மொட்ட மண்ட ரேடியோ
கொட்டடிக்க வர்யா
நான்வரல சாமி
நரி பிடிக்கப் போறேன்“

“நரியே நரியே சுற்றிவா“ (அமர்ந்திருப்பவர் பாடுதல்) என. சிறுவர்கள் “நரி“யைத் தங்கள் பாடல்களில் அதிகமாகக் குறிப்பிடுகின்றனர். நம்மைச் சுற்றி வாழும் விலங்குகள், பறவைகள், அவற்றின் உடல் அமைப்புகள், அவற்றின் இயல்புகள் ஆகியன குறித்த அறிவு சிறுவர்களிடம் காணப்பட்டதை விடுகதைகள் வழி அறிய முடிகிறது.

ஆடி ஆடி நடப்பான்
அரங்கதிர வைப்பான். அவன் யார்?
யானை

கழற்றிய சட்டையை மறுபடியும்
போடமாட்டான் - அவன் யார்?
பாம்பு

மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால்
வலை பின்னுவானாம் - அவன் யார்?
சிலந்தி

ஆயிரம் பேர் அணி வகுத்தாலும்
ஆரவாரம் இராது - அவர்கள் யார்?
எறும்புக் கூட்டம்

மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல,
பட்டை போட்டிருப்பான் சாமி அல்ல - அவன் யார்?
அணில்

பிறக்கும்போது வால் உண்டு
இறக்கும்போது வால் இல்லை - அது என்ன?
தவளை

**பறவைகள்**

தலைவன் : கோழி பறபற

குழு : பறபற

என்ற பாடலில் குழுவின் தலைவன் பறவைகளின் பெயரைச் சொல்லும்போது மற்றவர் "பறபற" என்றும், பறவை அல்லாத வேறு பெயர் சொல்லப்பட்டால் அமைதியாகவும் இருப்பர். இப்பாடலில் சிறுவர்கள் தாங்கள் அறிந்த பறவைகளின் விலங்குகளின் பெயர்களைக் கூறி மகிழ்கின்றனர். அவற்றோடு பறவைகளின் நிறம், இயல்பு, செயல்பாடுகளையும் அறிந்துள்ளனர் என்பதை விடுகதை வழி அறியலாம்.

பச்சை நிற அழகிக்கு
சாயம் பூசாமலே சிவந்தவாய் - அவள் யார்?
கிளி

ஒருவனுக்கு உணவளித்தால்
ஊரையே கூட்டுவான். - அவன் யார்?
காகம்

இரவிலே விழித்திருப்பான்
பகலிலே தூங்குவான் - அவன் யார்?
ஆந்தை

**தாவரவியல் அறிவு**

உறவுகளோடு இயற்கை உறவுகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு குழந்தைப் பருவத்திலேயே கிடைத்துள்ளதைக் குழந்தைப் பாடல் வழி அறியமுடிகிறது.

**மலர்கள்**

“தாப்பூ தாமரப்பூ
தாயார் வீட்டுச் செண்பகப்பூ
மாம்பூ மகிழம்பூ
மாமியார் வீட்டு மல்லிகப்பூ“

என்ற பாடலில் தாமரைப் பூ. செண்பகப்பூ, மகிழம்பூ, மல்லிகைப்பூ போன்ற பூவகைகள் சுட்டப்பெறுகின்றன. மாசி மாதத்தில் மல்லிகைப் பூக்கும் என்ற சிந்தனை,

“டப்பா டப்பா வீரப்பா

எப்ப கல்யாணம்

மாசி பொறக்கட்டும்

மல்லிகப்பூப் பூக்கட்டும்“

என்ற பாடலில் இருந்து அறியப்படுகிறது. பூப்பறிக்கிற விளையாட்டில் சிறுமியருக்கு ரோஜா, மல்லிகை எனப் பூக்களின் பெயர்கள் சூட்டப்பட்டு,

“பூப்பறிக்கிற வருகிறோம்! பூப்பறிக்கிற வருகிறோம்!
எந்தப் பூவை எந்த மாதத்தில்“

என்று பாடி மகிழ்கின்றனர். செடி, கொடி, மரம் ஆகியன வளர்வதற்கு நீர் அவசியம் தேவை என்பதை சிறுவர்கள் சிறுவயதிலேயே அறிந்திருந்தனர்.

“ஒரு கொடம் தண்ணி எடுத்து
ஒரு பூப் பூத்ததாம்....“

என்ற விளையாட்டுப் பாடலில் தண்ணீரின் அளவுக்கு ஏற்ப பூக்கள் மலரும் என்ற சிந்தனையை உரைக்கின்றனர். “பாகற்காய்“ கொடி வகையைச் சார்ந்தது, அதைப் பந்தலிலே படர விடுவர் என்பதை,

“குத்தடி குத்தடி சைலக்கா
குனிஞ்சி குத்தடி சைலக்கா
பந்தலிலே பாவக்கா“

என்ற பாடலும், கொடிமுந்திரி குலை குலையாய்க் காய்க்கும் என்பதை, “குலை குலையா முந்திரிக்காய்“ (சுற்றுபவர் பாடும் பாடல்) என்ற பாடலும் சுட்டுகின்றன. வாழைக் குலையை “வாழைத்தார்“ என்று அழைக்கும் மரபை,

“தார் தார் வாழைக்கா
தாமரக் குச்சி வாழைக்கா“

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

**மரம் பனைமரம்**

தமிழ்நாட்டின் மாநில மரம் பனையாகும் அவற்றின் பயன்ஏராளம். கிராமங்களின் அடையாளச் சின்னமாக இருந்த இப்பனைமரம் இன்று பல காரணங்களால் அழிக்கப்பட்டு வருகின்றன. பனை மரத்தின் பாகங்களைத் தங்கள் விளையாட்டுப் பொருள்களாக (ஓலை காற்றாடி, கூந்தல் வண்டிச் சக்கரம், மட்டை பந்து அடிக்க) பயன்படுத்தி மகிழ்ந்த சிறுவர்கள் தங்கள் பாடல்களில் பனை மரத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

“பனமரமே பனமரமே
பச்சக் கண்ணாடி“

என்ற வரிகள் அதனைச் சுட்டும். “கோனாரையா கோனாரு“ என்ற பாடலில், “புளிய மரத்துல ஏறினாரு“ என்று புளிய மரம் சுட்டப் பெறுகிறது.

“மொட்டையும் மொட்டையும் சேந்துச்சாம்
முருங்க மரத்துல ஏறுச்சாம்“

என்ற பாடல் முருங்கை மரத்தைச் சுட்டுகிறது. “தாத்தா தாத்தா தண்ணிக்குள்ள“ என்ற பாடலில்,

“மாமரத்த வெட்டி
மச்சுவீடு கட்டி!“

என்று பாடுவதிலிருந்து மாமரம் வீடுகட்ட பயன்பட்டதை அறிய முடிகிறது.

ஆழக்குழி தோண்டி
அதுல ஒரு முட்டையிட்டு
அன்னாந்து பார்த்தா
தொண்ணூறு முட்டை! அது என்ன?
தென்னை மரம்

இலையுண்டு கிளையில்லை,
பூ உண்டு மணமில்லை,
காய் உண்டு விதையில்லை,
பட்டை உண்டு கட்டை இல்லை,
கன்று உண்டு பசு இல்லை அது என்ன?
வாழைமரம்

அடிப்பக்கம் மத்தளம்,
இலை பர்வதம்,
குலை பெரிது,
காய் துவர்ப்பு,
பழம் தித்திப்பு. அது என்ன?
வாழைமரம்

என்று மரத்தின் அமைப்பைச் சுட்டும் வகையில் விடுகதைகள் அமைந்திருக்க, தாவரம் உருவாகும் பருவ காலமும், அமைப்பும் சில விடுகதைகளில் சுட்டப்படுகின்றன.

மழை காலத்தில்
வெள்ளைக்குடை பிடிப்பான் - அவன் யார்?
காளான்

காய் காய்க்கும் பூ பூக்கும்
இலை இல்லை. - அது என்ன?

சப்பாத்திக்கள்ளி

பூக்கும், காய்க்கும், வெடிக்கும்.
ஆனால் பழுக்க மட்டும் செய்யாது - அது என்ன?
இலவம்பஞ்சு
மற்றொரு விடுகதை மரத்தின் உறுப்பினைச் சுட்டும் விதத்தில்,
மரத்தின் மேலே தொங்கும்
அது மலைப் பாம்பல்ல - அது என்ன?
விழுது
என அமைந்துள்ளது. இதனைக் காணும்போது,
கிளையினில் பாம்பு தொங்க,
விழுதென்று குரங்கு தொட்டு,
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்,
கிளை தோறும் குதித்துத் தாவி,
கீழுள்ள விழுதையெல்லாம்.
ஒளிப் பாம்பாய் எண்ணி எண்ணி,
உச்சி போய் தன் வால் பார்க்கும்."

பாரதிதாசனின் அழகின் சிரிப்பில் வரும் "ஆல்" கவிதை நினைவிற்கு வரும்.

**காய்கள்**

நாட்டுப்புறச் சிறுவர்கள் தங்கள் பகுதிகளில் விளையும் காய் மற்றும் பழங்களின் நிறம், சுவை, வடிவம் ஆகியன குறித்த அறிவு நிறைந்தவர்களாக இருந்ததை விடுகதைகள் வழி அறிய முடிகிறது.

பச்சைப் பெட்டிக்குள்
வெள்ளை முத்துக்கள்! அது என்ன?
வெண்டைக்காய்!
எங்க வீட்டுத் தோட்டத்தில் தொங்குது
ஏகப்பட்ட பச்சைப் பாம்புகள். அது என்ன?
புடலங்காய்

சிவப்பு பைக்குள்
சில்லறைக் காசு

சிதறிக் கிடக்கு! அது என்ன?
மிளகாய் வற்றல்

பச்சைப்பை நிறைய
பவுண் காசு! அது என்ன?
பச்சை மிளகாய்

உரிக்க உரிக்கத் தோலாண்டி
உள்ள பார்த்தா மாயாண்டி! - அது என்ன?
வெங்காயம்

கசக்கிப் பிழிந்தாலும்
கடைசிவரை இனிப்பான் - அவன் யார்?
கரும்பு

முக்கண்ணன்
சந்தைக்குப் போகிறான் அவன் யார்?
தேங்காய்

உயரத்தில் இருப்பான்
தாகம் தீர்ப்பதில் தனியிடம் - அது என்ன?
இளநீர்

தாடிக்காரன், மீசைக்காரன்
கோயிலுக்குப் போனால்
வெள்ளைக்காரன் - அது என்ன?
தேங்காய்

**பழங்கள்**

“மாதுளம் பழமே மாதுளம் பழமே
மெல்ல வந்து முள்ளிப்போ“

என்ற விளையாட்டுப் பாடலில் கொய்யா, மாம்பழம், வாழைப்பழம் எனக் கிராமங்களில் கிடைக்கும் பழவகைகளைக் கூறி மகிழ்கின்றனர். தாவர வகைகளைப் பயிரிடும் முறை, அவற்றின் விளைச்சல், காய் கனிகளின் இயல்பு, அவற்றின் சுவை எனத் தாவரத்தின் எல்லா வகையான தன்மைகளும் விடுகதைகளாகக் கேட்கப்பட்டு விடை வழங்கியுள்ளதைக் காண இயலுகிறது.

அப்பன் சடையன் ஆத்தா சடச்சி
பிள்ளை சக்கரக்கட்டி - அது என்ன?
பலாப்பழம்

தொப்பொன்று விழுந்தான்
தொப்பிக் கழன்றான் அவன் யார்?
பனம்பழம்

காக்கைப் போலக் கருப்பானது,
கையால் தொட்டால் ஊதா நிறம்,
வாயால் மென்றால் நீல நிறம் - அது என்ன?
நாவல் பழம்

# அலகு - 5

## 5. மொழி நடை

நாட்டுப்புற வழக்காறுகளுக்கு இலக்கண வரையறை கிடையாது. ஆயினும் நடையியல் கூறுகளாகக் கருதப்படும் எதுகை, மோனை, இயைபு, ஒலிக்குறிப்புச் சொற்கள், வட்டார வழக்குச் சொற்கள் ஆகியன அவற்றில் இயல்பாகவே பயின்று வருவதைக் காணமுடிகிறது. உள்ளங்கவரும் சந்த நடை, எளிய சொற்கூட்டு, எளிதில் திருப்பிச் சொல்லும் மொழி நடை, மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் ஓசை நயம், இனிமை என்றவாறு அமைந்திருப்பது நாட்டுப்புறப் பாடல்களின் தனிச்சிறப்பாகும்.

ஆசை தருங்கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசை தருமின்பம் உவமையிலா இன்பமன்றோ

என்பார் பாரதி. அவ்வாக்கின் உண்மையை ஒலிநயப் பாடல்களில்தான் காணமுடியும். இவ்வொலிநயப் பாடல்களில் எதுகைக்கும் மோனைக்கும் முரண்தொடைக்கும் இயைபுத் தொடைக்கும் முதன்மையான இடம் அளிக்கப்படும். ஒலிநிலையில் நாட்டுப்புறப்பாடல்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுவதற்கு முக்கிய காரணம், அவை வாய்மொழியாக வழங்கி வந்தன. அவற்றை மனப்பாடம் செய்து நினைவுகூர்ந்திட வேண்டிய தேவை இருந்தது. நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கு சில உத்திகள் தேவைப்பட்டன. சில ஒலிகள் அல்லது திரும்பத்திரும்ப பயின்று வருமானால் முழுப்பாடலையும் எளிமையாக நினைவு கொள்வதற்கு அது உதவும். எனவேதான் நாட்டுப்புறப் பாடல்களுக்கே உரிய ஒரு உத்தியாக இது இருந்து வந்திருக்கிறது. குறிப்பாகச் சிறுவர் வழக்காறுகள் வேறுபட்ட ஒரு மொழித் தளத்தில் நிகழ்வன. எதுகை, மோனை, ஒலிநயம் ஆகியன அவர்களுக்கு விளையாட்டுப் பொருட்களை விட முக்கியமானவையாகக் கருதப்பட்டன.

### நடையியல்

மொழியியலும் இலக்கியத் திறனாய்வும் சந்தித்தபோது மலர்ந்ததே நடையியல் ஆகும். பொதுவாக, இலக்கிய அணுகுமுறையாகப் படைப்பாளியையும் கருத்தினையும் ஆய்வதைத் திறனாய்வாளரும், மொழியாகிய கருவியை ஆய்வதை மொழியியலாரும் மேற்கொண்டாலும் இருவரும் தனித்து நின்று தீர்வு காணமுடியாத சில சிக்கல்கள் இலக்கிய சுவைப்பில் காணப்படுவதுண்டு. சில வேளைகளில் ஒருவரது எல்லைக்குள் மற்றொருவர் நுழைந்து விடக் கூடிய வாய்ப்பும் உண்டு. இப்படிப்பட்ட மயக்கங்கள் ஏற்படும்போது நடையியல் செயல்படுகிறது எனலாம். மொழியியல் உத்திகள்

செயற்படும்போது உருவமும், திறனாய்வு உத்திகள் செயற்படும்போது கருத்தும் முதலிடம் பெறுகின்றன. இவ்விரு உத்திகளையும் ஒரு சேரக் கையாண்டு, கரு - உரு ஆகிய இரண்டின் உறவினைக் காண்பதே நடையியலின் நோக்கமாகும் என்பார் நீதிவாணன்.

**குழந்தை வழக்காறுகளில் ஒலிநயம்**

எதுகை மோனைகளின் ஒலிநயத்தை முக்கியமாகக் கொண்டு குழந்தை வழக்காறுகளை தே.லூர்து சில வகைகளாகக் குறிப்பிடுவார்.

- ஒலிநயப் பாடல்கள் சில, சிலரை அல்லது முரண்பட்டோரைத் திகைக்கச் செய்வன. இதற்காக சில விந்தையானக் குரலில் உச்சரிக்க வேண்டி வரலாம்.
- நன்றாகத் தெரிந்த பாடலைப் பகடி பண்ணல்.
- விளையாட்டுப் பாடல்கள், விளையாட்டை முறைப்படுத்துவனவாக அமையும். இதில் ஒவ்வொரு அசைவும் துல்லியமாக உச்சரிக்கப்படும்.
- வேடிக்கைப் பாட்டுகள் அல்லது நையாண்டி பாட்டுகள் ஆசிரியர், வயதானவர், சாதி என்று யாரையும் கேலி செய்வன.
- வேடிக்கையான ஒலிகளை விந்தையான முறையில் அமைத்து உருவாக்கப்படுவன மற்றொரு வகை.
- சில பாடல்கள் பல் விழுந்த ஓட்டைப் பல்லர்களை, மொட்டைகளைக் கேலி செய்யப் பயன்படும்.

**எதுகை**

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்தால் அது “எதுகை“ எனப்படும்

டப்பா டப்பா வீரப்பா
எப்ப கல்யாணம்

மொட்டைப் பாப்பாத்தி
ரொட்டி சுட்டாலும்

மொட்ட மண்ட ரேடியோ
கொட்ட அடிக்க வரியா

ஈச்சி எலுமிச்சு
மூச்சு விட்டா போச்சு

நாக்க நீட்டாத
வாக்கப்படாத

வெள்ளை வெள்ளை கொக்கே
வெள்ளாட்டங் கொக்கே

மாது மாது ஒன்னாம் தம்பி
கோது கோது கொழுந்து வெத்தலை

என்ற பாடல்களில் எதுகை பயின்று வருகிறதைக் காண முடிகிறது.

**மோனை**

அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது "மோனை" எனப்படும்

தட்டாங்கி கொட்டும் பிள்ளை
தயிரும் சோறும் தின்னும் பிள்ள

வெத்தல வெத்தல
வெள்ளாங்குடி வெத்தல

தார்தார் வாழைக்கா
தாமரக் குச்சி வாழைக்கா

அண்டா கொப்பரை
அடுத்தே மங்கலம்

கட்ட கட்ட
கருவேலங் கட்ட

பரங்கிக்காயைக் பறித்து
பட்டையெல்லாம் சீவி

என்ற பாடல்களில் மோனை பயின்று வருகிறது.

**ஒலி இயைபு**

ஒவ்வொரு அடியிலும் இடம்பெறும் இறுதி சீர்களின் ஒலி ஒன்றுபட்டு அமைவது ஒலி இயைபு எனப்படும்.

பட்டம் பறக்குது
பள்ளிக்கூடம் திறக்குது

கோனாரையா கோனாரு
குளத்துக்குப் போனாரு

மொட்டையும் மொட்டையும் சேந்துச்சாம்
முருங்கை மரத்துல ஏறுச்சாம்

தாத்தா தாத்தா தண்ணிக்குள்ள
தவளை ரெண்டும் பொந்துக்குள்ள

அதோ பார் ரோடு
ரோட்டு மேல காரு

சென்னை பம்பாய் கல்கத்தா
செவிட்டில ரெண்டு கொடுக்கட்டா
அதோ பாரு மைனா
ஆஸ்பத்திரி கொய்னா

இவற்றில் சில பாடல்கள் எழுத்துகள் இயைந்து வந்து ஒலிஇயைபையும், சில பாடல்கள் ஒலி இயைபுகள் மட்டுமே உடையவனாகவும் அமைந்துள்ளன.

**ஒலிக்குறிப்புச் சொற்கள்**

விளையாட்டுப் பாடல்கள் அளவால் சிறியதாக இருக்கும். பல பாடல்கள் பொருளற்றவையாகவும் இருக்கும். அத்தகையப் பாடல்களில் ஒலிக்குறிப்பு மட்டுமே முக்கியத்துவம் பெறும். சிறுவர்கள் எளிதில் நினைவில் கொள்ளத்தக்கதாகவும் விளையாட்டுக்குத் துணை செய்யத்தக்கதாகவும் இத்தகைய பாடல்கள் அமைந்திருக்கும். நாட்டுப்புற பாடல்கள் ஒலிக்குறிப்பு சொற்களைப் பற்றி இயங்குவதே ஒருவகை நடையில் உத்தியாகும். இந்த ஒலிக்குறிப்புச் சொற்கள் பாடல்களைப்

படிப்பவர் அல்லது கேட்பவர்களை நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு அழைத்துச் செல்லும் இயல்பினது.

குன்னாங் குன்னாங் காத்துக்குள்ள
குருட்டுப் பாம்பு செத்துக் கிடக்கு
ஆடுவியா ஆட மாட்டியா
குர்..ரா...

என்ற பாடலில் இறுதியில் "குர்..ரா.." ஒலிக்குறிப்புச் சொல் இடம் பெற்று பாடலுக்கு இனிமை சேர்க்கிறது. மற்றொரு பாடலில்

சூருகுத்தி சுப்பாளையம்
மானக் கண்ணு மத்தாளையம்

என்ற பாடலில், "சிச்சிக்கோ..." என்ற ஒலிக்குறிப்புச் சொல் இடம்பெறுகிறது. மேலும்

"சாம்பலெடு சாம்பலெடு"

என்ற பாடலில்,

எண்ண தடவுங்க
சுரீர்..!
மாவூத்துங்க
சுரீர்..!

என்ற "சுரீர்" ஒலிக்குறிப்பு இடம் பெறுகிறது.

"தார் தார் வாழைக்காய்" என்ற பாடலில் "பூம்பூம்" என்ற ஒலிக்குறிப்பு இடம்பெறுகிறது. "ராமா ராமா மணியடி" என்ற பாடலில் "டிங் டிங் டிங்" என்ற சொல் ஒலிக்குறிப்பாக அமைந்துள்ளது. "மாது மாது ஒன்னாம் தம்பி" என்ற பாடலில் "டாயக்கோ டமுக்கோ" ஒலிக்குறிப்பும் 'மொட்டையும் மொட்டையும் சேர்ந்தச்சாம்" என்ற பாடலில் "காள் காளீ"னு கத்துச்சாம் என்ற ஒலிக்குறிப்பும் இடம்பெறுகின்றன.

"ஈச்சிக்குத் தண்ணி ஊத்தினா
ஈச்சம் பழம் தின்னலாம்"

என்ற பாடலில் "வீச் வீச் டொமக்" என்ற ஒலிக்குறிப்பு, நீரை இரைப்பது போன்ற உணர்வைத் தருகிறது.

**ஒலித்திரிபு**

ற - ண : ஒன்று - ஒண்ணு

ற - க : நிற்கையில் - நிக்கையில்

க - வ : சாக -சாவ

லகர யகர ஒற்றில் முடியும் பெயர்ச்சொற்களில் லகர யகர ஒற்றுகள் கெட்டு குற்றியலகரம் இகரம் உகரமாகத் திரியும்.

அகரமாய்த் திரிதல் : தோளில் - தோள்ல

காலில் - கால்ல

மழை - மழ

இகரமாய்த் திரிதல் : பாய் - பாயி

காய் - காயி

உகரமாய்த் திரிதல் : உரல் - உரலு

பரல் - பரலு

**அடுக்குத் தொடர்**

ஒரு சொல் அடுக்கி வருகிற நிலையை அடுக்குத்தொடர் எனலாம்.

"கீரி கீரி" நண்டுபிடி

"மொட்டையும் மொட்டையும்" சேந்துச்சாம்

"குத்தடி குத்தடி" சைலக்கா

"டப்பா டப்பா" வீரப்பா

"பனை மரமே பனை மரமே"

"தார் தார்" வாழைக்கா

"மாது மாது" ஒன்னாம் தம்பி

"கோது கோது" கொழுந்து வெத்தல

என்ற அடிகளில் அடுக்குத் தொடர்களைக் காண முடிகிறது.

**இரட்டைக் கிளவி**

அடிச்சொற்கள் இரட்டித்து நின்று பொருள் உணர்த்துவது இரட்டைக்கிளவி ஆகும். இது பிரித்தால் பொருள் தராது.

“குடுகுடு“ ராசா

“குன்னாங் குன்னாங்“ காத்துக்குள்ள

“காலுகாலுன்னு“ கத்துச்சாம

என்ற பாடல் வரிகளில் இரட்டைக்கிளவி பயின்று வருகின்றன.

**எதிரொலிச் சொற்கள்**

சொற்களின் எதிரொலிச் சொற்களாக அமைந்து இனமான பொருளை உணர்த்துதலே எதிரொலி சொற்களாகக் கருதப்படும்.

“தத்தைக்கா புத்தைக்கா“

“காக்கா மூக்கா“

“அஸ்கா புஸ்கா“

என்ற சொற்கள் எதிரொலிச் சொற்களாக இடம்பெறுகின்றன.

**பொருளற்ற சொற்கள்**

பொருளில்லாத சொற்களை இணைத்துப் பாடல் புனையும் திறன் சிறுவர் பாடல்களில் காணப்படுகின்றது. இதுவும் அது வடிவ அழகுகளுள் ஒன்றாகும்.

ஆக்கு பாக்கு வெத்தல பாக்கு

டாம் டூம் கொய்யா

அஸ்த லக்கடி கும்தலக்கடி

உம்பெயர் கொய்யா

என்ற பாடலில் ஆக்கு, பாக்கு, டாம், டூம், அஸ்தலக்கடி போன்ற சொற்கள் பொருளற்ற வெற்றுச்சொற்கள். இருந்தாலும் இந்தப் பாடல்களில் அவைகளை நீக்கிவிட்டால் இந்த பாடலில் உள்ள ஈர்ப்பு நீங்கிவிடும். ஆகவே இப்பாடலின் ஈர்ப்புத் தன்மைக்கு இந்தப் பொருளற்ற சொற்களே காரணமாக அமைகின்றன.

**ஆங்கிலச் சொற்கள்**

ஆங்கிலேயர் நம் நாட்டை விட்டு வெளியேறினாலும், அவர்கள் விட்டுச் சென்ற ஆங்கில மொழியின் தாக்கம் படித்தவர் மட்டுமல்லாது, எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளது. தற்காலத்தில் தமிழ்ச் சொற்களுக்கு, ஆங்கிலத்தில் பொருள்

கூறினால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய இழிநிலை நிலவுகிறது. அதன் தாக்கம் நாட்டுப்புறத்தையும் விட்டு வைக்கவில்லை. “பச்சை மிளகாய் காயுது“ என்ற பாடலில் டீச்சர், டியூப்லைட், சாக்லேட், இன்ஸ்பெக்டர் போன்ற பல ஆங்கிலச் சொற்கள் சிறுவர்களால் இயல்பாய் வழங்கப்படுகின்றன. ஏபிசிடி எங்கப்பன் தாடி என்ற பாடலில் இயல்பாக ஆங்கில எழுத்துகள் ஆளுகை பெற்றுள்ளன.

**வட்டாரச் சொற்கள்**

நாட்டுப்புறப்பாடல்கள் எழுதப்படாத இலக்கியமாக இருப்பதால் எந்த வட்டாரத்தில் வழங்கப்படுகிறதோ அந்த வட்டாரச் சொற்கள் அப்பாடல்களின் வழங்கப்படுகின்றன. சிறுவர்கள் பாடல்களில் “வட்டாரச் சொற்கள்“ இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

**மச்சு வீடு**

வீட்டின் மேல்தளப் பகுதியை “மச்சு“ எனும் சொல்லால் இவ்வட்டார மக்கள் இன்றும் குறிப்பதுண்டு. சிறுவர்கள் பாடும் கேலிப் பாடலான,

“தாத்தா தாத்தா தண்ணிக்குள்ள
தவளை ரெண்டும் பொந்துக்குள்ள
மாமரத்த வெட்டி மச்சுவீடு கட்டி“

என்று பாடலில் மச்சுவீடு என்பது குறிப்பிடப்படுகிறது.

சமையலறையை அடுப்பாங்கரை
சாதம் வடித்த தண்ணீர் -வடிதண்ணி
மோளக்காரன் கொட்டுக்காரன்

**வடிவ அழகு**

நாட்டுப்புறச் சிறுவர் பாடல்கள் தனக்கென தனித்த வடிவ அமைதியைப் பெற்றுத் திகழ்கின்றன. குறிப்பாக அந்தாதி அமைப்பு முறை, வினா விடை அமைப்பு முறை, உரையாடல் அமைப்பு முறை ஆகியனவற்றைச் சிறுவர்பாடல்களின் வடிவச் சிறப்புக்கள் என்று கொள்ளலாம்.

**அந்தாதி அமைப்பு**

அந்தமே ஆதியாக முடிவது அந்தாதி எனப்படும்.ஓர் அடியின் இறுதிப் பகுதி அடுத்த அடியின் தொடக்கப்பகுதியாக அமைவது அந்தாதியாகும். இது செய்யுள் தொடைகளுள் ஒன்றாகக் கருதத்தக்கது.

"ஈறு முதலாத் தொடுப்பது அந்தாதியென்று
ஓதினர் மாதோ உணர்ந்திசினோரே"

என்று அந்தாதிக்கு "யாப்பெருங்கலம்" இலக்கணம் உரைக்கிறது. இவ்வழியில் இத்தொடை நலம் நாட்டுப்புறச் சிறுவர் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

அதோ பார் ரோடு

ரோட்டு மேல காரு

காருக்குள்ள யாரு

நம்ம மாமா நேரு

நேரு என்ன சொன்னாரு

நல்லாப் படிக்கச் சொன்னாரு

**சொற்கூட்டு**

சொல் புதிது, சுவை புதிது, சொற்கூட்டும் இனிது. சிறுவர்கள் சொற்களை இணைத்து புதியன பாடி மகிழ்வர்.

நீயும் நானும் கூட்டு
பாடு ஒரு பாட்டு

சில்லரையை நீட்டு
சிவகாசி வேட்டு

திண்டுக்கல்லுப் பூட்டு
திருப்பித்தலைய ஆட்டு

ஒன்னுரெண்டு சொல்லிக்கோ!
ஓடிப்போயிப் பிடிச்சுக்கோ !

## வினா விடை அமைப்பு

வினா விடை அமைப்பில் சில பாடல்கள் அமைவதுண்டு.

தம்பி, தம்பி
எந்த ஊரு?
மயிலாப்பூர்
என்ன மயில்?
காட்டு மயில்
என்ன காடு?
ஆற்காடு
என்ன ஆறு?
பாலாறு
என்ன பால்?
கள்ளிப் பால்
என்ன கள்ளி?
இலைக் கள்ளி
என்ன இலை?
மாவிலை!
என்னமா?
அம்மா,

## சங்கிலித் தொடர் அமைப்பு

சில பாடல்கள் சங்கிலித் தொடர் போல் தொடர்ந்து அமைவதுண்டு.

தம்பி, தம்பி
எந்த ஊரு?
மயிலாப்பூர்
என்ன மயிலு
காட்டு மயிலு
என்ன காடு
ஆற்காடு
என்ன ஆறு
பாலாறு
என்ன பாலு

கள்ளிப் பாலு

என்ன கள்ளி

இலைக் கள்ளி

என்ன இலை

வாழை இலை

என்ன வாழை

கற்பூர வாழை

என்ன கற்பூரம்

ரச கற்பூரம்

என்ன ரசம்

மிளகு ரசம்

என்ன மிளகு

வால் மிளகு

என்ன வால்

நாய் வால்

என்ன நாய்

மர நாய்

என்ன மரம்

பலா மரம்

என்ன பலா

வேர்ப் பலா

என்ன வேர்

வெட்டி வேர்

என்ன வெட்டி

பனை வெட்டி

என்ன பனை

தாளிப் பனை

என்ன தாளி

விருந்தாளி

என்ன விருந்து

மணவிருந்து

என்ன மணம்

பூமணம்

என்ன பூ

மாம் பூ

என்ன மா

அம்மா

இதில் “அம்மா“ என முடியும் நிறைவுப் பகுதிவரை தொடர் அமைப்பினால் நிரம்பியுள்ளதைக் காணமுடிகின்றது.

**உரையாடல் அமைப்பு**

சிறுவர்களின் விளையாட்டுக்களுள் சில உரையாடல் அமைப்பில் அமைவதுண்டு. பூசணிக்காய் விளையாட்டில் உரையாடல் அமைப்பு உள்ளதைக் காண முடிகிறது.

ராஜா நீ போய் அந்தத் தோட்டக்காரனிடம், நான் கேட்டேன் என்று ஒரு பூசணிக்காய் வாங்கிட்டு வா!

வேலைக்காரன் : “சரி ராஜாவே, உத்தரவு!

வேலைக்காரன் தோட்டக்காரனிடம் : “ஏய் தோட்டக்காரா, ராஜா மகளுக்குக் கல்யாணமாம், அதனால் உன்னிடம் ஒரு பூசணிக்காயை உடனே வாங்கி வரச்சொன்னார்“

தோட்டக்காரன் : “பூசணி விதையை இப்பதான் ஊன்றி இருக்கிறேன். அதற்குள் பூசணிக்காய் கேட்டால் எப்படி?

வேலைக்காரன் ராஜாவிடம் : தோட்டக்காரன் இப்பதான் விதை நட்டிருக்கிறானாம்

ராஜா : அந்த விதையைக் கேட்டு வாங்கிட்டுவா!

வேலைக்காரன் தோட்டக்காரனிடம் : “ராஜா பூசணி விதையை வாங்கிட்டு வரச் சொன்னார்“

தோட்டக்காரன் : “நட்ட விதை இப்பதான் முளைச்சிருக்கு, காய் காய்ச்சதும் தருகிறேன்“

வேலைக்காரன் ராஜாவிடம் : விதை இப்பதான் முளைச்சிருக்காம்,

ராஜா: “பரவாயில்லை. முளைத்த செடியைக் கொண்டு வா“

வேலைக்காரன் தோட்டக்காரனிடம் : "ராஜா முளைத்த செடியை வாங்கிட்டு வரச் சொன்னார்"

தோட்டக்காரன் : முளைத்த செடி இப்பதான் கொடி வீசி இருக்கிறது.

வேலைக்காரன் ராஜாவிடம்: ராஜா! முளைத்த செடி இப்பதான் கொடி வீசி இருக்கிறதாம்!

ராஜா : "கொடி வீசியதைக் கொண்டு வா!

வேலைக்காரன் தோட்டக்காரனிடம் : "வீசியக் கொடியைக் கொடு"

தோட்டக்காரன் : "இப்பத்தான் கொடியில் பூப் பூத்திருக்கிறது"

வேலைக்காரன் ராஜாவிடம் : "கொடியில் இப்பத்தான் பூப் பூத்திருக்கிறதாம்"

ராஜா : "பூப்பூத்ததைக் கொண்டுவா"

தோட்டக்காரன், இப்பதான் பூ, பிஞ்சாகி இருக்கிறது பிஞ்சு, இப்பதான் விளைகிறது. இப்பதான் காய் திரண்டிருக்கிறது" என்று படிப்படியாகச் சொல்ல, வேலைக்காரன், அதை ஒவ்வொரு முறையும் ராஜாவிடம் போய் சொல்வதும், ராஜா கேட்பதைத் தோட்டக்காரனிடம் சொல்வதுமாக விளையாட்டு முடியும்வரை உரையாடல் தொடரும்.

## சிறுவர் வழக்காறுகள்

1. தாப்பூ தாமரப்பூ
தாயார் வீட்டுச் செண்பகப்பூ!
மாம்பூ மகிழம்பூ
மாமியார் வீட்டு மல்லிகப்பூ

2. கீரிகீரி நண்டுபிடி
கீரிப்பிள்ளை நண்டுபிடி
பிடிச்ச நண்ட சட்டில போட்டு
பின்னும் பின்னும் நண்டுபிடி!

3. தத்தாங்கி கொட்டும்பிள்ளை
தயிரும் சோறும் தின்னும்பிள்ளை
அப்பஞ்சுட்டா தின்னும்பிள்ள
அவல் இடிச்சா மொக்கும்பிள்ளை

4. மாக்கொழுக்கட்ட
மஞ்சக் கொழுக்கட்ட
மாமியார் கொடுத்தா
பிடிக்கொழுக்கட்ட

5. மாக்குத்து மஞ்சக்குத்து
பிள்ளையார்க் குத்து
பிடிச்சாக் குத்து

6. நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா
மல்லிகைப் பூக்கொண்டவா

7. கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு

மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு
சொக்காய் வாங்கலாம் கைவீசு
சொகுசாய்ப் போடலாம் கைவீசு
கோயிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு

8. அத்த செத்த நெய்யூத்து
ஆறிப் போனா நான் மாட்டேன்

9. காக்கா காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா
குருவி குருவிக் கொண்டைக்குப் பூக் கொண்டுவா!
கிளியே கிளியே குழந்தைக்குப் பழம் கொண்டுவா
கொக்கே கொக்கே குழந்தைக்குப் பால் கொண்டுவா!

10. சங்குச் சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுச்சாம் அது
சிங்குச் சிங்கென ஆடுச்சாம்
கொட்டக் கொட்டச் சொல்லுச்சாம் -அது
கூத்து ஆடப் பண்ணுச்சாம்
சங்குச் சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுச்சாம்
உலகம் மூணும் அளந்துச்சாம் - அது
ஓங்கி வானம் பிளந்துச்சாம்
கல கலவென்று சிரிச்சுதாம் - அது!
காணக் காண இனிக்குதாம்
சங்குச் சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுச்சாம்

11. சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்கிளியே சாய்ந்தாடு
கோயில் புறாவே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு

கோலமயிலே சாய்ந்தாடு
கொஞ்சுகிளியே சாய்ந்தாடு!

12. பருப்புக் கட பருப்புக் கட
சோறு
கூட்டு
குழம்பு
பாயாசம்
அப்பளம்
இது அப்பாவுக்கு, அம்மாவுக்கு
இது தாத்தாவுக்கு, பாட்டிக்கு
இது அண்ணனுக்கு, அக்காவுக்கு
கழுவிக் கழுவிக் கொட்டு
வண்ணானுக்குச் சோறு
கொண்டு போற வழி
எந்த வழி எந்தவழி
கிச்சி, கிச்சி, கிச்சி...

13. மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மீசை வச்ச பூனைக்குட்டி
பையப் பையப் பதுங்கி வந்து
பாலைக் குடிக்கும் பூனைக்குட்டி

14. எங்கள் வீட்டு பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால்
ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தைத் துடைக்கும்
நாற்காலியின் கீழ்ப் படுக்கும்

15. தோ தோ நாய்க்குட்டி
துள்ளிவா நாய்க்குட்டி
கழுத்தில் மணியைக்கட்டுவேன்
கறியும் சோறும் போடுவேன்
எங்கள் வீட்டைக் காத்திடும்
நன்றியுள்ள நாய்க்குட்டி

16. ஆனை ஆனை அழகர் யானை
அழகரும் சொக்கரும் ஏறும் யானை
கட்டிக் கரும்பை முறிக்கும் யானை
காவிரித் தண்ணீரைக் கலக்கும் யானை
குட்டி ஆனைக்குக் கொம்பு மொளச்சுதாம்
பட்டணம் எல்லாம் பறந்தோடிப் போச்சுதாம்.

17. அதோ பாரு ரோடு
ரோட்டு மேல காரு
காருக்குள்ள யாரு
எங்க மாமா நேரு
என்ன சொன்னாரு
எழுதப் படிக்கச் சொன்னாரு

18. நீண்ட வண்டி தொடர் வண்டி
நீண்ட தூரம் போகும் வண்டி
தண்டவாளத்தில் அது போகும்
தட தட வென்று விரைந்தோடும்
“கூ“... என ஒலிப்பது புகை வண்டி
“பாம்“.... என ஒலிப்பது மின் வண்டி
பச்சை, சிவப்பு கொடி இரண்டை
நிலையத் தலைவர் காட்டிடுவார்
சிவப்பைக் காட்டினால் நின்றுவிடும்
பச்சையைக் காட்டினால் பாய்ந்தோடும்.

19. மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
சேலத்து மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
அழகான மாம்பழம்
அல்வா போன்ற மாம்பழம்
தங்க நிற மாம்பழம்
உங்களுக்கு வேண்டுமா
இங்கே ஓடி வாருங்கள்
பங்கு போட்டுத் தின்னலாம்.

20. குவா குவா வாத்து
குள்ள மணி வாத்து
மெல்ல உடலை சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
செல்லமாக நடக்கும்
சின்ன மணி வாத்து

21. மொட்ட மண்ட ரேடியோ
கொட்டடிக்க வாரியா
நான் வரல சாமி
நரி பிடிக்கப் போறேன்

22. ஓட்டப்பல்லு சங்கரா
ஒரு வீட்டுக்கும் போகாத
அப்பளம் வாங்கித் திங்காத
அடிபட்டு சாகாத.

23. அடிச்சுக்கோ புடிச்சுக்கோ
அத்த மகனக் கட்டிக்கோ.

24. இராமா இராமா மணியடி
இராம கிருஷ்ணா மணியடி

சீதா சீதா மணியடி
சீக்கிரமா மணியடி
டிங் டிங் டிங்.

25. தாத்தா தாத்தா தண்ணிக்குள்ள
தவளை ரெண்டும் பொந்துக்குள்ள
நேத்து வந்த குட்டச்சி
மாமரத்தை வெட்டி
மச்சு வீடு கட்டி
பனியாரம் சுட்டு
பானைக்குள்ள வச்சு
சண்டாளப் பாதகத்தி
சண்டை இழுத்து விட்டாளாம்.

26. மொட்டையும் மொட்டையும் சேந்துச்சாம்
முருங்க மரத்துல ஏறுச்சாம்
கட்ட எறும்பு கடிச்சுதாம்
காள் காள்னு கத்துச்சாம்

27. ஓட்டப் பல்லு சங்கரா
ஒரு வீட்டுக்கும் போகாத
அப்பளம் வாங்கித்திங்காத
அடிபட்டு சாகாத

28. நாக்க நீட்டாத
வாக்கப் படாத
குதுலுக்குள்ள கிடந்துக்கிட்டு
குட்டி போடாத

29. பட்டம் பறக்குது
பள்ளிக்கூடம் திறக்குது
கோனார் வீட்ல
கொய்யாப் பழம் தொங்குது.

30. தொந்தி மாமா வந்தாராம்
தொப்பிய கழத்தி போட்டாராம்
சாக்குப்பைய எடுத்தாராம்
சந்தக் கடைக்குப் போனாராம்
சறுக்கி சறுக்கி நடந்தாராம்
சறுக்கி கீழே விழுந்தாராம்

31. சிட்டுக்குருவி சிட்டுக்குருவி
சேட்டை பண்ணாதே
அறுத்துக் கிடாத
மஞ்சப் பொடி மேல இறுக்கு
பூசிக் கிடாத
ஐயர் வந்தாராம்
ஆட்டம் போட்டாராம்
பன்னிக்களியை எடுத்து
பந்து அடிச்சாராம்

31. தோசையம்மா தோசை
அம்மா சுட்ட தோசை
அரிசி மாவும் உளுந்தமாவும்
அரைச்சு சுட்ட தோசை
பாப்பாவுக்கு ஒன்னு
ஆக மொத்தம் பத்து
திங்க திங்க ஆசை
திருப்பிக் கேட்டால் பூசை

32. பரங்கிக் காயைப் பறித்து
பட்டையெல்லாம் சீவி
பொடி பொடியாய் நறுக்கி
உப்புக் காரம் போட்டு
எண்ணெய் விட்டுத் தாளிச்சு
இன்பமாகத் தின்போம்

33. அதோ பாரு காக்கா
கடையில விக்குது சீக்கா
பொண்ணு வாரா சோக்கா
எழுந்து போடா மூக்கா

34. சூருகுத்தி சுப்பாளயம்
மாருக்கண்ணு மத்தாளயம்
சிச்சிக்கோ!

35. அழுத பிள்ளை சிரிச்சுதாம்
கழுத பாலக் குடிச்சுதாம்

36. தலைவாணி
உங்கப்பன் களவாணி

37. ஜனகன் மனகதி
கீழ விழுந்தா என்ன கதி

38. நீராடும் கடலுடுத்த
நீயெனக்கு என்ன கொடுத்த

39. ஓடுகிற நரியில ஒருநரி சிறுநரி
சிறுநரி முதுகுல ஒருபிடி நரைமயிர

40. கடலையில் ஒருவாள் உருளுது
பெறளுது தத்தளிக்கத் தாளம் போடுது

41. எட்டெட்டும பதினாறு
ஒங்கப்பன் கோனாரு

42. வெயிலு மழை பெய்து
காக்காவுக்கும் நரிக்கும் கல்யாணம்

43. காக்காவுக்கும் காக்காவுக்கும் கல்யாணம்
கருத்தப் பட்டியில மஞ்சனம்
அள்ளித் தெளி சந்தனம்
அழகு போல மாப்பிள்ளை
கொட்டுக்காரன் சப்பட்டை
குழல்காரன் வீரப்பா
எங்க மச்சான் விருந்தாளி
எல்லாரும் வந்து பாருங்க

44. வெத்தலடி வெத்தல
வெள்ளாங்குடி வெத்தல
பறிக்கப் போன இடத்தில
பிடிச்சு வைச்சு மொத்துனான்

45. குத்தடி குத்தடி சைலக்கா
குனிஞ்சி குத்தடி சைலக்கா
பந்தலிலே பாவக்கா
தொங்குதடி டோலாக்கு
பையன் வர்றான் பாத்துக்கோ
பணங் கொடுத்தா வாங்கிக்கோ
சில்லறையை மாத்திக்கோ
சிலுக்குப் பையிலே போட்டுக்கோ
சில்சில்னு ஆடிக்கோ

46. பச்ச மிளாகாய் காயுது
பன்னெண்டு மணி ஆகுது
டீச்சர் வந்தாங்க
டியூப்லைட் போட்டாங்க
சாரு வந்தாரு
சாக்லேட் தந்தாரு!
இன்ஸ்பெக்டர் வந்தாரு
இழுத்துப் போட்டு அடிச்சாரு!

47. கோனாரையா கோனாரு
கொளத்துக்குப் போனாரு
நண்டப் பிடிச்சாரு
நாழிக்குள்ள போட்டாரு
சுட்டுத் தின்னாரு
சுருங்கிப் போனாரு
வேப்ப மரத்தில ஏறினாரு
வேரு தட்டி விழுந்தாரு
புளிய மரத்தில ஏறினாரு
புல்லு தட்டி விழுந்தாரு

48. பொண்ணு வருது பொண்ணு வருது
பொட்டு வண்டியில
மாப்பிள்ள வருது, மாப்பிள்ள வருது
மாட்டு வண்டியில
பொண்ணப் பெத்த ஆத்தா வாரா
ஓட்டை வண்டியில
மாப்பிள்ளையைப் பெத்த ஆத்தா வாரா
வண்டியில

49. பனமரமே பனமரமே
பச்ச கண்ணாடி
பல்லில்லாத கிழவனுக்கு
ரெண்டு பொண்டாட்டி.

50. டப்பா டப்பா வீரப்பா
எப்ப கல்யாணம்
மாசி பொறக்கட்டும்
மல்லிகப்பூ பூக்கட்டும்
கொளத்தல் கொக்கு
கோழிப்பிய நக்கு
எம் ஜி.ஆர் சண்ட
பார்வதி கொண்ட

51. தம்பி, தம்பி
எந்த ஊரு?
மயிலாப்பூர்
என்ன மயில்?
காட்டு மயில்
என்ன காடு?
ஆற்காடு
என்ன ஆறு?
பாலாறு
என்ன பால்?
கள்ளிப் பால்
என்ன கள்ளி?
இலைக் கள்ளி
என்ன இலை?
மாவிலை!
என்னமா?
அம்மா.

52. கேள்வி : கோபாலா!
பதில் : ஏன் சார்
கேள்வி : எங்க போற?
பதில் : கடைக்குப் போறேன்
கேள்வி : என்ன வாங்க?
பதில் : ரப்பர் வாங்க
கேள்வி : என்ன ரப்பர்?
பதில் : இந்தியா ரப்பர்
கேள்வி : என்ன இந்தியா?
பதில் : வட இந்தியா
கேள்வி : என்ன வட?
பதில் : ஆம வட
கேள்வி : என்ன ஆம்?
பதில் : குளத்தாம
கேள்வி : என்ன குளம்?

பதில் : திரிகுளம்

கேன்வி : என்ன திரி?

பதில் : விளக்குத் திரி

கேள்வி : என்ன விளக்கு?

பதில் : குத்து விளக்கு

கேள்வி : என்ன குத்து?

பதில் : டிஷ்யும் குத்து.

53. இதாரு கொம்பு?
ஐயன் கொம்பு!
ஐயன எங்க?
பூப்பறிக்க
பூ எங்க?
தண்ணியில கிடக்கு
தண்ணிய எங்க?
ஆடு மாடு குடிச்சிருச்சு
ஆடு மாடு எங்க?
கள்ளன் கொண்டு போயிட்டான்!
கள்ளன எங்க?
மரத்தில இருக்கான்!
கள்ளன வெட்டவா
குத்தவா?
வெண்ணித் தண்ணி
ஊத்தவா?

54. சாம்பலெடு சாம்பலெடு
பெருக்கு பெருக்கு
மெழுகு மெழுகு
கோலம் போடு கோலம் போடு
தீமுட்டுங்க தீமூட்டுங்க
தோசக்கல்ல போடுங்க
தோசக்கல்ல போடுங்க
எண்ண தடவுங்க

சுரீர் !

மாவூத்துங்க !

சுரீர்!

வெந்துட்டா வேகலியா?

வெந்துட்டா வேகலியா?

வெந்துட்டு!

பல் தேய்ச்சிட்டு வரேன்

பார்த்துக்கோங்க ( தலைவி பல் தேய்க்கச் செல்லல்)

தலைவர் : தோசைய யாரு தின்னா

குழு : திருடன் தின்னுட்டப் போயிட்டான்

தலைவர் : திருடன எங்க

குழு : மரத்து மேல

தலைவர் : மரத்த எங்க?

குழு : வெட்டியாச்சு

தலைவி : வெட்ன துண்டெங்க?

குழு : விறகாயிருச்சு

தலைவி : விறகு எங்க?

குழு : தீ எரிச்சாச்சு

தலைவி : தீ எங்க?

குழு : சாம்பலாயிருச்சு!

தலைவி : சாம்பல் எங்க?

குழு : பல் தேய்சாச்சு

தலைவி : பல் எங்க?

குழு : ஈஈஈ.. (பல்லைக் காண்பிப்பர்)

55. ஈச்சி எலுமிச்சி

மூச்சு விட்டா போச்சி

56. கபடி கபடி.

காலுக்கு ரெண்டடி

துவரப் பருப்படி.

தொட்டு தொட்டு நக்கடி.

57\. சிறுவன் : குலை குலையா முந்திரிக்கா
குழு : நரிய நரிய சுத்திவா
சிறுவன் : கொள்ளை அடிச்சவன் எங்கிருக்கான்
குழு : கூட்டத்தில் இருக்கான் கண்டுபிடி
சிறுவன் : அம்மா... வாசை
குழு : அடுப்பில தோசை
சிறுவன் : பச்சரிசிய தின்பேன்
குழு : பல்லை உடைப்பேன்
சிறுவன் : ஓட்டு மேல ஏறுவேன்
குழு : ஈட்டிய வைச்சு குத்துவேன்
சிறுவன் : கப்பலடி கப்பல்
குழு : தூத்துக்குடிக் கப்பல்
சிறுவன் : குலையா குலையா முந்திரிக்கா
குழு : நரிய நரிய சத்தி வா

58\. தத்தைக்கா புத்தைக்கா
தவளச் சோறு
எட்டு எருமை
பன்னி பாலு
பறையன் வந்து நீராட
பறையன் வந்து நெல்லு குத்த
கூப்பிடுங்க கொல போடுங்க
குறத்தி மவா கை எடுங்க

59\. மாதுளம்பழமே மாதுளம்பழமே
மெல்ல வந்து முள்ளிப்போ
மாதுளம்பழமே மாதுளம்பழமே
மெல்ல வந்து முள்ளிப்போ
தலையை வெட்டி நாய்க்குப் போடு
சிரிக்காதே சிரிக்காதே
காலாட்டம் கையாட்டம்
கடவுளுக்குப் பொதுவாட்டம்

60. அஸ்கா புஸ்கா டாங்கு டக்கனா
கொக்கு நக்கனா கொய்யா
61.ஒன்னு கமலக்கா கண்ணு
ரெண்டு ரோசாப்பூச் செண்டு

61. மூணு முருங்கப்பட்ட தோலு
நாலு நாய்க்குட்டி வாலு
அஞ்சு அவரைக்காப் பிஞ்சு
ஆறு அறுவாமனை காலு
ஏழு ஏஞ்சொல்ல கேளு
எட்டு டமடம் கொட்டு
ஒன்பது ஓலப்பாயச் சுருட்டு
பத்து பச்சரிசிய குத்து
பாளையத்து ராசாவுக்கு
விடிய விடிய கல்யாணம்
விடிஞ்சு பாத்தா
பூம் லை

62. சிறுவர்கள் : பாட்டி பாட்டி என்ன தேடுத?
பாட்டி : ஊசி
சிறுவன் : ஊசி எதுக்கு?
பாட்டி : பை தைக்க
சிறுவன் : பை எதுக்கு?
பாட்டி : துட்டுப் போட
சிறுவன் : துட்டு எதுக்கு?
பாட்டி : அருவா வாங்க
சிறுவன் : அருவா எதுக்கு?
பாட்டி : உங்கள வெட்ட

63. குடுகுடு ராசா
குண்டமணி ராசா
காது ராசா

காத்தப்பிடி ராசா
குடுகுடு ராசா
குண்டமணி ராசா
காது ராசா
காத்தவிடு ராசா

64. தார் தார் வாழைக்கா
தாமரப்பூ வாழைக்கா
பூம்பூம் நல்லெண்ண
பூமா தேவி கையெடு!

65. மாரி மாரி ஒண்ணு
கம்பு ரெண்டு
சோளப்பொறி மூணு
செங்கோட்ட நாலு
தேர் அஞ்சு
திருக்காங்குடி ஆறு
மலர் ஏழு
பட்டு எட்டு
கிண்ணி ஒன்பது
கிடாரி பத்து
அப்பளம் அப்பளம்
ஒரு கட்ட

66. பச்ச தவக்கா பளபளங்க
பன்னீர் மச்சான் மினுமினுங்க
செங்கழனி செவத்தபுள்ள
ஆடுகட்டி ஓடிவா!
கிண்ணி வந்தா கிணுக்குப்புள்ள
கிட்டே வந்தா ஓடிப்போ
அருளுக் குச்சிக்கு தாலிகட்டி
சிங்காரத்திற்கு மேளம் போட்டு
சின்னாத்தூ ஓடிப்போ !

67. கண்ணாம் பொத்தி
கடைக்கலாம் பொத்தி
ஒரு முட்டய தின்னுட்டு
இரு முட்டய கொண்டோடி வா

68. குன்னாங் குன்னாங்
காத்துக்குள்ள
குரூட்டு பாம்பு
செத்துக் கிடக்கு
ஆடுவியா ஆடமாட்டியா
கூர்ரா.

69. கொண்டையம்மா கொண்டையம்மா
எங்கடி போன?
தண்ணிக்குப் போனேன்
தவளையைப் பார்த்தேன்
ஒத்த ரூபாய் கிடந்துச்சு
கோயிலுக்குப் போட்டேன்
மதுரைக்குப் போனேன்
மல்லிகப்பூ வாங்கினேன்
வெள்ளக்காரன் வந்தான்
வெட்கப்பட்டு நின்னேன்
கொட்டுக்காரன் வந்தான்
கூட்டிக்கிட்டுப் போனான்

70. மாது மாது ஒன்னாம் தம்பி
கோது கோது கொழுந்து வெத்தல
ஒன்னுக்கு ரெண்டா சொல்லிக் கொடுத்தான்
டாயக்கோ டமுக்கோ

71. பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்

யானை மேலே ஊர்கோலமாம்
ஒட்டகச்சிவிங்கி நாட்டியமாம்
கொர் கொர் குரங்கு பின் பாட்டாம்
தடபுடலான சாப்பாடாம்
தாலி கட்டும் வேளையிலே
மாப்பிள்ளை பூனையைக் காணலயாம்
சந்தடி புந்தடிச் செய்யாமல்
சமையல்கட்டில் நுழைந்ததாம்
வாங்கி வச்ச பாலையெல்லாம்
ஒரே மூச்சில் குடித்தாம்
பார்த்து விட்ட பெண்ணின் தாயும்
பலத்த சத்தம் போட்டதாம்
திருட்டு மாப்பிள்ளைக்கு என்
பெண்ணைத் திருமணம் செய்ய முடியாது
வேண்டாம் இந்த சம்பந்தம்
வெட்கக்கேடு போய் வாரோம்.

72. பாவக்கா பாவக்கா
பச்சை பச்சை பாவக்கா
பாலூத்தி பொறி பொறிக்க
பாவி அண்ணன் பாவக்கா
நெய்யூத்தி பொறி பொறிக்க
நீலி அண்ணன் பாவக்கா

73. பாம் பாம் மோட்டார்
பம்படிக்கிற மோட்டார்
நாலு சக்கர மோட்டார்
நாங்கள் ஏறும் மோட்டார்

74. ஓரிரு உலகெல்லாம் சூரியன்
சூரியன் தங்கச்சி
சுந்தர வல்லிக்கு
நாளை கழிச்சிக்கு

மாயக் கல்யாணம்
ஈரா எழுதிக்கோ
என் பேரை சொல்லிக்கோ
முக்குட்டு தக்குட்டு
முருங்கைப் பதினெட்டு
நான்கன்னம் தங்கிவா
நாகம் படர்ந்து வா
ஜவாழைப்பூ தும்பப்பூ
ஆசை அரும்பும்பூ
ஆறே அரும்பிக்கோ
ஆறுமுகனை நம்பிக்கோ
ஏழே எழுதிக்கோ
எம் பேரை சொல்லிக்கோ!

75. கடலை மிட்டாய் பொட்டணமாம்
நான்கு பேருக்குக் காணுமாம்
திங்க
நீங்க
இங்க
வாங்க!
எப்படியாம் ?
அப்படித்தான்

76. மழை பெய்யுது மழைபெய்யுது
குடையைப் பிடிங்க
மாமனார் வாரார் காபி ஆத்துங்க
முக்காப்பிடி அரிசி போட்டு
முறுக்குச் சுடுங்க
தேடி வந்த மாமனுக்கு
எடுத்து வையுங்க
சும்மா வற்ற மாமனுக்கு
சூடு போடுங்க

77. அதோ பார் மைனா

ஆஸ்பத்திரி கொய்னா

உங்கப்பா நைனா

நான் போறேன் சைனா

78. சாரே சாரே சாம்பாரு

சாருண்ட வீட்ல கல்யாணம்

கோழித் தீட்டம் சம்மந்தி

ஆனைத் தீட்டம் சோறு.

79. சடுகுடு மலையில

ரெண்டானை

தவறி விழுந்தது

கிழட்டானை

80. ஏபிசிடி

உங்கப்பன் தாடி.

வந்தா வாடி.

வராட்டா போடி.

81. ஓநாய் : என்னாட்ட காணோம்

ஆடு : தேடித் தேடிப் பிடிச்சிக்கோ

ஓநாய் : அடுப்பு மேல ஏறுவேன்

ஆடு : துடுப்பு கொண்டு சாத்துவேன்

ஓநாய் : நெல்ல கொறிப்பேன்

ஆடு : பல்ல உடைப்பேன்

ஓநாய் : வடி தண்ணி கொட்டிக் கிடக்கு

ஆடு : வாரிக் குடிச்சிக்கோ

ஓநாய் : கோட்ட மேல ஏறுவேன்

ஆடு : கொள்ளி கொண்டு சாத்துவேன்

82. மலையிலே தீப்பிடிக்குது

பிள்ளைகளே ஓடிவாங்க

மலையிலே தீப்பிடிக்குது
பிள்ளைகளே ஓடிவாங்க

83. ஒரு குடம் தண்ணியெடுத்து
ஒரு பூ பூத்ததாம்!
இரண்டு குடம் தண்ணியெடுத்து
இரண்டு பூப் பூத்ததாம்!
(இவ்வாறு பத்து வரைக்கும் பாடுவர். பின் இறுதியில் ஒருவரைப் பிடித்து வைத்துக் கொண்டு)
இம்புட்டு பணம் தாரேன்
விடுடா துலுக்கா
விடமாட்டேன் பலுக்கா

84. பூனைக்கும் பூனைக்கும் கல்யாணம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டம்!
யானை மீது ஊர்வலமாம்!
ஓட்டகச் சிவிங்கி நாட்டியமாம்!
மேல தாள வாத்தியமாம்
வந்திருந்த கும்பலுக்குச் சோறு
மட்டும் பத்தலையாம்!

85. அக்கக்கா சினுக்குவளி
ஆவுடையக்கா சினுக்குவளி

86. தைத் தக்காத் தை
அரைப்படி நெய்
வெள்ளக்காரன் கப்பலிலே
தீயக்கொளுத்தி வை!

87. சுண்டெலி ராஜாவுக்கு கல்யாணமாம்..
ஓரெலி ஓடிவந்து ஊரெல்லாம் சொல்லிச்சாம்!
இரண்டெலி ஓடிவந்து இரட்டைக் குழல் ஊதூச்சாம்!
மூன்றெலி ஓடிவந்து முக்காலி போட்டுச்சாம்!

நாலெலி ஓடிவந்து நாதஸ்வரம் வாசிச்சதாம்!
ஐந்தெலி ஓடிவந்து அலங்காரம் செய்துச்சாம்!
ஆறெலி ஓடி வந்து ஆடிப்பாடிக் குதிச்சுதாம்
ஏலெலி ஓடிவந்து
எட்டெலி ஓடிவந்து எட்டிஎட்டிப் பார்த்ததாம்
ஒன்பதெலி ஓடிவந்து ஓலப்பாய விரிச்சுதாம்
பத்தெலி ஓடிவந்து பந்திவிசாரிக்க நின்னுச்சாம்!
அங்கே ஒரு பூனை வர
அனைத்தெலியும் ஓடிப்போயீ
பனைக்குள்ள பதுங்குச்சாம்!

88. முதல் அணி : பூப்பறிக்க வருகிறோம்,
பூப்பறிக்க வருகிறோம்.
இரண்டாம் அணி : எந்தப் பூவப் பறிக்கிறீங்க?
எந்தப் பூவப் பறிக்கிறீங்க?
முதல் அணி : ரோஜாப் பூவைப் பறிக்கிறோம்.
ரோஜாப் பூவைப் பறிக்கிறோம்.
இரண்டாம் அணி : யார விட்டு அனுப்புறீங்க?
யார விட்டு அனுப்புறீங்க?
முதல் அணி : ராணியை விட்டு அனுப்புகிறோம்,
ராணியை விட்டு அனுப்புகிறோம்.
இரண்டாம் அணி : தேவியை விட்டு அனுப்புகிறோம்,
தேவியை விட்டு அனுப்புகிறோம்.

89. மாதுளம்பழமே மாதுளம்பழமே
மெல்ல வந்து முள்ளிப்போ
கொய்யாப் பழமே கொய்யாப் பழமே
மெல்ல வந்து முன்ளிப்போ
தலையை வெட்டி நாய்க்குப் போடு
சிரிக்காதே சிரிக்காதே
காலாட்டம் கையாட்டம்
கடவுளுக்குப் பொதுவாட்டம்

90. குழுவினர் : பாட்டி பாட்டி எங்க போற?

பாட்டி : விறகு பொறக்கப் போறேன்

குழுவினர் : விறகு எதுக்கு

பாட்டி : அடுப்பு எரிக்க

குழுவினர் : நாங்களும் வாரோம்.

பாட்டி : நெருஞ்சி குத்தும் செருப்பு இருக்கா?

குழுவினர் : இல்லை

பாட்டி : என் வீட்ல செருப்பு இருக்கு, அடுப்புல பால் வச்சிருக்கேன். கொட்டிறாம பாத்து எடுத்துட்டு வாங்க (குழந்தைகள் பாலைக் குடித்துவிட்டு)

குழுவினர் : பாட்டி பாட்டி பாலை பூனை குடிச்சிருச்சு

பாட்டி : "புடி புடி" (சிறுவர்களை விரட்டல்)

91. வெள்ளை வெள்ளை கொக்கே
வெள்ளாட்டங் கொக்கே
மாரியாத்தா கோயில்ல
மஞ்சத் தண்ணி ஊத்துறேன்
எனக்கொரு வெள்ள போடு

92. சங்சிலி புங்கிலி கதவத் திற
பிள்ளைகள்: நான் மாட்டேன் வேங்கப் புலி
புலி: ஆட்டுக் குட்டியைக் கண்டீங்களா?
பிள்ளைகள்: கண்டோம்
புலி: எங்கே?
பிள்ளைகள்: இங்கே
புலி: வரலாமா வரக்கூடாதா?
பிள்ளைகள்: வரக்கூடாது.

93. திரி திரி பம்பக்கா
தீயக்காழி பம்பக்கா
திருடன் வாரான்
ஒளிஞ்சுக்கோ ஒளிஞ்சுக்கோ...

94. இஞ்சிக்குத் தண்ணி ஊத்தினா
ஈச்சம்பழம் திங்கலாம்
வீச், வீச் டொமக்
வாழைக்குத் தண்ணி ஊத்தினா
வாழைப்பழம் திங்கலாம்
வீச், வீச் டொமக்
கொய்யாவுக்குத் தண்ணி ஊத்தினா
கொய்யாப்பழம் திங்கலாம்
வீச், வீச் டொமக்

95. ராசா மக சடங்காயிருக்கா
பூசணிக்காய் தாங்க!
பூசணிக்காய் இன்னும் விளையல
இன்னொரு நாளைக்கு வா
ராசா மகளுக்குக் கல்யாணம்
பூசணிக்காய் தாங்க!
பூசணி இப்ப தான் பூத்திருக்கு
இன்னொரு நாளைக்கு வா!
ராசா செத்துப் போயிட்டாரு
பூசணிக்காய் தாங்க
இந்தா பிடுங்கிட்டுப் போ!

96. தலைவர்: கோழி பற பற
குழு: பற பற
தலைவர்: கொக்கு பற பற
குழு: பற பற
தலைவர்: கோழி முட்டை பற பற
குழு: ஒன்றும் கூறாமல் இருப்பர்.
தலைவர்: மைனா பற பற
குழு: பற பற

97. கீ,கீ,ரோஜா
வெயிலுக்குள்ள நிக்காத

எந்திரி பாப்பா எந்திரி
கண்ணீரைத் தொட
இஷ்டமான பேரச் சொல்லு
தேவி!

98. அண்டா கொப்பரை
அடுத்தே மங்கலம்
துட்டுப் பெட்டி
பெட்டி திறக்க
அம்மம்மா கடல்
வீடு கட்டு மகள்

99. காயோ கடப்பங்காய்
காஞ்சிபுரத்துப் புளியங்காய்
உப்போ புளியங்காய்
ஊறுகாய் போட்ட நெல்லிக்காய்

100. கட்ட கட்ட
கருவேலங் கட்ட
வேலாங் கட்ட
வாரிக்கிட்டுப் போவான்.

**அழிப்பாங்கதை**

1. நீளமான வால் உண்டு
குரங்கும் இல்லை
அழகான சிறகு உண்டு
பறவையும் இல்லை அது என்ன?
பட்டம்

2. கிளையில்லாத மரத்தில்
கால் இல்லாதவன் ஏறுவான்
பேன்

3. தாய் பச்சை
அப்பா வெள்ளை
பிள்ளை சிவப்பு
வெத்தலை பாக்கு சுண்ணாம்பு

4. இரவிலே விழித்திருப்பான்
பகலிலே தூங்குவான்
ஆந்தை

5. சிவப்பு பைக்குள்
சில்லறை சிதறி கிடக்கு!
மிளகாய்வற்றல்

6. வளைந்து நெளிந்து செல்லுவான்
பாம்பும் இல்லை
நினைத்த இடத்திற்குக்
கொண்டு செல்லுவான்
மந்திரவாதியும் இல்லை! - அது என்ன?
இரயில்

7. வெட்டிக்கொள்வான் ஆனாலும்
ஒட்டிக்கொள்வான் - அவன் யார்?
கத்தரிக்கோல்

8. ஓடியாடி வேலை செய்தபின்
மூலையில் ஒதுங்கிக்கிடப்பாள் அவள் யார்?
துடைப்பம்

9. நான் பார்த்தால் அவன் பார்ப்பான்,
நான் சிரித்தால் அவன் சிரிப்பான்
நான் அழுதால் அவன் அழுவவான்
அவன் யார்?
கண்ணாடி

10. ஏற்றி வைத்து அணைத்தால்
எரியும் வரை மணக்கும் அது என்ன?
ஊதுபத்தி

11. ஓடுவான் சாடுவான்
ஓரத்தில் நிற்பான்
கதவு

12. விரல் இல்லாத கை
அது என்ன?
உலக்கை

13. நான்கு கால்கள் உள்ளவன்,
இரண்டு கைகள் உள்ளவன்,
உட்கார்ந்து கொண்டிருப்பான்,
உட்கார இடம் கொடுப்பான்
அவன் யார்?
நாற்காலி

14. ஊரெல்லாம் சுத்துவான்
வீட்டுக்குள் வரமாட்டான்
செருப்பு

15. கருப்பு சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன்
பூட்டு

16. படுத்துத் தூங்கினால் கண்முன் ஆடுவாள்
விழித்துப் பார்த்தால் மறைந்தே ஓடுவாள்
அது என்ன?
கனவு

17. வெள்ளை நிறத்துக்காரன்
கறுப்புத் தொப்பிக்காரன் - அது என்ன?
தீக்குச்சி

18. அஞ்சு வீட்டுக்கு ஒரு முற்றம் -அது என்ன?
உள்ளங்கை

19. கட்டிய சேலையை
அவிழ்க்க நினைத்தால்
கண்ணீரும் கம்பலையும்தான் அது என்ன?
வெங்காயம்

20. தனித்து உண்ணமுடியாது என்றாலும்
இது சேர்த்தால்தான் உணவுக்கு சுவை. அது என்ன?
உப்பு

21. வாயிலே தோன்றி
வாயிலே மறையும் பூ அது என்ன?
சிரிப்பு

22. எட்டுக்கால் ஊன்றி
இருகால் படமெடுக்க
வட்டக் குடைபிடித்து
வாறாராம் வன்னியப்பு அது என்ன?
சிலந்தி

23. ஏரியில் இல்லாத நீர்
தாகத்திற்கு உதவாத நீர்,
தண்ணீர் அல்ல அது என்ன?
கண்ணீர்

24. கண்ணீர் விட்டு
வெளிச்சம் தருவாள் அவள் யார்?
மெழுகுவர்த்தி

25. பற்கள் இருக்கும்
கடிக்கமாட்டான் - அவன் யார்?
சீப்பு

26. தட்டச் சீறும் -அது என்ன?
தீக்குச்சி

27. வயதான பலருக்கு
புதிதாக ஒரு கை - அது என்ன?
வழுக்கை

28. காற்றைக் குடித்து
காற்றில் பறப்பான் - அவன் யார்?
பலூன்

29. பகலெல்லாம் வெறுங்காடு
இரவெல்லாம் பூங்காடு - அது என்ன?
வானம்

30. மழை காலத்தில்
குடை பிடிப்பான் - அவன் யார் ?
காளான்

31. அடிக்காமல் திட்டாமல்
கண்ணீரை வரவழைப்பாள் - அவள் யார் ?
வெங்காயம்

32. கழற்றிய சட்டையை மறுபடியும்
போடமாட்டான் அவன் யார்?
பாம்பு

33. எட்டாத ராணி இரவில் வருவாள்.
பகலில் மறைவாள் - அவள் யார் ?
நிலா

34. வெள்ளை ஆளுக்கு
கறுப்புத் தலைப்பாகை - அது என்ன ?
தீக்குச்சி

35. நீரிலே விளைந்து
நீரிலே அழியுது - அது என்ன?
உப்பு

36. அத்துவான காட்டுக்குள்ளே
வெள்ளை வேட்டி காயுது - அது என்ன?
உப்பு

37. ஆயிரம் தச்சன் கட்டிய மண்டபம்
ஒருத்தன் கண்பட்டு உடைஞ்சு போச்சு - அது என்ன?
தேன்கூடு

38. ஒரு புட்டியில்
இரண்டு எண்ணெய் - அது என்ன?
முட்டை

39. கண்டு பூ பூக்கும்
காணாமல் காய் காய்க்கும் - அது என்ன?
கடலை

40. குயவன் பண்ணாத பாண்டம்
வண்ணான் வெளுக்காத வெள்ளை
மழை பெய்யாத தண்ணி அது என்ன?
தேங்காய்

41. ஏழு பேருக்கு

ஒரு குடுமி -அது என்ன?

பூண்டு

42. உழைக்க உழைக்க

உடம்பெல்லாம் தோன்றும் - அது என்ன?

வியர்வை

43. மழைக்காலப் பாட்டுக்காரன்,

துள்ளிக் குதித்து ஆடிடுவான்

கடைசியில் பாம்புக்கு இரையாவான் அவன் யார்?

துவளை

44. ஒரு கிணற்றில்

ஒரே தவளை - அது என்ன ?

நாக்கு

45. வால் உள்ள பையன்,

காற்றில் பறக்கிறான் - அது என்ன?

பட்டம்

46. கண்ணுக்குத் தெரியாதவன்

உயிருக்கு உகந்தவன் - அவன் யார் ?

காற்று

47. சுற்றுவது தெரியாது ஆனால்

சுற்றிக் கொண்டிருப்பான் - அவன் யார் ?

பூமி

48. வெள்ளை மாளிகையில்

மஞ்சள் புதையல் - அது என்ன ?

முட்டை

49. எல்லா வித்தையும் தெரிந்தவன்.

தெரியாதவன் போல் பாவனை செய்கிறான் - அவன் யார்?

கோமாளி

50. கிள்ளலாம் கிழிக்கலாம்

கிளிக்கூண்டில் அடைக்கலாம்

முட்டையிடும் சட்டை கழற்றும்

மூணுமாசம் அடைகிடக்கும்

நாக்கை நீட்டும் - அது என்ன?

பனங்கிழங்கு

# மாதிரி வினாத்தாள்

## பகுதி – அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1.** அழிப்பாங்கதை என்பது

அ) நாட்டுப்புற பாடல்கள் ஆ) சிறார் கதைகள்

இ) விடுகதை ஈ) சிறார் விளையாட்டு

**2.** கி.வா.ஜெகத்நாதனின் 52 சிறுவர் பாடல்களின் தொகுப்பு

அ) குழந்தை உலகம் ஆ) சிறுவர் பாடல்கள்

இ) ஏட்டில் எழுதாக் கவிதைகள் ஈ) நாட்டார் பாடல்கள்

**3.** சிறுவர் பாடல்களை வரும் குழந்தைகளை வளர்க்கின்ற 'சத்துள்ள உணவுகள்' என்றவர்

அ) தே. லூர்து ஆ) ஆறு அழகப்பன்

இ) சி. சத்திய சீலன் ஈ) தி.நடராசன்

**4.** சிறு குழந்தைகள் உண்ணும் பருவம்

அ) சாய்ந்தாடும்பருவம் ஆ) கைவீசும் வருவம்

இ) செங்கீரைப் பருவம் ஈ) பெதும்பை பருவம்

**5.** 'முக்கால சிறுதேர்' என்பது

அ) நடைவண்டி ஆ) சொப்புசாமான்

இ) வண்டியுருட்டுதல் ஈ) காற்றாடி பட்டம்

**6.** திரிதிரிப் பம்பக்கா என்னும் விளையாட்டு

அ) ஒருவர் விளையாடுவது ஆ) இருவர் விளையாடுவது

இ) மூவர் விளையாடுவது ஈ) குழுவாக விளையாடுவது

**7.** இவற்றில் ஒன்று குழுவிளையாட்டு அல்ல

ஆ) ஐயன் கொம்பு ஆ) கண்ணாமூச்சி

இ) சினுக்குவளி ஈ) கரகர வண்டி

**8.** "மனிதனின் முழுமையை நாட்டுப்புறப் பாடல்கள் செம்மையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன" என்றவர்

அ) சா.வளவன் ஆ) மீ.அ.மு. நாசில் அலி

இ) பி.சாம்பமூர்த்தி ஈ) சு. சண்முகசுந்தரம்

**9.** தொல்காப்பியர் ‘விடுகதை’ என்னும் சொல்லைக் குறிக்க ……… சொல்லை பயன்படுத்தியுள்ளார்.

அ) பிசி ஆ) நொடி

இ) அழிப்பாங்கதை ஈ) சிறுவர் பாடல்கள்

**10.** ஒவ்வொரு அடியிலும் இடம்பெறும் இறுதி சீர்களின் ஒலி ஒன்றுபட்டு அமைவது

எதுகை ஆ) மோனை

இ) ஒலி இயைபு ஈ) ஒலித்திரிபு

## பகுதி - ஆ

**ஒரு பக்க அளவில் விடை தருக.**

**11.** அ) நாட்டுப்புற வழக்காறுகள் வரைவிலக்கணம் தருக.

(அல்லது)

ஆ) இலக்கியங்களில் சிறுவர் பாடல்கள் குறிப்பு வரை.

(அல்லது)

**12.** அ) சிறுமியர் விளையாட்டுப் பாடல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) குழு விளையாட்டுப் பாடலினால் பெறும் நன்மைகள் யாவை?

**13.** அ) அழிப்பாங்கதை என்றால் என்ன?

(அல்லது)

ஆ) உணவுப் பொருள் குறித்த நாட்டுப்புற பாடல்களைக் கூறுக.

**14.** அ) நீர் வளத்தைக் குறித்த விடுகதையின் வழியாக பெறப்படும் செய்தி யாது?

(அல்லது)

ஆ) மனித உடலியல் குறித்த விடுகதைகள் ஐந்து எழுதுக.

**15.** அ) குழந்தை வழக்காறுகளில் ஒலி நயம் குறித்து தே.லூர்து அவர்களின் கருத்து யாது?

(அல்லது)

ஆ) ஒலி இயைபு அடிப்படையில் அமைந்த சில குழந்தைப் பாடல்களை எழுதுக.

## பகுதி - இ

**கட்டுரை வடிவில் விடை தருக.**

**16.** அ) சிறுவர் பாடல்கள் என்றால் என்ன? வகைகளை விவரி.

(அல்லது)

ஆ) சிறுவர் பொழுதுபோக்குப் பாடல்களின் வகைப்பாடுகளை பட்டியலிடுக.

**17.** அ) இருபாலர் விளையாட்டுப் பாடல்களின் வகைகளை கூறி விளக்குக.

(அல்லது)

ஆ) சிறுவர் விளையாட்டின் மூலம் சிறார்கள் பெறும் பயன்களை தொகுத்தெழுதுக.

**18.** அ) குடும்ப உறவுகள் குறித்த சிறுவர் பாடல்கள் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) சமூக பழக்க வழக்கங்கள் சிறார் வழக்காறுகளாக பதிவிடும் செய்திகளை கட்டுரைக்க.

**19.** அ) நாட்டுப்புறச் சிறார்களின் புவியல் அறிவை வெளிப்படுத்தும் சிறார் வழக்காறுகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) குழந்தைப் பாடல்கள் வழி – தாவரவியல் அறிவை நிரல்படுத்துக.

**20.** அ) மொழி நடையியல் குறித்து விவரிக்க.

(அல்லது)

ஆ) வட்டாரச் சொற்கள் அமைந்த சிறார் பாடல்கள் குறித்து தொகுத்தெழுதுக.